

கல்கி
Rajam
KALKI 6.9.1959
30 காசு


அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...

அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டி போல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணிக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்

தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.


செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

கல்கி

பொருளடக்கம்

செப்டம்பர் 6, 1959

"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 19 இதழ் 6

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

விகாரி௵ ஆவணிமீ 21௳

சீனாவின் ஆக்கிரமிப்பு

பிரதமர் ஜவாஹர்லால் நேரு பார்லிமெண்டில் சீன விவகாரம் பற்றிப் பேசிய பேச்சு நம் தேச மக்களுக்கெல்லாம் பெரும் ஆறுதலாகவும் திருப்தியாகவும் இருந்தது. சீனா அவமதித்தாலும் பொறுத்துக் கொண்டு போகக் கூடிய கொள்கையை நேருஜி கடைப்பிடிப்பதாக இல்லை என்பதை அறிந்து மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். "ஏதாகிலும் நேர்ந்தால் அதற்குத் தக்க பதில் அளிக்கத் தயாராக இருக்கிறோம். இந்திய மக்களே இதற்குத் துணிந்திருங்கள்!" என்று பொருள்பட நேருஜி பேசியது இந்திய மக்களுக்கு மட்டும் எச்சரிக்கையல்ல; சீன சர்க்காருக்கும் விடுத்த புத்திமதிதான்.

** ** ** **

சீனா சில ஆண்டுகளாகவே, அதிக்கிரமமான முறையில் நடந்து கொண்டு வந்திருக்கிறது. இந்தியப் பகுதிகளைச் சீனப் பகுதிகள் என்று காட்டும் தேசப் படங்களை வெளியிட்டு வந்திருக்கிறது. இதை ஆட்சேபித்து நேருஜி எழுதினால் அந்தத் தவற்றை உடனடியாகத் திருத்தவுமில்லை; தக்க பதிலுமில்லை.

நடுநிலைமை வகிக்கும் ஏழை திபேத் நாட்டினுள் புகுந்து திபேத்தின் தலைவர் தலாய் லாமாவையும் பல்லாயிரக்கணக்கான மக்களையும் வீடு வாசல் விட்டு இந்தியாவில் தஞ்சம் புகும்படியாக நடந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றிக் கேட்டாலும் தக்க பதில் இல்லை.

அதற்கு மேல் இந்திய எல்லைப் பகுதிகளிலுள்ள நமது காவல் நிலையங்களையும் நமது காவல் ராணுவத்தினரையும் சமீப காலத்தில் தாக்குவது அதிகரித்திருக்கிறது. நமது எல்லைக் காவல் நிலையத்தை அப்புறப்படுத்திவிட்டு, சீனத் துருப்புக்கள் இந்திய எல்லைக்குள் புகுந்தே முகாம் அடித்திருப்பதாக நேருஜி அறிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் இந்திய மக்களின் நெஞ்சங்களைக் குமுறச் செய்யும் செய்திகளாகும். உலகத்தில் சாந்தி நிலை பரவவேண்டும் என்றும் உலக நாடுகளின் பூசலில் நடுநிலைமை வகித்தே வரவேண்டும் என்றும் நேருஜியின் தலைமையின் கீழ் பாரத மக்கள் எண்ணி வந்த கருத்துக்கள் எல்லாம் மாற்றிவிடக் கூடிய நிகழ்ச்சிகளுக்குச் சீன அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது வியக்கத்தக்கது. இந்தியாவோடு இருந்து வந்த சிநேகப் பிணைப்பை அறுத்துவிடக் கூடிய நிகழ்ச்சிகளாகும். இதையெல்லாம் ருஷ்ய அரசாங்கமும் ஆட்சேபித்துத் தடுக்கும் என்றே நம்புகிறோம்.

இந்தியாவை மேற்கத்திய வல்லரசுகள் பக்கம் பலாத்காரமாகத் தள்ளும் காரியங்களுக்கு ருஷ்ய அரசாங்கம் சம்மதிக்காதென்றே நம்புகிறோம்.

** ** ** **

உலகில் ஒரு புது சகாப்தம் தோன்றக் கூடிய நல்ல சூழ்நிலை உருவாகி வருகிறது.

மேற்கத்திய வல்லரசுகளுக்கும், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் நல் உறவு ஏற்படக் கூடும் என்ற நம்பிக்கை அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. ஜனாதிபதி ஐஸன்ஹோவரும் ருஷ்யப் பிரதமர் குருஷேவும் சமீபத்தில் சந்திக்கப் போகிறார்கள் என்ற செய்தி கேட்டு நடுநிலைமை வகிக்கும் நாடுகளிடையேயும் உலக முழுதிலும் ஒரு புது குதூகலம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, ருஷ்யப் பிரதமரை நல்லெண்ணத்துடன்தான் வரவேற்கிறது என்பதைக் காட்டிக் கொள்ளும் வகையில், அணுகுண்டு, ஜலஜ குண்டு சோதனைகளை நிறுத்தியுள்ள கால அளவை இன்னும் சற்று நீடித்திருக்கிறது.


இப்படி உலகத்தின் மேற்குப் பகுதியில் புதிய சமாதானம் உதயமாவதற்குரிய அருணோதயம் காணும்போது, கிழக்கே சீனா நடந்து கொள்ளும் முறையானது மிகவும் அருவருக்கத் தக்கதாக இருக்கிறது. ருஷ்யாவும் அமெரிக்காவும் சமாதானமாகப் போய் விடக் கூடாது என்று கம்யூனிஸ்ட் சீனா வேலை செய்வது போலாகும். இப்படியெல்லாம் சீனாவிடம் அவநம்பிக்கை கொள்ளக்கூடிய வகையில் சீனா நடந்து கொள்வதை நிறுத்த ருஷ்யா முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். நேருஜி சீனாவிடம் நம்பிக்கை வைத்து, பஞ்சசீலக் கொள்கையில் கையெழுத்திட்டதும், 'ஹிந்தி சீனி பாய் பாய்' என்று சகோதர உறவு கொண்டாடியதும் வெறும் வெற்றுரை என்று மேற்கத்திய நாடுகள் எள்ளி நகையாடும்படியான செயல்கள் புரிவது சீனாவுக்கும் நல்லதல்ல; இந்தியாவுக்கும் நல்லதல்ல.

எது பணக்காரக் கட்சி?

சுதந்திரக் கட்சியானது பிராம்மணர்களுடைய கட்சி என்று பிரசாரம் செய்யும் பொறுப்பை திரு ஈ. வெ. ரா. அவர்களிடம் ஒப்புவித்து விட்டிருப்பதாகவும், பணக்காரக் கட்சி என்கிற பிரசாரத்தை காங்கிரஸ்காரர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் வதந்தி.


தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குப் பெரிய வியாபாரிகளும் கம்பெனிகளும் பணம் தந்து தேர்தல்களின்போது உதவி செய்ததை உலக மறியும். இந்த வருஷ திட்டத்தின்படி ரூ. 50,000 இந்தியா சிமிட்டிக் கம்பெனியார் 1957-ம் ஆண்டு இறுதியில் கொடுத்தார்கள். இது பற்றி, சில பங்குதாரர்கள் சென்னை நீதி மன்றத்தில் வழக்குப் போட்டதில், கம்பெனி டைரக்டர்கள் அப்படிக் கொடுத்ததில் குற்றமில்லை என்று தீர்ப்பாகி யிருக்கிறது. கம்பெனியின் சட்ட திட்டங்களில், கம்பெனியின் நலன்களை வளர்க்கவும் வியாபாரத்தைப் பெருக்கவும் அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்யலாம் என்று இருப்பதால் கம்பெனி

புறா கழுகாகிறது!



இந்திய எல்லைகளில் சீனா செய்யும் விஷமங்கள் உலக மக்களுக்குப் பெருங்கவலை யளித்துள்ளது.

போலீஸ் நூற்றாண்டு விழா



டைரக்டர்கள் பணம் கொடுத்ததில் குற்றமில்லை என்று நீதிபதி தீர்ப்பு சொல்லி விட்டார்!

ஆனால் இப்போது சர்ச்சைக்குரிய விஷயம், ரூபாய் ஐம்பதினாயிரத்தைப் பெற்றுக் கொண்டு சிமிட்டி கம்பெனியின் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் எப்படி உதவினார்கள்; இன்னும் எப்படி உதவப் போகிறார்கள் என்பதுதான். சர்க்காரைக் கொண்டுதானே உதவ முடியும்? இப்படி உதவுவதுதான் சோஷலிஸமா?

இப்படியொரு பெருந் தொகையைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சி, ஏழைகளின் கட்சியாகுமா? இத்தகைய கட்சியினர் சுதந்திரக் கட்சியைப் பணக்காரர்களின் கட்சி என்று பிரசாரம் செய்து வருகிறார்களே அதில் ஏதாவது உண்மையோ, நேர்மையோ இருக்கிறதா?

நீதிபதி மேற்கண்ட தீர்ப்பு அளித்ததற்கு கம்பெனியின் யதாஸ்தில், "தேசிய அல்லது மற்ற 'இன்ஸ்டிடியூஷன்'களுக்கு நிதி உதவி அளிக்கலாம்" என்று ஒரு விதியிருப்பது காரணம். தேர்தல்களில் அபேட்சகர்களை நிறுத்தி, தேர்தலுக்காகப் பணம் செலவு செய்யும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியை ஒரு தேசிய இன்ஸ்டிடியூஷனாக நீதிபதி கருதியிருக்கிறார்.

ஆனால் இன்ஸ்டிடியூஷன் என்றால் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், ஆஸ்பத்திரிகள் இவைகளைப் போன்றவைகளைத்தான் குறிக்கும் என்று சாதாரணமாக யாரும் எண்ணுவார்கள். அபேட்சகர்கள் போட்டியில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு உதவி செய்யும் அரசியல் கட்சிகளையல்ல என்பது யாருக்குமே தெரியும். எனினும் நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்திருக்கிறார். ஆயினும் நமது நோக்கம், நீதிபதியின் தீர்ப்பை விமர்சனம் செய்வதல்ல. நீதிபதியின் தீர்ப்பிலிருந்து வெளியாகிய அடிப்படை விஷயங்களைக் குறிக்கவே இதை எழுதினோம்.

சிமிட்டி கம்பெனிக்கு லாபம் வீடு கட்டுவோர் சிமிட்டி வாங்குவதிலிருந்து கிடைத்தது. ஆனால் வீடு கட்டுவோர், சிமிட்டிக்கு மட்டும் பணம் செலுத்தவில்லை; தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் செலுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு காங்கிரஸ் அபேட்சகர்களின் தேர்தல் செலவுகளுக்காக மறைமுகமாக வரி செலுத்தியிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது.

இப்படி இந்த ஒரு வர்த்தக ஸ்தாபனம் மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ ஸ்தாபனங்கள் காங்கிரஸின் தேர்தல் செலவுகளுக்கு நிதி செலுத்தியிருக்கின்றன என்பது வெளிப்படை. இந்த ஸ்தாபனங்கள் மற்றக் கட்சிகளுக்கும் சட்டப்படி உதவலாமே என்று கூறலாம். ஆனால் இன்று நமது கண்ட்ரோல்கள் வைத்து நடத்தும் சர்க்கார் காங்கிரஸ் சர்க்காராக இருப்பதால் மற்றக் கட்சிகளுக்கு இல்லாத சௌகரியம் அதற்கு உண்டு. வர்த்தக ஸ்தாபனங்கள் பயந்து ஆளும் கட்சிக்குத்தான் உதவுவார்கள்.

அரசியல் கட்சிகளுக்கு வழங்கினால் அத்தொகைகளையும் கட்சிகளையும் நாடறியப்

பிரகரித்து விடவேண்டும் என்று சொல்லப்படு கிறது. இதை மேல்வாரியாகப் பார்த்தால் நல்ல யோசனையாகக் கூடத் தோன்றும். ஆனால் ஆளும் கட்சிக்கு எதிராக வேலை செய்யும் கட்சிக்கு ஒரு வர்த்தக ஸ்தாபனம் நிதி உதவி பண்ணி, பகிரங்கப்படுத்தினால் அது பிழைக்க முடியுமா ?

ஜனநாயக ஆட்சி முறை தவறான முறைகளில் சென்றால் கொடுங்கோன்மையே விளையும் !

போலீஸ் நூற்றாண்டு விழா

சென்னை போலீஸ் இலாக்கா தோன்றி நூறு ஆண்டுகள் ஆகின்றன. அந்த நூற்றாண்டு நிறைவு வைபவத்தை இவ்வாரம் சென்னை மாகாணம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடு கிறார்கள்.

போலீஸ் என்றால் மேல் நாட்டு மக்கள் கொள்ளும் உணர்ச்சி வேறு; இந்நாட்டு மக்கள் கொள்ளும் உணர்ச்சி வேறு.

மேல் நாடுகளில் போலீஸார் என்றால் அவர் களைக் கண்டு பயந்து நடுங்க வேண்டும் என்று யாருமே எண்ணுவதில்லை. அவர்கள் பொது மக்களின் நண்பர்கள் என்றுதான் எண்ணு கிறார்கள். கிழவர்களோ, குழந்தைகளோ தெருவைக் குறுக்கே நடந்து கடக்க வேண்டி யிருந்தால், போலீஸ்காரர்கள் தாங்களாகவே வந்து அவர்களுக்கு உதவுகிறார்கள்.

நம் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத் தில் போலீஸை அதிகாரத்தின் சின்னமாக மக்கள் கருதினர். போலீஸ்காரர்கள் கூடத் தங்களை அப்படித்தான் கருதினார்கள். அதனாலே அவர்கள் எப்போதும் அதிகார தோரணையில் பேசுவார்கள்; நடந்து கொள் வார்கள். அதிலும் ஒத்துழையாமை காலத் தில் போலீஸ் தன் குண்டாந்தடியைப் பிர யோகிக்க நேர்ந்ததால் போலீஸ் என்றாலே ஒருவித அருவருப்பு பொதுமக்களிடத்தில் ஏற்பட்டிருந்தது.

ஆனால் சுதந்திர பாரதத்தில் போலீஸின் கடமைகளே வேறு. அதிகாரக் குரலில் பேச வேண்டியது போய் அன்புக் குரலில் பேச வேண்டியிருக்கிறது. தெருவில் வண்டிகள் போக்குவரத்தைச் சீர்படுத்தும் போலீஸ் காரர் ஒலிபெருக்கியில் 'ஏய் ரிக்ஷா' என்றும் முன்பு அடக்கி, ஒதுக்கிப் போன ரிக்ஷாக் காரர், இன்று 'என்ன ஐயா, மரியாதை இல் லாமே பேசுறே' என்று கேட்கும் காலம் இது.

இந்த மாறுபட்ட சூழ்நிலையில் நமது போலீஸ் இலாக்காவினர் எவ்வளவோ தங்களை மாற்றிக் கொண்டு நடந்து கொள்கின்றனர்.

முன்பிருந்ததை விட அவர்கள் பொறுப்புக் களும் வேலைகளும் அதிகரித்து விட்டன. அதற் குத் தக்கபடி சென்னை போலீஸ் இலாகாவினர் வளர்ந்தும் வருகின்றனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மோப்பம் பிடிக்கும் நாய்களை உபயோகப்படுத்தி வெற்றிகரமாகக் குற்ற வாளிகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இது சென்னை போலீஸ் இலாக்காவின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அங்கங்கே ஒரு சில குறைபாடுகள் காணக் கிடைக்கலாம். ஆனாலும் மொத்தத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் தங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் மற்ற இலாக்காக்களைவிட நன்றாகவே உணர்ந்து நடந்து கொள்வதற்கு அவர்களைப் பாராட்ட வேண்டும். பொது மக்களின் நண்பர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைய வேண்டும். போலீஸ் இலாக்கா இன்னும் பல சிறப்புக்கள் அடைந்து தமிழ்நாட்டுக்குப் பெயரும், புகழும் தேடித் தர வேண்டும் என்று வாழ்த்துவோமாக.

தமிழ்நாட்டில் சுதந்திரக் கட்சி

சுதந்திரக் கட்சி நாளுக்கு நாள் வளர்ந்து வருவது யாவரும் அறிந்ததே. பல ஊர்களில் தாங்களாகவே, கட்சிக் கிளைக் காரியாலயங் களும் கமிட்டிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளும் தலைமைக் காரியாலயமும் இணைந்த முறையில் செயல்பட, சென்னை மாகாண சுதந்திரக் கட்சித் தலைவர் திரு வேங்கடகிருஷ்ண ரெட்டியாரும், தாற்காலிக கமிட்டியின் அங்கத்தினர்களும் இம்மாதம் 2-ம் தேதி முதல் 16-ம் தேதி வரையில் தமிழ் ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள்.

அவர்கள் சுற்றுப் பிரயாண விவரம் :

செப்டம்பர் 2, 3-ம் தேதிகள் மதுரை; 4-ம் தேதி ராமநாதபுரம் (மதுரையிலேயே ராம நாதபுரம் அங்கத்தினர்களைச் சந்திப்பார்கள்) 7-ம் தேதி திருநெல்வேலி; 9-ம் தேதி திருச்சி; 10-ம் தேதி தஞ்சை; 15-ம் தேதி கோயமுத் தூர்; 16-ம் தேதி நீலகிரி என்று திட்டம் வகுத்துக் கொண்டு புறப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு சுதந்திரக் கட்சிக்குப் பொக்கிஷ தாரராக திரு எம். நாராயணசுவாமியும், திரு வி. கே. ராமசுவாமி முதலியார், பேராசிரியர் எம். ரத்தினசுவாமி, டாக்டர் எம். சந்தோஷம், திரு வி. கி. கப்பையா கவுண்டர், டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். எஸ். மாரிசாமி ஆகி யோர் தாற்காலிக கமிட்டி அங்கத்தினர்க ளாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட ஜில்லாக்கள் தவிர மற்ற ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் விவரம் விரைவில் அறிவிக்கப்படும். ஆங்காங்கு சுதந்திரக் கட்சியை நிர்மாணித்து வரும் முக்கியஸ்தர்கள் திரு வேங்கடகிருஷ்ண ரெட்டியார் அவர்களை அந்தந்தத் தேதியில் சந்தித்து எல்லாக் காரியங்களையும் துரிதமாக வும் செம்மையாகவும் நடத்த ஏற்பாடு செய்வார்கள்.

※ சுதந்திரக் கட்சி நாளுக்கு நாள் வளர்ந்து வந்தாலும், இன்றைய சூழ்நிலைக்கு சுதந்திரக் கட்சியைப் போன்றதோர் எதிர்க்கட்சி தேவைதான் என்று மக்கள் உணர்ந்தாலும், சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் என்ன, நமக்கு இப்போது ஏற்பட்டுள்ள எந்த எந்தக் குறைகளைத் தீர்க்க இக்கட்சி பாடுபடப் போகிறது என்றெல்லாம் அறிய பலரும் விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பத்தைக் கருதி அவ்வப் போது இப்பகுதியில் சுதந்திரக் கட்சியின் ஒவ்வொரு கொள்கையைப் பற்றியும், சுருக்கமாக விளக்கங்கள் தரப்படும்.

— ஆசிரியர்

விலைகளைக் குறைப்பது கட்சியின் கொள்கை

★

“சாதாரண மனிதன்” என்பவன் யார்? நான், நீங்கள் எதிர் வீட்டில் குடியிருப்பவர், பக்கத்துக் கடைக்காரன், கோடி வீட்டு குமாஸ்தா முதலியோர். அவர்கள் அனைவருக்கும் இன்று ஒரே கவலைதான். “நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டு போகிறதே, சம்பாதிப்பதெல்லாம் சாப்பாட்டுக்கே போதாது போலிருக்கிறதே” என்ற கவலை அவர்களை வாட்டுகிறது.

அக்காலத்தில் (அதாவது புராண காலத்தில் அல்ல, சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்) பத்து ரூபாய் வருமானம் உள்ளவர் கூட ஒரு ரூபாய் மிச்சம் வைப்பார். இப்பொழுது கடன் வாங்காமல் குடித்தனம் நடத்தினால் போதுமென்று நூற்றுக்கணக்கில் சம்பாதிப் பவர்கூட எண்ணுகிறார்கள்.

இந்த விலை ஏற்றம் எப்படி ஏற்பட்டது? ஏன் அதைத் தடுக்க அரசாங்கத்தால் முடியவில்லை?


நாம் பணத்தை அருந்துவதில்லை. பணத்தை வைத்துப் பண்டங் களை வாங்குகிறோம். பணம் அதிகரித்துப் பண்டங்கள் குறைந்தால் விலை ஏறுகிறது. பணம் குறைந்து பண்டங்கள் அதிகரித்தால் விலை இறங்குகிறது. ஆகவே, நல்ல அரசாங்கம் பண்டங்களை அதிகரிப் பதில் ஊக்கமுடன் வேலை செய்ய வேண்டும். ஆனால் இன்றைய அரசாங்கம் இறக்குமதியை அடியோடு குறைத்து விட்டது. இருபது, அல்லது முப்பது ஆண்டுகளுக்கு அப்பால் பலன் தரும் ஆலைகளில் கோடி கோடியாகப் பணச்செலவு செய்து வருகிறது. தனிமையில் வாழும் சிறு வியாபாரிக்கு விற்பனை செய்யச் சாமான்களே இல்லாமல் திண்டாட விட்டிருக்கிறது. என்றோ ஒருநாள் நாடு செழிக்குமாம். அது என்று வருமோ, நாம் அறியோம். ஆனால் கூலியைக் கொடுத்துப் பண நடமாட்டத்தை அதிகரித்தால் அந்தப் பணத்துக்கு இரை போட வேண்டாமா? பெரும்பான்மைப் பணம் சிறுபான்மை சாமான்களைத் துரத்திக்கொண்டு போகிறது. இதற்குப் பண்டிதர்கள் ‘இன்ப்லேஷன்’ என்ற பெயர் வைத்து அழைக்கிறார்கள்.

“வளரும் நாட்டில் அப்படித்தான் இருக்கும்” என்று சிலர் சமாதானமும் கூறுகிறார்கள். அதெல்லாம் பேதமை. ஆயிரம் ஆண்டின் வறுமையை, ஆலோசித்து, நிலைத்து நிற்கும் வழியில் நீக்க வேண்டும்; அவசரத் திட்டங்களும் திடீர் தீர்மானங்களும் தீமையைத்தான் தரும். சர்க்கார் செப்படி வித்தைக்காரனாக மாறி “இதோ பார் மாங்கனி” என்று ஜனங்களை ஏமாற்றுவது சரியல்ல.

ஆகவே ‘பண்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவனவனுக்கு ஊக்கமும் உற்சாகமும் வேண்டும். தான் படும் முயற்சிக்குத் தனக்குப் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை வேண்டும். நாளைக்கு என்ன நேருமோ என்று பயந்தவன் வேலையும் செய்ய மாட்டான், மிச்சமும் வைக்கமாட்டான். அதுதான் இன்றைய நிலை. இதை மாற்றி, எல்லா உற்பத்தித் தொழிலிலும் மக்களுக்கு ஊக்கம் வளரச் செய்ய வேண்டும். அப்பொழுது பண்டப்பெருக்கு உண்டாகும், விலைகள் குறையும் என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை.

★

Announcing



ஆம்கோ பாட்டரீஸ் ஸ்தாபனம் அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த கோல்டு - நேஷனல் பாட்டரீஸ் இன்கார்ப்பொரேட்டட் ஸ்தாபனத்துடன் தொழில் முறைக் கூட்டுறவு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஆம்கோ ஸ்தாபனத்திற்கு எல்லா வகைப்பட்ட ஸ்டோரேஜ் பாட்டரிகளையும் எந்தெந்த விதமாகத் தயாரிப்பது என்பது பற்றி தொழில் நுட்பங்கள் பூர்த்தியாகக் கிடைக்கும்.

கோல்டு - நேஷனல், உலகிலேயே மிகப்பெரிய மோட்டார் பாட்டரி தயாரிப்பு ஸ்தாபனமாகும். அவ்வப்பொழுது புதுப்பித்துக் கொள்ளக்கூடிய மோட்டார் பாட்டரிகளைத் தயாரிக்கும் 29 தொழிற்சாலைகளை இந்த ஸ்தாபனம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலுமுள்ள கேந்திர ஸ்தானங்களில் நடத்தி வருகிறது. இத்தொழிற்சாலைகளில் தயாராகும் பாட்டரிகள் மோட்டார் வண்டிகளுக்கும், ரயில்வேக்கள், டெலிபோன், தந்தி, ஆகாய விமானங்கள், ஆயுத சாலைகள், எறி வாணங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் இதர கடின வேலைகளுக்கும் தொழில் உபயோகங்களுக்கும் பயன்படுகின்றன. உலகிலேயே முதல் அணு விசை நீர்மூழ்கிக் கப்பலான " நாடிலஸ் "ஸுக்கும் பாட்டரி நிர்மாணிக்க கோல்டு ஸ்தாபனமே அழைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய புகழ்பெற்ற ஸ்தாபனத்துடன் தொழில் முறைக் கூட்டுறவு கிடைத்திருப்பதே இந்நாட்டில் பாட்டரித் தயாரிப்புத் தொழில் புரட்சிகரமாகச் சீர்திருத்தப்பட்டு, ஆம்கோ ஸ்தாபனம் உலகின் முன்னணி நாடுகளிலுள்ள பெரிய ஸ்தாபனங்களுக்கு இணையான அந்தஸ்து பெறுவதற்கு உத்தரவாதமளிக்கிறது.

AMCO ஆம்கோ பாட்டரிகள் 'நீடித்த சக்தியும் ஆயுளுமுள்ளவை'

ஆம்கோ பாட்டரீஸ் (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்

அஸீஸ் அளித்த யோசனை

கொழும்பு, ஆகஸ்டு 26உ.

ஜனாப் அஸீஸ் தலைமையிலுள்ள ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மூன்றாவது வருடாந்திர மகாநாடு இவ்வாரம் எதியாந்தோட்டையில் ஒரு தியாகியின் பெயரிடப்பட்ட ''அங்கப்ப நகரில்'' நடைபெற்றது. அதில் ஜனாப் அஸீஸ் தமது அக்கிராசனப் பிரசங்கத்தை நிகழ்த்தியபொழுது இலங்கையிலுள்ள இந்திய வம்சா வழியினர்களின் பிரச்னையைத் தீர்க்க சுலபமானதும் நீதி நேர்மைக்குப் பொருத்தமானதுமான ஒரு யோசனை கூறினார். இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்கத் தயாராயிருக்கும் இந்திய வம்சாவழியினர்களுக்கு அவர்கள் வேலையிலிருந்து ஓய்வுபெறும் வரை இந்நாட்டில் தொடர்ந்து வசிக்க விசா வழங்குவது. இந்தியாவுக்குக் கடைசியாக திரும்பும்போது ஒரு தொகை ரொக்கப் பணம் கொடுப்பது. ஆகியவை போன்ற சலுகைத் திட்டத்தை அரசாங்கம் விரைவில் தயாரித்து வெளியிடப் போவதாயும் ஏராளமானவர்கள் இந்தச் சலுகையை ஏற்றுக் கொண்டு இந்தியப் பிரஜைகளாகி விடுவார்களென்று எதிர்பார்ப்பதாயும் பிரதம மந்திரி பண்டாரநாயகா பார்லிமெண்டில் ஒரு சமயம் அறிவித்தார். இதை ஜனாப் அஸீஸ் சுட்டிக்காட்டி அந்தத் திட்டத்தை வரவேற்பதாகச் சொன்னார். இத் திட்டத்தின்படி மிக மிகச் சொற்ப தொழிலாளரே இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்று இந்தியாவுக்குத் திரும்பி விடச் சம்மதிப்பார்கள். காலவரையொன்றுடன் இத் திட்டத்தை அரசாங்கம் அமல் நடத்தட்டும். அதன் பிறகும் இலங்கையே தமது தாய்நாடு என்று உறுதியுடனிருப்பவர்களுக்கெல்லாம் நன்கு தடையின்றிப் பிரஜாவுரிமை வழங்கட்டும் என்று அவர் யோசனை கூறினார். இந்த யோசனையைத் தழுவிக் காங்கிரஸ் மகாநாடு ஒரு தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது. இமிகிரேஷன் சட்டம் அமலுக்கு வந்த சென்ற பன்னிரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகத் தோட்டத் தொழிலாளர் இலங்கையை விட்டு எக்காரணத்தை முன்னிட்டும் வெளியே செல்லாமலிருந்து இலங்கையே தங்களது தாய்நாடு என்பதைத் திட்டவட்டமாக ருசுப்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பரீட்சையில் அரசாங்கத்துக்குத் திருப்தியில்லையென்றும் அதன் சலுகைத் திட்டத்தை இன்னொரு பரீட்சையாகக் கால வரையறையுடன் உபயோகிக்கட்டும். அதன் பிறகும் இந்தியப் பிரஜாவுரிமையை மறுப்பவர்களுக்கு மறு பேச்சில்லாமல் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதுதான் நியாயம். ஆனால், இந்த நியாயத்தை ஏற்று நடக்கும் தைரியம் பண்டார நாயகா அரசாங்கத்துக்கு ஏற்படுமா என்பதுதான் இன்றையக் கேள்வி.

ஒற்றுமையின் அறிகுறி

நிற்க. ஜனாப் அஸீஸ் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் அறிவித்தார். தோட்டத் தொழிலாளரின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக காங்கிரஸ் விளங்கியபொழுது தொழிலாளரிடையில் அமைதியிருந்தது; ஆனந்தம் இருந்தது; இவைகளுக்கு மேலாக ஒற்றுமையிருந்தது. காங்கிரஸானது, என்று அஸீஸ் காங்கிரஸென்றும் தொண்டமான் காங்கிரஸென்றும் துண்டுபட்டதோ அன்று முதல் தோட்டங்களில் அமைதியில்லை. ஒற்றுமையில்லை. ஒரே குடும்பத்தில் போட்டிக் கட்சிகள். இந்த நிலைமையைச் சூறையாட மற்றும் பல யூனியன்கள் தொழிலாளரிடையில் தீவிரமான பிரசாரத்தை ஆரம்பித்து அவர்களை மேலும் மேலும் துண்டு போட்டன. இந்த அவலமான நிலைமை இனியும் நீடிக்காதென்பதற்கு உத்திரவாதமில்லை. இம்மாதிரியான சூழ்நிலையில் தமது காங்கிரஸுக்கும் தொண்டமான் காங்கிரஸுக்குமிடையில் தோன்றியிருந்த தப்பெண்ணங்களும் மனஸ்தாபங்களும் மறைந்து வருவதாக ஜனாப் அஸீஸ் தமது தலைமைப் பிரசங்கத்தில் அறிவித்தது மகிழ்ச்சி அளிக்கும் ஒரு நல்ல செய்தியாகக் கருதப்படுகிறது. இரு ஸ்தாபனங்களும் ஒரு பொதுவான அடிப்படையில் ஒத்துழைக்க முடியுமானால் அது தொழிலாளரிடையில் மட்டுமின்றி நாட்டிலும் ஒற்றுமையைப் பலப்படுத்துமென்று ஜனாப் அஸீஸ் கூறியதை நல்லெண்ணம் படைத்தவர்களெல்லோரும் வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை.

இது என்ன அநியாயம்?

இதே மகாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெரைரா என்பவர் பேசியபொழுது அரசாங்கத்தின் வருமானத்தில் எழுபது சதவிகிதத்துக்குக் காரணமாக இருப்பவர்கள் இந்தியர்கள்தான் என்றும்

வானொலியில் விநாயகர் அகவல்

சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தார் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு 6—9—59 அன்று ஒரு விசேஷ நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஔவைப் பாட்டி பாடி அருளிய விநாயகர் அகவலை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ராகமாலிகையில் பாடுகிறார். இந் நிகழ்ச்சியை 6-ம் தேதி காலை 7-30 மணிக்கு சென்னை ஏ. பி இரண்டு அலை வரிசைகளிலும் கேட்கலாம்.

நாட்டின் முதுகெலும்பைப் போலிருக்கும் மக்களுக்கு பிரஜாவுரிமை மறுக்கும் அநியாயம் உலகில் வேறு எங்கும் கேள்விப் பட்டிராத தென்றும் கூறிவிட்டு, "அரசாங்கம் பத்து வருடப் பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. அந்தத் திட்டம் வெற்றி பெறுவது கடும் உழைப்பாளிகளான இந்தியர்களின் கையில்தான் முற்றிலும் இருக்கிறது. அவர்களை உரிமையற்ற அரசியல் அடிமைகளாக வைத்திருக்கும் வரை பத்து வருடத் திட்டம் ஒருபோதும் உருப்படப் போவதில்லை அதைச் செயல்படுத்த முடியப் போவதுமில்லை" என்று டாக்டர் பெரைரா முழங்கினார். இரண்டு தினங்கள் வரையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் இந்தியப் பிரச்னை பலவற்றைப் பற்றியும் பேசப்பட்டன. காங்கிரஸின் அடுத்த வருடத் தலைமைப் பதவிக்கும் ஜனாப் அஸீஸ் மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தெய்வத்தின் சீற்றம்

பிரதி வருடமும் கண்டியில் நடைபெறும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரபல பெரஹரா (அதாவது ஊர்வலம்) இவ்வருடம் நடைபெற்றபொழுது ஒரு துக்ககரமான சம்பவம் நடைபெற்றது. பெரஹராவில் கலந்து கொண்டிருந்த ஒரு யானை திடீரென்று மதம் பிடித்து ஓடியதின் பயனாக சுமார் பதினேழு பேர்கள் கொல்லப்பட்டு நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயமடைந்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட மாவுத்தன் குடிவெறியிலிருந்ததாயும் கட்டுக்கடங்காத கூட்டமும் சப்தமும் தான் யானைக்கு மதம் பிடிக்கக் காரணமென்றும் கூறப்படுகிறது. சென்ற பல நூற்றாண்டுகளாக இந்தத் திருவிழா விடாமல் நடைபெற்று வருகிறது. எப்பொழுதும் ஆயிரக்கணக்கில் கூட்டம் கூடுவது வழக்கமாயிருந்தும் இவ்வருடம் மாத்திரம் யானை மதம் பிடித்து ஓடிப் பல உயிர்களை மாய்க்க வேண்டிய காரணம் அரசாங்கத்தின் அநீதியான காரியங்களில் தெய்வமே சீற்றமடைந்திருப்பதுதான் என்று பகிரங்கமாகக் கூறப்படுகிறது. கடவுளே பொறுமையை இழந்து விட்டதை இச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக மத பக்தியுள்ளவர்கள் கூறுகிறார்கள். பல லட்சம் மக்களை நாடற்ற நிலைமைக்கு உட்படுத்தி அரசியல் அனாதைகளாக்கியிருப்பதும் இரவோடு இரவாகத் தனிச் சிங்களச் சட்டத்தை இயற்றித் தமிழ் மொழியை நசுக்குவதும் கடவுளுக்கு நிச்சயம் சந்தோஷத்தைக் கொடுக்க முடியாது. தெய்வத்தின் கோபம் எந்தச் சமயம் எப்படி வெளிப்படுமென்பதை யார் கண்டார்கள்?

—ரஜனி

ஆகாச வெடி

"நாட்டில் ஒவ்வொரு பெண்ணுக்கும், பிள்ளைக்கும் ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும்." —மாஜி சேனாதிபதி கரியப்பா

"வருங்கால வீட்டுப் போராட்டங்களில் துப்பாக்கியைக் கரண்டிகளாக உபயோகிக்க முடியுமா?" என்று சந்தேகிக்கிறார் ஒரு கிரகஸ்தர்.

❋

மில் ஆடைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தும்படி கமிஷனர் உத்தரவு —தலைப்பு

கட்டுப்பாட்டைத் தளர்த்த ஒருவேளை நீளம் போதவில்லையா?

❋

பதவி ஏற்ற பின், சில தர்மகர்த்தாக்கள் ஏனோ கோவில் பக்கமே திரும்புவதில்லை.

—மந்திரி பக்தவத்ஸலம்

பதவி கிடைத்தால் ஒருமுறை கோவிலுக்கு வருவதாக அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டவர்களாயிருக்கவேண்டும்!

❋

அம்பாலா சர்க்கார் ஆஸ்பத்திரியில் வெள்ளம் புகுந்தது. —பஞ்சாப் செய்தி

"அது, மருந்து சீசாக்களில் புகுந்திருந்தால் லாபம்தானே?" என்று ஒரு நகரசபை ஆஸ்பத்திரியாளர் கூறுகிறார்.

"இந்திய ரயில் வண்டிகளின் சப்தத்தைக் குறைக்க ரயில்வே இலாகா முயன்று வருகிறது!" —லோக் சபையில்

"அது சரி, சத்தும் குறையுமா?" என்று கேட்கப்படுகிறது.

❋

மதுரை வந்த அமெரிக்க வர்த்தகக் கோஷ்டியினர் அழகிய விசிறிமடிப்பு அங்கவஸ்திரங்களைப் பார்த்து வியந்தனர். —செய்தி

இவை விசிறிக் கொள்வதற்காக ஏற்பட்டதல்ல என்பதைக் கேட்டால், அவர்கள் இன்னும் வியப்படைவார்கள்.

❋

"கேரளக் கிளர்ச்சியின்போது பல இரவுகள், தூக்கமில்லாமல் கஷ்டப்பட்டேன்."

—கவர்னர் ராமகிருஷ்ணராவ்

இப்படி, விழிப்புடன் நிலைமையைக் கவனித்து வந்தது நல்லதுதானே?

❋

"உங்களுக்கு அதிக வரி போட்டாலும் போடுவேனே தவிர அதிக நேரம் பேசி கஷ்டப்படுத்தமாட்டேன்." —கூனூரில், தோட்ட முதலாளிகள் முன் திரு மொரார்ஜி தேசாய்

"கொஞ்ச நேரம்தானே பேசினேன், என்ன பலன் அளித்தீர்கள்?" என்று அவர் பிற்பாடு கஷ்டப்படுத்தமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

கிழவியும் காதமும்



கி. வா. ஜகந்நாதன்

எந்தக் காரியம் செய்தாலும் செய்யா விட்டாலும் விநாயகனைப் பூசித்து வழிபடுவதை மறக்கமாட்டாள் பாட்டி; தமிழ்ப் பாட்டியாகிய ஔவையைத்தான் சொல்கிறேன். தமிழ் தளரா நாவும் அன்பு தளரா உள்ளமும் உடைய அந்தப் பெருமாட்டி,

" பாலும் தெளிதேனும்
பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு
நான்தருவேன்; — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே, நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும்
தா "

என்று விநாயகப் பெருமானை வேண்டித் தமிழ்ப் புலமை பெற்றவள் அல்லவா?

இன்று சுந்தரமூர்த்தி நாயனார், இறைவன் ஆணையும் ஆணையும் அனுப்பத் திருக் கைலை போகிறார். அவரைத் தொடர்ந்து பரியின் மேல் பரிவுடன் சேரமான் பெருமாள் நாயனாரும் போகிறார். சேரனுடன் தமிழ்ச் சுவையை அளவளாவிப் பருகும் ஔவைக்கு இச் செய்தி தெரிந்தது. 'எத்தனை காலம் இந்த மண்ணுலகில் வாழ்வது! நாமும் கைலை செல்வோம்' என்ற எண்ணம் வந்தது.

மனத்தினை அடக்கமாட்டாமல் அதன் போக்கிலே செல்பவர்களுக்கு மரணம் வரும் காலம் இன்னதென்று தெரியாது. இறைவனிடம் பேரன்பு கொண்டு அவன் அருளால் மனத்தை வசப்படுத்தியவர்களுக்கு மரணம் வருங்காலம் முன்பே தெரியும். தவத்திலும் யோகத்திலும் முதிர்ந்தவர்களுக்கோ, தாம் வேண்டும் போது பூவுலக வாழ்வை நீத்து விட முடியும்.

பழுத்த பழமாகிய ஔவை, நெடு வழிக்கு நல்ல துணை அமைந்திருக்கிறது என்று எண்ணிச் சேர மன்னருடன் கைலை செல்ல எண்ணினாள். விநாயக பூசை செய்யும் நேரம் அது. தான் நினைத்த காரியம் முட்டின்றி முடிய வேண்டுமென்று பூசையைப் புரியத் தொடங்கினாள். கைலை போகும் வேகம் உந்தியது. பூசையும் வேகமாக நடந்தது.

அப்போது ஒரு குரல் கேட்டது: " ஏன் இத்தனை விரைவு? அமைதியாகப் பூசை செய். உன் விருப்பம் நிறைவேறும் " என்று ஔவையின் காதில் விழுந்தது. சுற்று முற்றும் பார்த்தாள்; யாரும் இல்லை. விநாயகப் பெருமானே இவ்வாறு அருளினான் என்று உணர்ந்து, அமைதியாகவே பூசையைத் தொடர்ந்து செய்தாள்.

பூசை முறைப்படி நிறைவேறியது. பாட்டிக்குத் திருப்தி பிறக்கவில்லை. 'நம் விருப்பத்தை நிறைவேற்றும் பெருந் துணையாகக் கரிமுகக் கடவுள் இருப்பதை மறந்து அவசரப்பட்டோமே' என்று உருகினாள். அப் பெருமானுடைய திருவருளால் தனக்கு வாழ்வில் கிடைத்த நலங்களை யெல்லாம் எண்ணிப் பார்த்தாள். அருந்தமிழ்ப் புலமையும் பெரும் புகழ் நிலைமையும் அவன் வழங்கினான். குருவடிவாகி வந்து உவட்டா உபதேசம் புகட்டினான். தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டினான். ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயத்தை அருளினான். கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து, இருவினை தம்மை அறுத்து இருள் கடிந்தான். தவம் பலிக்கச் செய்தான். யோகம் நிறைவுற அருளினான். 'என்னை அறிவித்து எனக் கருள் செய்து, முன்னை வினையின் முதலைக் களைந்தான்.'

அவை மட்டுமா? வாக்கும் மனமும் இல்லா மனோலயம் தேக்கியே அவனுடைய சிந்தை தெளிவித்தான். அருள் தரும் ஆனந்தத்தில் அழுத்தினான். அல்லல் களைந்தே அருள் வழி காட்டினான். அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை நெஞ்சில் நிறுத்தினான். இவ்வாறெல்லாம் தத்துவநிலையைத் தந்து ஆட்கொண்ட விநாயகப் பிரானை மறக்கலாமா? புலமை பெறுவது எளிது; அருள் இன்பம் பெறுவது அரிது. அதனை அருளிய பெருமானுடைய கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் ஆறுகப் பெருகப் புளகம் போர்ப்ப அமர்ந்திருந்தாள்.

இப்போது அவளுக்குக் கைலையின் நினைவு மறந்தது. சேரமானைப் பற்றிய சிந்தனை ஒழிந்தது. தன்னையே மறந்து விநாயகப் பெருமானுடைய திருவருள்

இக் கட்டுரையில் வரும் ஒரு காட்சியை இவ்வார அட்டைப்படமாகத் தருகிருர் ஓவியர் ராஜம்

இன்ப உணர்ச்சியிலே மிதந்தாள். அவள் உள்ளத்தில் அந்த இன்ப அலைகள் மோதின. அப்போது ஒரு பாட்டு எழுந்தது. கவித் திறமை படைத்தவர்கள் உள்ளம் உணர்ச்சி வசப்படும் போதெல்லாம் கவி பிறக்கும். நாம் துயரத்தில் ஆழும்போது புலம்புவதும், மகிழ்ச்சியில் திளைக்கும்போது ஆ, ஊ என்ற ஆரவாரமும் எழுகிறது போல, கருவிலே திருவுடைய கவிஞர்களிடம் கவி எழும்.

அப்போது உதயமான கவிதையே விநாயகர் அகவல் என்ற அழகிய திருப்பாட்டு. எழுபத்திரண்டு அடிகளை உடைய அப்பாட்டில் ஔவைப் பாட்டி முதல் முதலில் விநாயகப் பெருமானுடைய திருவடியை எண்ணி, அதன் கண் பலவிசை பாடும் சிலம்பைத் தியானித்து, அவனுடைய திருவுருவம் முழுவதையும் சொல்லால் கோலம் செய்கிறாள்.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே! *

இவ்வாறு தொடங்கி, தான் விநாயகன் அருளால் பெற்ற பேற்றையெல்லாம் சொல்லி, கடைசியில் அப்பெருமானைச் சரண் புகுகின்றாள் தமிழ்ப் பாட்டி.

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக, விரைகழல் சரணே!

உலக வாழ்வை நீக்கும்போது இறைவனுடைய திருவடியே சரணமென்று புகுவது அறிஞர் இயல்பு. அந்த முறைப் படியே ஔவை பாடி நிறைவேற்றினாள். பாட்டு முடிந்தும் அவள் உள்ளக்கிளர்ச்சி நிற்கவில்லை. பாட்டின் சார்வை போல இன்பம் உள்ளத்தே தேங்கி நின்றது.

அப்போது விநாயகப் பெருமான் தன் துதிக்கையினால் அப்பெருமாட்டியைத் தூக்கிக் கைலையிலே கொண்டு சேர்த்தான். ஔவை பாட்டால் துதிக்கை செய்து நிறைவேற்றின அளவிலே, விநாயகன் துதிக்கை அவள் விருப்பத்தை நிறைவேற்றியது.

கண்ணை விழித்துப்பார்த்தாள் ஔவை புதிய இடம்; புதிய தோற்றம்; எல்லாம் மாக மறுவற்ற வெள்ளி மயம். இது தான் திருக்கைலாயம் என்று அங்குள்ள சிவகணத்தினரில் ஒருவர் சொன்னார். பாட்டி வியப்பினால் மலர்ந்த கண்களுடன் பார்த்தாள். நாலு திசைகளையும் பார்த்தாள். என்ன சாந்தமான சூழ்நிலை! ஏதோ புதிய ஆனந்தம் தன்னைக் கரைத்துக் கொண்டது போன்ற உணர்ச்சி அல்லவா எழுகிறது?

சிறிது நின்று நிதானித்தாள். கணபதியின் கருணையால் சிறிதும் முயற்சி இல்லாமலே கைலை வந்ததை எண்ணி உருகி வழுத்தினாள். அப்போதுதான் சேரமான் பெருமானின் நினைவு வந்தது. 'அவர்கள் முன்னே போயிருப்பார்களோ?' இந்த ஐயத்தை அருகில் நின்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்; அவர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

பாட்டி நின்றாள். சுந்தரர் வந்தார். அவர் சிவபெருமான் நினைவையன்றி வேறு ஒன்றும் இன்றி வந்தவர்; பாட்டியைக் கவனிக்கவில்லை. பின்னாலே சேரமான் பெருமாள் வந்தார். பாட்டி நிற்பதைக் கண்டு வியந்து, "எப்படி வந்தீர்கள்? காலால் நடந்தா?" என்று கேட்டார்; அருகில் வாகனம் ஒன்றும் இல்லையல்லவா?

"இல்லை, கையால்" என்றாள் பாட்டி.

"கையாலா? விளங்கவில்லையே!"

"விநாயகப் பெருமான் தம் துதிக்கையாலே என்னை இங்கே கொண்டு வந்து விட்டார். வாகனத்தில் வரும் உங்களுக்கு முன்னே நான் வந்து விட்டேன். எல்லாம் உமை மைந்தர் திருவருள் வலிமை" என்று சொல்லி ஒரு பாடலையும் கூறினாள்.

மதுர மொழிநல் உமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கு அரி
தோ? முகில் போல்முழங்கி
அதிர நடந்திடும் யானையும்
காதும்; அதன்பின்வரும்
குதிரையும் காதம்; கிழவியும்
காதம் குலமன்னனே!

தமிழ்ப் பாட்டியைத் திருக்கைலையில் ஏற்றக் காரணமாக இருந்த விநாயகர் அகவல் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரு வரமாக இன்றும் நின்று நிலவுகிறது. அதைப் பாராயணம் செய்து தம் விருப்பம் நிறைவேறப் பெறும் அன்பர்கள் பலர்.

---

* களபம்-கலவைச் சந்தனம்; துகில் ஆடை-மிக மெல்லிய ஆடை; வன்ன மருங்கில்-அழகிய இடையில்; எறிப்ப-வீச; பேழை-பெட்டி; கோடு-தந்தம்; சிந்தூரம்-சிவப்புத் திலகம்; நான்ற-தொங்கிய; சொற்பதம்-சொல்லின் நிலை; துரியம்-கருவி கரணம் கடந்த நிலை.

திரு ஏ. ஆர். வெங்கடாச்சாரி சென்னை மாநிலத்துக்குப் பிரதம என்ஜினியராகப் பல்லாண்டுகள் சிறப்புடன் சேவை செய்து தற்போது ஓய்வு பெற்றிருப்பவர். நீர்ப்பாசனங்களைப் பற்றியும் விவசாயிகளின் தேவைகளைப் பற்றியும் நன்கறிந்தவர். அவருடைய சேவையைப் பாராட்டி மத்திய சர்க்கார் 'பத்ம பூஷண்' விருதை வழங்கியுள்ளது. அவருடைய கருத்துக்கள் நமது சர்க்காருக்கு ஒப்பற்ற யோசனையாக அமைந்துள்ளன. — ஆசிரியர்]

நீர்ப்பாசனத்தில் சிக்கனம் தேவை

ஏ. ஆர். வெங்கடாச்சாரி
(சென்னை மாநில முன்னாள் பிரதம என்ஜினீயர்)

நில உடைமைக்கு உச்சவரம்பும் அத்துடன் இணைந்துள்ள கூட்டுப் பண்ணை விவசாயமும் மேற்கொள்ளப் படுவதற்கு இரண்டு லட்சியங்கள் குறிக்கோளாக உள்ளன. சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சமன் படுத்துதல் ஒன்று. உணவுப் பண்டங்களின் உற்பத்திப் பெருக்கு மற்றொன்று. இந்த இரண்டு லட்சியங்களும் இப்போது பிரசாரத்திலிருந்து வரும் நில உச்சவரம்பினாலும் கூட்டுப் பண்ணை முறையினாலும் கை கூடாதென்பதை இதுவரையில் இக் கருத்தரங்கில் வெளிவந்த கட்டுரைகள் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டன. எனவே அவற்றை மீண்டும் இங்கே பரிசீலிப்பது மிகையாகும். ஆனால் விவசாயிகளுக்கு உதவி புரிய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படுவதையும் அவை திறம் பட செயல் புரிவதையும் எல்லோரும் பொதுவாக வரவேற்றிருக்கின்றனர், உற்பத்திப் பெருக்கை அதிகரிக்க அவை உதவும் என்ற காரணத்தால். சேவா கூட்டுறவு முறைகளினால் செய்ய முடியாத—அல்லது மற்றதிலும் திருப்திகரமான முறையில் செய்ய முடியாத, ஆனால் விவசாயத்திற்கு இன்றியமையாத சில அம்சங்களைப் பற்றி மட்டுமே இக் கட்டுரையில் விளக்க முற்படுகிறேன். முதலாவது பாசன வசதிகளை அதிகரித்தல்: இரண்டாவது தண்ணீரை உபயோகிப்பதில் சிக்கனம். தலை முறை தலைமுறையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நமது கிராம மக்களுக்கு மகசூல் கிடைப்பதற்கு இவ்விரண்டு இனங்களும் எவ்வளவு இன்றியமையாதவை யென்று நன்கு தெரியும். ஆனாலும், இவ்விரண்டு துறைகளிலும் முக்கியமான சில அம்சங்கள் மட்டுமே இங்கே ஆராயப்படுகின்றன.

சூரிய வெளிச்சம், காற்று—இவைகளுக்கு அடுத்தபடி விவசாயத்துக்கு இன்றியமையாதவை தண்ணீரும், பாசனங்களும். உரமிட்ட வயல்களும் பாசன வசதி பெற்றிருந்தால் மட்டுமே நல்ல பலனை அளிக்கின்றன. பருவத்தில் பொய்க்காமல் வான் பொழிந்தாலும் மலைகளிலும் காட்டுப் பிரதேசத்திலும் பெய்தது போக, பூமியில் ஊறிப்போனதும் ஆவியாகச் சென்றதும் போக, விவசாயத்துக்கு உபயோகப்படுத்த மிஞ்சுவது ஒரு பகுதிதான். அதனாலேயே இயற்கை நியதிகளை யொட்டிக் கிடைக்கும் ஜலத்தை அணைகள் மூலமும், கால்வாய்கள் மூலமும், ஏரி குளங்களில் தேக்கி வைத்துக் கொள்கிறோம். இம்மாதிரி சென்னை மாநிலத்தில் மட்டும் சிறியவையும் பெரியவையுமாக 31,000 கட்டுமானங்கள் ஜலத்தைத் தேக்கி வைக்க இருக்கின்றன. மிகப் பெரிய பாசனக் கால்வாய்கள் காவேரி, தாமிரபரணி, டெல்டா பிரதேசங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை தவிர, வைகை, தென்பெண்ணை முதலிய பெரிய தேக்கங்களும் கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடி, விடூர் போன்ற பாசனக் கால்வாய்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பெரிய செலவில் பெரியார், குந்தா போன்ற இடங்களில் மின்சார உற்பத்திக்கும் பாசன வசதிக்குமாக இணைந்த இனங்களும் பல இருக்கின்றன.

புதிய ஜல ஆதாரங்கள் தேடுதல்

இவ்வாறு நிரந்தரமாகக் கிடைக்கும் ஜல ஆதாரங்களை சென்னை மாநிலத்தைப் பொறுத்த மட்டில் பூராவாக உபயோகப் படுத்திக் கொண்டு விட்டோம். அடுத்தபடியாக உபயோகப்படுத்தப்படாமல் வீணாகப் போய்க் கொண்டிருக்கும் தண்ணீர் எங்கே இருக்கிறது என்று தேடும் நிலைமையில் நாம் இருக்கிறோம். ஐந்தாண்டுகளில் சராசரி மூன்று ஆண்டுகளிலாவது சில நாட்கள் பெருக்கெடுத்து ஓடும் காட்டாறுகளையும், சிறிய ஆறுகளையும் உப நதிகளையும் கூட இப்போது பயன்படுத்திக் கொள்ள யோசிக்கப்படுகிறது. இம்மாதிரி எத்தெத்த சிற்றாறுகளின் ஜலத்தை எங்கெங்கே அணையிட்டு எப்படித் தேக்கிக் கொள்ளலாம் என்ற திசையில்தான் பிற்காலத்தில் அதிக கவனம் செலுத்த



திரு ஏ. ஆர். வெங்கடாச்சாரி

வேண்டும். அபிவிருத்தி அம்சங்கள் இம்மாதிரி உபயோகப் படக் கூடிய ஆதாரங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அனுசரித்தே இருக்கும்.

கேரளத்தைக் கேட்டுப் பார்!

இதைத் தவிர நமது அண்டை ராஜ்யமாகிய கேரளத்திலிருந்து உபரித் தண்ணீர் நமக்குக் கிடைக்க வகை செய்வதிலும் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும். கேரளத்தில் பூமி அமைப்பே அங்குள்ள ஜல வசதிகள் பூராவும் அங்கேயே உபயோகப் படுத்திக் கொள்ள முடியாதபடி உள்ளது. விளை நிலங்கள் அங்கே குறைவு, மழை அதிகம். ஆகவே, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு விவசாயத்துக்குப் பாசனவசதிகளை கேரளத்தின் உபரித் தண்ணீரைத் திருப்பியே பெற்றுக் கொள்ள வேண்டும். கோதாவரித் தண்ணீரைத் "தாராளமாக எடுத்துக்கொள்ளுங்கள்" என்று ஆந்திர சகோதரர்கள் கஷ்டமாகச் சொல்லிவிட்டாலும் அதைச் சென்னை மாநிலத்துக்குக் கொண்டு வருவது உடனடியாக நடக்கக் கூடியதல்ல. வெகுநாள்கழித்தும் கூட இதை நிறைவேற்றி வைப்பது சந்தேகமே.

நமது மாநிலத்தில் சராசரி 30 அங்குலம் தான் ஆண்டுதோறும் மழை பெய்கிறது. சில பிரதேசங்களில் 20 அங்குலந்தான் பெய்கிறது. கடற்கரை யோரமுள்ள இடங்களில் மட்டும் சிறிது அதிகம் பெய்கிறது. ஆகையால் பெரும்பாலான பகுதிகளில் புதிய ஜல ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கு விரிவான ஆராய்ச்சிகள் நடத்திப் பலவகையில் விவரங்கள் சேகரிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பலன் கிடைக்கும். அதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. சில அம்சங்கள் உதாரணமாக கீழே கொடுக்கப் படுகின்றன.

பல சிற்றாறுகளும், ஓடைகளும் சிற்சில சமயங்களில் திடீரென்று பெருக்கெடுத்து ஓடுகின்றன. மழைக் காலங்களில் இப்பெருக்கு தொடர்ந்து பல நாட்கள் ஓடுகின்றன. இத்தண்ணீரெல்லாம் எவ்வித உபயோகமுமின்றி முடிவில் கடலில்தான் போய்விழுகின்றன. எவ்வளவு தண்ணீர் இவ்வாறு வீணாகப்போகிறதென்பதற்கு எவ்விதக் கணக்கும் கிடையாது. ஆங்காங்கே தேக்கங்கள் ஏற்படுத்தியும், காடுகள் வளர்த்தும், வரப்புகள் கட்டியும், மேடுகள் எழுப்பியும் பூமியிலேயே ஊறச் செய்தும், வீணாகப்போகும் தண்ணீரைப் பாதுகாத்துப் பயனுள்ளதாகச் செய்யலாம். நேரடியாகப் பாசனத்துக்கு முற்றிலும் உபயோகமாகாவிட்டாலும் பருவ நிலையைச் சமன் படுத்தவும் பூமிக்குக் கீழே அடிமட்டத் தண்ணீர் நிலை ஊற்றைப் பெருக்கவும் இம்முறைகள் உபயோகமாகும். இவ்வாறு தேக்கி வைக்க முடியாத தண்ணீரை அணைகள் கட்டிக் கால்வாய்கள்மூலம் ஏரிகளுக்கும் குளங்களுக்கும் திருப்பிவிடலாம். இம்மாதிரி அபிவிருத்தி அம்சங்கள் சென்னை ராஜ்யத்தின் வருங்காலத் திட்டத்தில் முக்கிய இடம் பெற வேண்டும்.

உபயோகத்தில் சிக்கனம்

மிகுந்த பிரயாசையுடன் அதிகச் செலவில் தேக்கி வைத்த தண்ணீரை எப்போதுமே சிக்கனமாக உபயோகப் படுத்துவதில்லை. பழைய நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலம் நிச்சயமான ஜலவசதி கிடைத்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களில், விவசாயிகள் தேவைக்கு அதிகமான தண்ணீரை உபயோகிக்கும் மனப்பான்மையைக் காணலாம். நெல் வயல்களில் இதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். சேற்றிலும் தண்ணீரிலும் எருமை மாடு உழலுவதைப்போல் நெற்பயிர் வயலில் மிதப்பது சாதாரணமாகக் காணும் காட்சி என்று ஒரு சமயம் ராஜாஜி சொன்னார்கள். கிணறுகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் ஏற்றம், கவலை மூலம் இறைக்கப்படும் தண்ணீர் ஆற்றுக்கால்வாய்த் தண்ணீரைப்போல் அளவுக்கு மீறி செலவழிக்கப்படுவதில்லை.

நமக்குக் கிடைக்கக்கூடிய நீர்வசதிகள் மிகக் குறைவு என்பதைக் கவனத்தில்கொண்டு பார்த்தால், அதிக அளவு உற்பத்திக்குத் தண்ணீரை எவ்வளவு சிக்கனமாக உபயோகிக்க வேண்டுமென்பது விளங்கும். இதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்புடன், சர்க்காரின் விவசாய, பாசன இலாக்காக்களின் இணக்கமான நடவடிக்கைகளும் தேவைப்படும். சர்க்கார் நடத்தும் விவசாயப் பண்ணைகளில் பரீட்சைகள் நடத்தி வெவ்வேறு தரமுள்ள மண் வளம், பருவ நிலை மாறுபாடு, விவசாய முறை வேறுபாடுகள்—ஆகியவற்றுக்கு ஏற்றபடி தண்ணீர் உபயோகத்தில் எப்படிச் சிக்கனம் செய்யலாம்

என்பதை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். விவசாயிகளுக்குச் சர்க்கார் பண்ணைகள் ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். ஏரிகள், கால்வாய்கள், கிணறுகள் இவற்றிலிருந்து கிடைக்கும் தண்ணீரை ஒன்றையொன்று வளப்படுத்தும் வகையில் உபயோகிப்பதன் மூலம் தண்ணீர் உபயோகத்தில் பெருத்த சிக்கனம் செய்ய முடியும். நல்ல பொருள்கள் எல்லாமே அதிகமாக உபயோகிப்பதால் கெடுதலாக முடிவதுபோல தண்ணீரும் அபரிமிதமாக உபயோகிப்பதால், வயல்கள் சேற்றெடுத்துப் போய், சூரிய வெளிச்சமும் காற்றும் பயிர்களின் வேருக்குப் புகாமல் செய்யப்பட்டு, விளைச்சல் குறையத்தான் செய்யும். மேலும் உரமிட்டச் சத்தும் உபரி தண்ணீர் வடிகாலுடன் வடிந்து போகவும் நேரிடும். பாளம் பாளமாக வெடிப்புகள் ஏற்படும் அளவுக்கு வயல்களை உலர்த்துவது எவ்வளவு கெடுதலோ அப்படியேதான் தண்ணீரை இடைவிடாது பாய்ச்சுவதும். வயல் பரப்புக்கும் பயிர்வகைக்கும் ஏற்றவாறு தண்ணீர் பாசனமும் அளவுடன் இருக்கவேண்டும். இடையிடையே பயிர் வளர்த்துக்காக புதிய தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருந்தால், மேல் மட்டத்திலுள்ள வடிகால் தண்ணீரைப் புதுத் தண்ணீருடன் கலந்து கீழ் மட்டத்திலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சுவது ஒரு சிக்கனமுறை. சென்னை மாநிலத்தில் இம் மாதிரி சிக்கன முறைகளை மேற்கொள்ளுவதற்கு வாய்ப்புக்கள் மிகுதியாக உள்ளன. இடத்துக்கு இடம் மண் வளமும், பயிர் வகையும், தண்ணீர் தேவையும், பருவத்துக்குப் பருவம் மாறுபடுவதால் இவ்விஷயத்தில், அந்தந்தச் சூழ்நிலைக்குத் தக்கபடி சிக்கன முறை மேற்கொள்ளப்படவேண்டும்.

மராமத்து அவசியம்

ஏரிகளும் ஏரிக் கால்வாய்களும் சீரான நிலைமையில் மராமத்து செய்யப்பட்டு வந்தால் இந்த வகையில் தண்ணீர் வீணாகப் போவதைத் தடுக்கலாம். இந்தத் துறையில், முக்கியமாகப் பழைய ஜமீன் பிரதேசங்களில் பல பேர்கள் வேலை செய்து வருகின்றனர். நல்ல பலனும் காணப்படுகின்றன. ஆனால் இந்த வேலை தொடர்ந்து செய்யப்பட வேண்டிய ஒரு தொழில். ஆயிரக்கணக்கான ஏரிகளும் கால்வாய்களும் இருப்பதால் ஒரு பகுதியில் வேலை முடிந்ததும் மற்றொரு இடத்தில் வேலை ஆரம்பமாகும். ஏரிகளுக்குச் செல்லும் சப்ளைக் கால்வாய்கள் அடிக்கடி நன்கு பராமரிக்கப்பட்டுச் சீராக பாதுகாப்பதோடு மதகுகளையும், மதகு அடைப்புகளையும், சீரான நிலைமையில் வைத்திருப்பதனால் தண்ணீர் வீணாக விரயமாவதைத் தடுக்க முடியும். அதேபோல் ஏரிகளிலிருந்து வயல்களுக்குச் செல்லும் கால்வாய்களும் நன்கு பராமரிக்கப்பட்டால் கடை நிலையிலுள்ள வயல்களுக்கும் பாசன வசதி சுலபமாகக் கிடைக்கும்படி செய்யலாம்.

மேலும் ஏரிகளிலும் குளங்களிலும் ஆவியாக மாறித் தண்ணீர் நஷ்டமாவது கணிசமான அம்சம் என்பதை முக்கியமாகச் சொல்ல வேண்டும். இதனால் ஏரி, குளங்கள் முதலிய தேக்கத்திலுள்ள தண்ணீரில் பாதி அளவு நஷ்டமாகக் கூடும். கோடைக் காலத்திலும் நீர் நிலையின் பரப்பு அதிகமாயுள்ள ஏரிகளிலும் இவ்வகையில் ஏற்படும் நஷ்டம் அதிகம். இந்தச் சேதத்தைச் சிறிதளவு தவிர்த்தாலும், இதனால் மிச்சப்படும் தண்ணீர் நமது தண்ணீர் பஞ்சத்தைத் தவிர்க்க உதவும். ஆஸ்திரேலியாவில் இத்துறையில் சில பரீட்சைகள் நடத்தி நல்ல பலன் அடைந்திருக்கின்றனர். ''செட்டில் ஆல்கஹால்'' (Cetyl Alcohol) என்னும் திரவத்தை நீர் பரப்புமீது லேசாகத் தெளித்து எண்ணெய்ப் பரவுவதுபோல் பரவ விட்டால் குறைந்த செலவில் தண்ணீர் ஆவியாகப் போவதைத் தடுக்க முடிகிறதாம். இதேபோல் இதே பலனை அளிக்கவல்ல இதர ரசாயனப் பொருள்கள் உள்ளனவாம். இந்தியாவிலுள்ள சூழ்நிலைக்கு இவற்றைக் கையாளலாமா என்பதைச் செலவையும் கிடைக்கும் பலனையும் சீர்தூக்கி ஆராய்ந்து பார்ப்பது நன்மை தரும்.

வெப்பத்தினாலும் காற்றினாலும் ஆவியாகப் போவதைப் போல பூமியிலேயே சுவறிப்போய் தேக்கங்களிலுள்ள பெருமளவு தண்ணீர் வீணாகப் போகிறது. மழை ஜலம் பெய்யும் போதே இம்மாதிரி போவது ஒருபுறம், ஏரி குளம் கால்வாய்களிலுள்ள தண்ணீர் சுவறுவது மற்றொருபுறம். மணல் பாங்கான இடங்களில் இது அதிகமாக நிகழும். ஆனால் பூமியின் அடி மட்டம் ஏற்றதாக இருந்து சுவறிப்போன தண்ணீர் ஊற்றாகத் தேங்கி விட்டால் ஒருவிதத்தில் இது நன்மையே. ஏனெனில் பிறகு இம்மாதிரி இடங்களைப் பரிசோதித்துக் தேர்ந்தெடுத்து அங்கே கிணறுகள் வெட்டி, ஊற்றுத் தண்ணீரை இறைத்து மேல்மட்டத்துக்குக் கொண்டு வர முடியும். நெய்வேலி போன்ற இடங்களில் இறைக்க வேண்டிய அவசியமேயில்லாமல் தானாகவே வாயு இறுக்கத்தினால் தண்ணீர் வெளியே பீச்சி அடிக்கிறது.

ஆழ்கிணறுகள் தோண்டவும்

மழை ஜலத்தில் சுமாராக மூன்றில் ஒரு பாகம் இம்மாதிரி பூமியில் சுவறிப்போய் தங்கிவிடுகிறதென்று நம்பப்படுவதால் இம்மாதிரி இடங்களைக் கண்டு நிர்ணயித்துக் கிணறுகள் தோண்டுவது நன்மை பயக்கும். சென்னை மாநிலத்தில் மட்டும் 7,85,000 திறந்த வெளிக் கிணறுகள் விவசாயத்துக்காக இருக்கின்றன. இவற்றைத் தவிர ஆயிரக் கணக்கான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் நூற்றில் மூன்று பழுதில்லை என்று சொல்லவேண்டும். தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இத் துறையில் விஸ்தரிக்க இன்னும் இடமிருக்கிறது. தற்போது நமது ராஜ்யத்தில் தேவைப்படுவது 500 அடி ஆழம்வரையில் தோண்டப்பட்ட குழாய்க்கிணறுகளும் அவைகள் பற்றிய விவரங்களும். சில இடங்களில் 1000 அல்லது 1500 அடி ஆழம்வரையிலும்கூடக் குழாய்க் கிணறுகள் தோண்ட வேண்டியிருக்கலாம். கங்கைச் சமவெளிப் பிரதேசத்தைப் போல் நமது மாநிலத்தில்

கண்ட இடத்தில் ஆழக்கிணறுகளை தோண்டினால் பலனளிக்கமாட்டா. தகுதியுள்ள இடங்களை முன்னதாகவே பரீட்சித்துப் பின்னரே இதை மேற்கொள்ள வேண்டும். அதிக ஆழமில்லாத குழிக்கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் போதிய நல சப்ளை இல்லாவிடில் சிக்கனமாக இருக்காது. ஆனால் ஆழ் கிணறுகள் - முக்கியமாக காவேரி போன்ற டெல்டா பிரதேசங்களில் சப்ளை போதிய அளவு கிடைக்கலாமென்ற காரணத்தினால் சிக்கனமாக இருக்கும். இம்மாதிரி புது நீர் நிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டால், மேட்டூர்தேக்கத்தைப்போன்ற பெரிய தேக்கங்களிலுள்ள தண்ணீரை இதர இடங்களுக்குக்கூட விவசாயத்துக்காகத் திருப்பிவிட முடியும்.

சென்னை மாநிலத்தைப் பற்றி இங்கே அதிகமாகக் கூறியிருக்கிறேன். நமக்குத் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் இது நமக்கு முக்கியம். பெரிய ஜீவநதிகளும் அதிக மழையும் உள்ள இடங்களில் இந்தப் பிரச்னை முக்கியமாக இராது. ஆனாலும் தண்ணீர் குறைவான பிரதேசங்கள்தான் நம் நாட்டில் அதிகம். ஆந்திரப் பிரதேசத்தில் கடற்கரையோரமாக உள்ள ஜில்லாக்களை விட்டால், மற்றவையெல்லாம் ஜலமில்லாத பூமிதான். மைசூரிலும் தண்ணீர் இல்லாத இடங்கள் பல இருக்கின்றன. வடக்கே ராஜஸ்தான் போன்ற பிரதேசங்களில் தண்ணீர் ஒரு பெரிய பிரச்னை. இம்மாதிரிப் பிராந்தியங்களில் மேலே கூறிய முறைகள் அதிக அளவில் பயன் தரும்.

மழை பெய்யச் செய்யலாமே!

வானத்தில் பல சமயங்களில் மேகங்கள் தோன்றி மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கும்போதே மழையின்றி மேகங்கள் கலைந்து போவதைப் பார்க்கிறோம். விவசாயிகளுக்கு இந்த அனுபவம் மிகச் சாதாரணம். அந்த மேகங்களெல்லாம் சமுத்திரத்திலோ, பாலைவனத்திலோ, மலைப்பிராந்தியத்திலோ மழையைக் கொட்டிவிடுகின்றன. முக்கால் பாகம் மழை சமுத்திரத்திலேயே பெய்துவிடுகின்றன என்று பொதுவாகச் சொல்லலாம். இவற்றில் சிறிது பாகத்தையாவது கிராமங்களிலும், ஏரிகளிலும், குளங்களிலும் பொழிய வகை செய்தால் எவ்வளவோ நலமாக இருக்கும். மலைப் பிரதேசங்களில் பெய்யும் மழையை அதிகரிக்கச் செய்தால்கூட நன்மையுண்டு. மேல்நாடுகளில் விஞ்ஞான அறிவு வளர்ச்சியினால் மேகங்களைக் குறிப்பிட்ட இடங்களில் மழை பெய்யும்படி செய்ய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். விவசாயிகளிடமிருந்து கட்டணம் வாங்கிக் கொண்டு மழை பெய்விப்பதைத் தொழிலாக நடத்தும் கம்பெனிகள் கூட அமெரிக்காவில் இருக்கின்றன. சாதாரண உப்பையும், 'கால்ஷியம் க்ளோரை'டையும் (Calcium Chloride) சில சமயங்களில் 'ஸில்வர் அயோடை'டும் (Silver iodide) கலந்து ஆவியாக வானத்தில் மேகங்கள் செல்லும் பாதையில் விமான மூலம் தூவி மேகங்கள் அந்த இடங்களிலேயே மழையாகப் பெய்விக்கப்படுகின்றன. இம் முறைகளில் பல பரீட்சைகள் நடந்து வருகின்றன. எல்லாப் பரீட்சைகளும் வெற்றிகரமாக முடியும் என்று சொல்ல முடியாது என்றாலும் நூறு பரீட்சைகளில் ஒன்று பலன் தந்தாலும் அதனால் விவசாயம் செழிக்கவும், உற்பத்தி பெருகவும் வகையுண்டு. பரீட்சைக்காக செய்யப்படும் செலவைவிடப் பன்மடங்கு ஆதாயம் கிடைத்துவிடும். இந்த முறையை மேலும் பரீட்சை செய்து நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

உச்சிஷ்ட கணபதி ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம்

இவ்வாண்டு நாம் கொண்டாடும் விநாயக சதுர்த்திக்குப் பல நல்ல விஷயங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று தற்போது புதிதாக வெளியாகி யிருக்கும் பிள்ளையார் ஸஹஸ்ரநாமத் தோத்திரம்.

பிள்ளையார் என்றும் கல்யாணமாகாத பிரும்மசாரி தெய்வமாகத்தான் எல்லாரும் கருதி வருகிறோம். ஆனால் விநாயகரின் கோலங்களில் வல்லபை என்ற தேவியுடன் கூடிய கோலமும் உண்டு. அப்படிப்பட்ட கோலம் கொண்ட மூர்த்தத்துக்குத்தான் உச்சிஷ்ட கணபதி என்று பெயர்.

விநாயக வழிபாடு நம் நாட்டில் மட்டுமின்றி, சீனா, ஜப்பான் முதலிய தேசங்களிலும் பரவியிருக்கிறது. ஆனால் தென்னிந்திய ஆலயங்களில்தான் மந்திர சாஸ்திர முறைப்படி கணபதியின் பல கோலங்களுக்கு வழிபாடு நடைபெற்றுவருவது தென்னாட்டின் பக்தி மரபுக்கே சிறப்பாகும். அதுமட்டுமின்றி நமது நாட்டில் சங்கீத கச்சேரிகளில் கூட தீட்சிதரின் வாதாபி கணபதி, மகாகணபதி, மூலாதார கணபதி, வல்லபநாயக கணபதி, பஞ்சமுக கணபதி, சுவர்ணாகர்ஷண கணபதி என்று கணபதியின் பல திருக்கோலங்களைப் பல ராகங்களில் பாடப்பட்டு வருவதைக் கேட்டு வருகிறோம். இவையெல்லாம் தென்னாட்டில் விநாயகரைப் பல திருக்கோலங்களில் வழிபட்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகளாகும்.

இப்போது வெளியிட்டிருக்கும் உச்சிஷ்ட கணபதி ஸஹஸ்ரநாமம் இதுவரை அச்சாகாதது. இது திருவனந்தபுரம் ஏட்டுப் பிரதி நிலையத்திலிருந்து எடுத்து அச்சிடப்பட்டிருக்கிறது. பம்பாயில் ஒரு உச்சிஷ்ட கணபதி ஸஹஸ்ரநாமம் வெளியாகியிருக்கிறது. அது வேறு; இது வேறு. இதில் உச்சிஷ்ட மூர்த்தியின் சிறப்பம்சங்கள் அதிகமாகச் சொல்லப்படுகின்றன. அதனால் இந்நூல் உபாஸகர்களுக்கு அதிகமாக உபயோகப்படக் கூடியது.

வடமொழியிலுள்ள இந்நூலை ஆராய்ந்து அச்சிட்டவர் டாக்டர் வே. ராகவன். இவ்வரிய நூலை பக்தர்கள் டாக்டர் ஏ. சீனிவாசன், 22-ஏ, கதீட்ரல் ரோடு, சென்னை-6 என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (இது ஒரு இலவசப் பிரசுரம்)

[திரு எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி அவர்கள் மத்திய சர்க்காரின் உணவுத் துறைக் காரியதரிசியாக இருந்தவர். தமிழ்நாட்டில் பல ஜில்லாக்களில் கலெக்டராக இருந்தார். அதனால் அவருக்குப் பாரதநாட்டின் பல்வேறு விவசாய முறைகளைப்பற்றி நேர்முகமான அனுபவம் உண்டு. விவசாய சம்பந்தமாகவும், சர்க்கார் வர்த்தக சம்பந்தமாகவும் அவர் கூறும் கருத்துக்கள் கவனிக்கத் தக்கவை.
—ஆசிரியர்]

கட்டுப்பாடுகளை ஒழித்தே தீரவேண்டும்

எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி ஐ. ஸி. எஸ். (ரிடையர்ட்)

ஒரு பொருளுக்கு விலை எப்படி நிர்மாணம் செய்யப்படுகிறது? முதலில் பொருளை உற்பத்தி செய்யும் ஆலைச்செலவு, கூலி, அடிப்படையான சாமான்கள், இவைகளின் விலையைக் கணக்கிடவேண்டும். பிறகு பொருளைச் செய்யும் முதலாளிக்கோ அல்லது கம்பெனிக்கோ, ஓரளவு லாபத்தைக் கணக்கிட வேண்டும். பிறகு விற்கவேண்டிய இடத்துக்கு எடுத்துப் போகும் செலவைக் கணக்கிட வேண்டும். விற்குமிடத்தில் விற்பவருடைய லாபத்தைக் கணக்கிடவேண்டும். இதெல்லாம் ஒன்று கூட்டி வரும் தொகைக்குப் பொருளின் விலை என்று பெயர் அளிக்கிறோம். இதுதான் விலையின் பல பிரிவினைகள். இவ்வாறுதான் சாதாரண பொருள்களின் விலை கூட்டிக் கணக்கிடப் படுகிறது.

ஆனால் உணவுப் பொருள்களின் விலை இவ் விதம் கணக்கிடப் படுவதில்லை. ஏன்? இதை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

விலை நிர்ணயிக்கும் விதம்!

இன்று நாம் அனைவரும் உணவுப் பொருள்களின் விலை, அளவுக்கு மிஞ்சி ஏறி நிற்கிறது என்று அரசாங்கத்தைக் குறை கூறுகிறோம். இதனால் உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்து தன் உணவுக்குப் போக மிஞ்சியதை விற்கும் விவசாயி, உணவுப் பொருளின் விலையை ஏற்றி விற்கிறான் என்பது உண்மையாகுமா? விவசாயியைக் கேட்டால் தனக்கு ஒன்றும் லாபமில்லை என்றும் தான் வாங்க வேண்டிய எல்லாசாமான்களின் விலைகளும் அதிகரித்து விட்டன என்றும் கூறுகிறான். விவசாயிக்குச் சாகுபடி செய்வதற்கு ஏரு, இரும்பினால் செய்த கருவிகள், பூச்சி மருந்து முதலியவை தேவைப்படுகின்றன. குடியிருப்பது குடிசையானாலும் கட்டுவதற்கு துணி, எண்ணெய் போன்று சாகுபடி செய்யாத பல பொருள்களை அவன் விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் விலையுயர்ந்திருக்கும் போது உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து, விற்று ஜீவனம் செய்யும் விவசாயி மட்டும் தன் பொருளுக்கு விலையை உயர்த்தக்கூடாது என்று கூறுவது நியாயமாகுமா? இன்று அரசாங்கம் உணவுப் பொருள்களின் விலைகளைக்கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கி குறைந்த அளவில் நிர்ணயம் செய்யும்போது, நகரத்தில் வசித்துக் கொண்டு அரிசி முதலியவைகளை விலைக்கு வாங்குவோர்களுடைய வருமானத்துக்கு இணங்கி இந்தக் கட்டுப்பாடுகளை அமைக்கிறார்களே தவிர விவசாயிகளின் செலவையும் அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தையும் கணக்கிட்டு நிர்ணயிப்பதில்லை. ஆகையால் இன்று அமுலிலிருக்கும் உணவுப் பொருள்களின் கட்டுப்பாடுகளினால் இருசாராரும் கஷ்டத்தை அடைகிறார்கள்.

அரசாங்கம் வைத்த விலையில் உணவுப் பொருள் கிடைப்பதில்லை. உயர்ந்த விலையில் வெளியில் வாங்க வேண்டியிருக்கிறது. நிர்ணயித்த விலையில் விவசாயிக்கு லாபம் போதவில்லை. சட்டத்தை மீறி அதிக விலையில் எளிய விவசாயியினால் விற்க முடியாது. அவ்வாறு செய்து லாபம் அடைகிறவர்கள் பெரிய விவசாயிகளும், நடுவில் வியாபாரம் செய்பவர்களுந்தான். இவ்விதம் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்பவனுக்கும் லாபமில்லை; வாங்குபவனுக்கும் வசதியில்லை என்ற நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பற்றிப் பிரசுரிக்கும் கணக்கைப் பார்த்தால் நேற்று வரை இல்லாத அளவில் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று நாம் நம்பவேண்டும். அவ்வாறு உணவுப் பொருள்கள் ஏராளமாக நாட்டில் இருக்குமாயின் விலை இறங்க வேண்டுமேயல்லாது ஏறுவதற்கு ஒரு காரணமும் கிடையாது. ஆயினும் உணவுப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கட்டுப்பாட்டின் விளைவு

சர்க்காரின் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தான் இதற்குக் காரணம், என்பது என்னுடைய கொள்கை. சென்னை நகரவாசிகள் நெல்லூர் பச்சை



திரு எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி

சியை வாங்குவது வழக்கம். கேரளத்தில் வசிப்பவர்கள் தஞ்சாவூர் குறுவைப் புழுங்கல் அரிசியை வாங்குவது வழக்கம். இவ்விரு வியாபார முறைகளும் நம் மாகாணத்தில் வழங்கி வருகின்றன. அரசாங்கம் ஆந்திரா, சென்னை, கேரளம், மைசூர் இந்த நான்கு மாகாணங்களையும் ஒன்று கூட்டி ஒரு மண்டலமாக அமைத்திருக்கிறது. ஆனால் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய விலையில் ஆந்திர தேசத்திலிருந்து சரக்கு வெளிக் கிளம்புவதில்லை. எனினும், பம்பாய், பீகார் முதலிய மாகாணங்களுக்கு, உணவு மண்டலங்களுக்கு வெளியே, சட்டத்துக்கு விரோதமாக ஏற்றுமதியாகிறது. இந்தப் போக்கை அரசாங்கத்தால் திருத்த முடியவில்லை.

கேரளத்திலிருப்பவர்களுக்குத் தஞ்சாவூர் அருகாமையிலிருப்பதால் ஆந்திர ஜில்லாக்களில் வாங்குவதை விட அங்கு அரிசி வாங்குவதுதான் லாபம். ஆகவே, இன்று ஒரு புறம் நெல்லூர் அரிசி சென்னைக்கு வராமலிருக்க, மறுபுறம் தஞ்சாவூர் முதலிய தமிழ் ஜில்லாக்களிலிருந்து கேரளத்துக்கு அரிசி ஏற்றுமதியாகி வருகிறது. விலை கட்டுப்பாடுகள், விலை ஏற்றத் தாழ்வுகள், இதர நிர்ப்பந்தங்கள் முதலியவை பகிரங்கமாக ஏற்றுமதியாவதற்குத் தடைகளாக இருந்தாலும் கள்ளத்தனமாக வியாபாரம் என்னமோ நடந்துகொண்டுதான் வருகிறது. இந்தச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட சென்னை அரசாங்கத்தார், தங்கள் மாகாணத்தைத் தனி மண்டலமாக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

அது போலவே, கட்டுப்பாடு அமுலுக்கு வந்த நாள் முதல் ஒவ்வொருவரும் அரிசியையும் நெல்லையும் சேமித்து வைக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. விவசாயிக்கு இன்னும் விலை உயரலாம் என்ற ஆசை. அதுபோலவேதான் பெரும் வியாபாரிகளும் அரிசி மில் முதலாளிகளும் நகரங்களில் சில்லறை வியாபாரிகளும் கூட, கொஞ்சம் கொஞ்சமாகவேதான் அரிசியை விற்கிறார்கள். கூட்டுறவுக் கடைகளில் அரசாங்கம் அரிசியை விற்பனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் அங்கு ஒருபடி அரிசிதான் ஒரு ஆளுக்குத் தருவார்கள். அங்கே கொடுக்கப்படும் அரிசியின் தரத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. அந்த மட்ட ரக அரிசிக் கூடப் பிறகு கிடைக்குமோ கிடைக்காதோ, நாளைக்கு நிலை எப்படியிருக்குமோ என்ற பயத்திலும் ஒரு வீட்டிலுள்ள எல்லா நபர்களும் கடைக்குச் சென்று அரிசி வாங்குகிறார்கள். அதுவுமின்றிச் சிலர் குறைவாக அரிசி வாங்கி, அதிக விலைக்கு வெளியே விற்கிறார்கள். இவ்வாறு ஆசையினாலும் பயத்தினாலும் ஒவ்வொருவரும் விற்கவேண்டிய அளவைக் குறைத்தும் வாங்க வேண்டிய அளவை அதிகரித்தும் இல்லாத வறுமையை ஸ்ருஷ்டி செய்து வளர்க்கிறார்கள்.

மருந்து வியாதியை வளர்க்கிறது

இந்தக் கஷ்டங்களும் நாம் ஏன் படவேண்டும்? கட்டுப்பாடு இல்லாவிட்டால் உணவுப் பொருள்களின் விலை ஏறிவிடும்; ஆங்காங்கு அவரவர்கள் பதுக்கி வைத்துவிடுவார்கள் என்ற பயந்தானே? ஆனால் உண்மையாக ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது எந்த வியாதிக்கு மருந்து என்று கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்தார்களோ அந்த வியாதி கட்டுப்பாட்டினாலேயே அதிகரிப்பதாக அல்லவோ தெரிகிறது. 'குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்து ஒரு கேடா' என்பார்கள். மண்டலப் பிரிவினையாலும் அரைகுறை கட்டுப்பாட்டினாலும் கள்ளச் சேமிப்பும், கள்ள மார்க்கெட்டும் அதிகரித்து, கடை வீதிகளுக்கு அரிசி வரவும் குறைந்து விலையும் ஏறிவிட்டது.

மற்றொரு விஷயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். அரசாங்கம் நெல் ஆலை முதலாளிகளிடமிருந்து, முதலில் 50 சதமானமும், பிறகு 75 சதமானமும் கட்டுப்பாட்டு விலையில் அரசாங்கத்துக்கு விற்கவேண்டும் என்ற ஒரு திட்டம் போட்டார்கள். ஆனால், அரசாங்கம் கணக்கிட்ட அளவுக்கு ஒரு பகுதிகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சட்டியிலிருந்தால் தானே அகப்பையில் வரும் என்பது தமிழ்ப் பழமொழி. ஆலைக்கு நெல் வராவிட்டால் அரசாங்கத்துக்கு முதலாளி அரிசி அளப்பது ஏது? மேற் சொன்ன திட்டம் பிரகசித்ததுமே நெல் எல்லாம் விவசாயியினிடமே தங்கிவிட்டது. விவசாயியினிடம் நேராகச் சென்று அவனுடைய உற்பத்தியில் ஒரு சதமானம் பலாத்காரமாகக் கட்டுப்பாட்டு விலையில் வாங்குவதற்கு அரசாங்கத்துக்குத் தைரியமில்லை. முதலாளி ஒழிக என்றும் அனைவரும் கரகோஷம் செய்வார்கள். ஆனால் விவசாயியிடம் நெல் தங்கிவிட்டது என்று சொல்வதும் அவர்கள் தாம் குற்றவாளிகள் என்று பொருள்படும்படியாகச் சொல்வதும் தேர்தலுக்குத் தீங்காக

கூட்டு விவசாயம், நில உச்சவரம்பு, சர்க்கார் வர்த்தகம்

ஆகிய விஷயங்கள் பற்றிய இந்த ஆராய்ச்சி அரங்கத்தில்
அடுத்த வாரம் செப்டம்பர் 13-ந் தேதி கல்கி இதழில்

பேராசிரியர் டி. கே. துரைஸ்வாமி அய்யர், பிரோஜ் ஜே. ஷராப்,
கே. வி. சுப்பிரமண்யம், கே. ஆர். அவதானி

ஆகியோரின் கட்டுரைகள் வெளிவரும்.

றமுடியும். ஆகவே, இவ்விஷயத்தில் அரசாங்கம் மௌனம் சாதித்து வருகிறது.

ஆபத்துக்கால முறை: அமைதிகால முறையல்ல

ஜனநாயக அரசாட்சியில் கட்டுப்பாடு திட்டங்கள் யுத்தம் முதலிய ஆபத்துக் காலங்களில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமே தவிர சாதாரண நாட்களில் தினசரி வாழ்க்கைக்கு இயைந்தவாகக் கொண்டு வரக் கூடாது. அரைகுறையான திட்டங்களால் பயன் ஒன்றுமில்லை. ஜனநாயகத்தை ஒழித்து விட்டு, சைனா, ருஷ்யா தேசங்களிலிருப்பதுபோல் சர்வாதிகார சர்க்காரை நம் நாட்டிலும் கொண்டுவந்தால் அப்பொழுது உணவுப் பொருள் உற்பத்தி, விவசாயம், வியாபாரம் எல்லாம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நடந்துவரும். அந்நிலையில் சர்க்கார் கொடுக்கும் அளவுதான் சரியான அளவு. அவர்கள் விலைதான் சரியான விலை. ஏனென்று கேட்க ஆளுமில்லை, வெளியே வாங்கவும் விற்கவும் ஆளுமில்லை. இத்தகைய நிலைமை வேண்டுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். இல்லை, ஜனநாயகமும் அதனுடன் இருக்கும் பேச்சுரிமையும், செயல் உரிமையும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்று நாம் கருதுவோமானால் இன்றிருக்கும் கட்டுப்பாடுகளை ஒழித்தே தீர வேண்டும்.

பாரத நாடு முழுவதும் ஒரே ஜனநாயகமாக இருக்கும்போது அதனுள் நாட்டைப் பல உணவு மண்டலங்களாகப் பிரிப்பது மிகத் தவறு. அதனுல் உணவுப் பொருள்களின் பொது நடமாட்டம் குறைகிறது. அதுவும் வெளிப்படையாகச் செய்வதைக் கள்ளத்தனமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக விலையும் உயர்கிறது. பொதுவாகவும் ஜனங்கள் கட்டுப்பாட்டுக்கு வெளியே விலைக்கு வாங்குவதால், இந்த விலைக் கட்டுப்பாட்டாலும் பயனில்லை.

ஆகவே, நீராடச் சென்ற யானை சேற்றைத் தன்மேல் பூசிக்கொண்டதுபோல், வியாபாரத்தில் புகுந்த அரசாங்கம், பொருளைக் குறைக்க விலையை ஏற்றிவிட்டது. இந்த வியாதிகள் எல்லாம் நாம் வருந்தி வரவழைத்துக் கொண்டவை. கட்டுப்பாட்டை நீக்கி வியாபாரத்தை முன்போல் சுயேச்சையாக விட்டால் அதிகமான உணவுப் பஞ்சமும் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

1951-52ம் ஆண்டுகளில் இப்பொழுது இருப்பதைவிட உற்பத்தி குறைவாகவே இருந்தது. ஆயினும் அப்போது கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டன. அதனால் விலையும் ஏறவில்லை, உணவுப் பொருள்களின் வரவும் குறையவில்லை. அப்போது நாம் படித்த பாடத்தை இப்போது நாம் மறந்து விட்டோம்.

[திரு எல். கிருஷ்ணஸ்வாமி பாரதியார் சிறந்த தேசபக்தர். விவசாயத்தில் சொந்த அனுபவம் உள்ளவர். முன்னாள் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர். வழக்கறிஞருங்கூட. கூட்டுப் பண்ணை விஷயமாக நிலவும் தவறான கருத்துக் களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். — ஆசிரியர்]

வளந்தரா கூட்டுப் பண்ணை எச்சரிக்கிறது

எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி

(முன்னாள் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்)

“சொந்த நிலம் என்ற உரிமை உணர்ச்சியிருந்து விட்டால் மணற் பாங்கான பூமியும் பொன்விளையும் பூமியாக மாறிவிடும். கல்லும் பாறையுமுள்ள ஒரு இடத்தை “இது உன்னுடையது” என்று ஒருவனுக்குக் கொடுத்துவிடுங்கள். அவன் அதை வளம் மிக்க தோட்டமாக மாற்றிவிடுவான். ஒரு அழகிய தோட்டத்தை ஒரு கூட்டத்தாருக்குப் பொதுவாகக் கொடுத்து விடுங்கள். வெகு சீக்கிரத்தில் அது பாலைவனமாக மாறிவிடும்.”

இவ்வாறு ஒரு புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் வெகு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார். எப்போதோ சொல்லியிருந்தாலும் அதன் உண்மை இப்போதைக்கும் பொருத்தமாகவே இருக்கிறது. மனித மனோதத்துவத்தைச் சார்ந்த இந்தக் கருத்து முற்றிலும் உண்மை என்பதை அனுபவம், சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

கூட்டுறவு புதிதல்ல

தன்னைப் பொறுத்தமட்டிலுமே தனக்காகவே எந்த மனிதனும் வாழ முடியாது. மனித சஞ்சாரமேயில்லாத ஒரு தனித் தீவில் “ராபின்ஸன்க்ரூஸோ” என்பவன் வசித்தான் என்று கதைப் புத்தகத்தில் படிப்பது போல் வாழ்க்கையில் இருக்க முடியாது. இவ்வுலகில் சாமானிய வாழ்க்கை நடத்துவதற்கே பிற மனிதர்களுடைய ஒத்தாசையும், ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகிறது. சுகவாழ்வு வாழ வேண்டுமானாலும் மற்றவர்களின் உதவி இன்றி முடியாது. மற்றவர்களுக்கும் அதேபோல் நம்முடைய உதவியும் ஆதரவும் தேவைப்படுகிறது. அப்படித்தான் சமூக உறவு கூட்டுறவினாலேயே வளம் பெறுகிறது. இந்த அடிப்படையில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிட்ட லட்சியங்களை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டன. இவை நம் நாட்டில் பல ஆண்டுகளாக திருப்திகரமாகவோ, திருப்திக் குறைவாகவோ செயலாற்றி வருகின்றன.



திரு எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி

கடமை உணர்ச்சி

இந்தக் கூட்டுறவு முயற்சியை பெருமளவில் விவசாயத் துறையில் விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது. நமது மதிப்புக்குரிய பிரதமர் நேரு கூட்டுப் பண்ணை முறையில் அலாவுதீன் அற்புத விளக்கைக் கண்டுபிடித்தது போல, விவசாயப் பொருள் உற்பத்தி நான்கு கால் பாய்ச்சலில் நடைபெறுவதற்கு இந்த அற்புதத்தைத் தான் கண்டு பிடித்து விட்டதாக நம்புகிறார்.

அரசியல் அறிவு முதிர்ந்தவர்களும் விவசாய அனுபவமுள்ளவர்களும், சிந்தனையாளர்களும் இந்த முறையினால் காட்டுகிற நன்மை விளையாது என்று எச்சரிக்கை செய்து விட்டனர். பரீட்சைகள் நடத்திப் பார்த்துப் பலாபலன்களைத் தெரிந்து கொள்வதற்குக் கூட இந்த முறை அபாயகரமானது. இதை ஆட்சேபித்து எச்சரிக்கை செய்ய வேண்டுமென்ற கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு இக் கட்டுரை எழுதுகிறேன். இவ்வெச்சரிக்கை விடுக்க எனக்குத் தகுதியுண்டு. விவசாயத்தைப் பற்றி எனக்கு நேரடியாக அனுபவமுண்டு. நானே சொந்தப் பயிர் செய்யும் விவசாயி. கிராமத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கை முறைகளை நேரில் கண்டு அவர்களிடையில் வசித்து அறிந்தவன். இப்போது அதிகார வர்க்கத்தினர்களால் திட்டமிடப்பட்டு அமுல் நடத்தப்படும் கூட்டுப் பண்ணை விவசாய முறை பேராபத்தான தோல்வியில்தான் முடியுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். காகிதத்தில் படிப்பதற்கு இம்முறை மிகக் கவர்ச்சிகரமாக இருக்கும். அதன் கவர்ச்சி காகிதத்துடன் நின்று விடுகிறது. நடைமுறைக்கு ஒவ்வாதது. செயலில் உருப்படாதது.

செயலில் உருப்படாது

முதலாவதாக விவசாயிகளின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதைக் கவனிக்கலாம். ஒரு சென்டு நிலமானாலும் “தன்னுடையது” என்ற உரிமையுள்ள ஒருவன் சமூகத்தில் தனக்குத் தனி ஸ்தானம் உண்டு என்பதை உணர்கிறான். கூட்டுப் பண்ணையில் சேருவதன் மூலம் இந்தத் தனித் தன்மையை அவன் இழந்து விடுகிறான். அத்துடன் தன்னுடைய நிலம் என்ற உணர்ச்சியையும் தான்

சொத்துள்ளவன் என்ற சமூக அந்தஸ்தையும் இழந்து விடுகிறான். இரண்டாவதாக, வேலை செய்வதற்கு வேண்டிய ஊக்கத்தை அவன் இழக்கிறான். தன்னுடைய உழைப்பின் பலன் தனக்குப் பூராவும் கிடைக்காதென்னும் நிலைமையில், தன் உழைப்பினால் எவ்வளவு பயன் விளைந்தது என்பதைத் தெரிந்து கொள்ளவும் முடியாத நிலையில் வேலை செய்ய ஊக்கம் குன்றத்தானே செய்யும்? எஜமான் என்ற நிலை போய் அடிமை என்னும் நிலை வந்தெய்தும். இந்நிலையைத் தன்மானமுள்ள எந்த விவசாயி தான் முழுச் சம்மதத்துடன் வரவேற்பான்? மூன்றாவதாக, சொத்துரிமை சொந்தக்காரவிடமேதானிருக்கும் என்பது வெறும் பேச்சளவிலேதான். அவன் தன் நிலத்தை விற்க முடியாது; அடமானம் வைக்க முடியாது. வரப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு தனி நிலங்களென்ற பாகுபாடே மறைந்துவிடும். நான்காவதாக, அதிகாரிகளும் அவர்களுடைய பரிவாரங்களும்; ஆடம்பரங்களும் அதற்கான செலவுகளும்; பல்வேறு விவசாய வேலைகளையும், வேலையின் தராதரத்தைக் கணிப்பதையும், கூட் சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதையும், மேற்பார்வை செய்யத் தெரியாத இப் பத்திகளையும் வைத்துக் கொண்டு பண்ணை வேலைகள் திருப்திகரமாக நடைபெறாது. நிகரவருமானம் கூட்டுப் பண்ணை ஏற்படுவதற்கு முன் ஒவ்வொரு விவசாயிக்கும் எவ்வளவு கிடைத்துக் கொண்டிருந்ததோ அதைக் காட்டிலும் குறைவாகவே இப்போது கிடைக்கும். இதுவரையில் சுதந்திர விவசாயியாக வாழ்ந்தவன் இப்போது தினக் கூலியாக மாறுவதுதான் இதிலிருந்து காணும் பலன். ரேஷன் கடையிலிருந்து அரிசி வாங்கிக் கொண்டு வருவது போல் இனி விவசாயிகள் கூட்டுப் பண்ணையிலிருந்து தானியங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பல பேர்கள் சொந்தம் கொண்டாடிப் பலபேர் நிர்வாகம் செய்யும் முறையில் இப்படித்தான் ஏற்படும்.

"அஞ்சுரான் புஞ்சை!"

கிராமப்பகுதிகளில் எங்கெல்லாம் கரம்பாகக் கவனிப்பாரில்லாது நிலம் இருக்கிறதோ அதை ''அஞ்சுரான் புஞ்சை'' என்று இனசி வழக்கில் குறிப்பிடுவது வழக்கம். திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம வழக்கென்றாலும் இது பொருள் செறிந்த உண்மையை மனத்தில் ஆழப் பதியும்படி எடுத்துக் காட்டுகிறது. ஐந்து கிராமங்களுக்கு அந்தக் கரம்பு நிலம் சொந்தமாம்! அதனால்தான் கிராமத்திலுள்ள ஒருவனும் அதைக் கவனிப்பதில்லையாம்! பல பேருக்குச் சொந்தமாயிருப்பது ஒருவனுக்கும் சொந்தமில்லை. அந்தச் சொத்து கவனிக்கப் படாமல்தான் சீரழியும். கூட்டுப் பண்ணை விஷயம் இப்படித்தான்.

கூட்டுப் பண்ணைக் கருத்து ஒன்றும் புதியது அல்ல; காங்கிரஸ் செயல் திட்டத்தில் பல ஆண்டுகளாகவே இருந்துவந்துள்ளதுதானே என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. அதைப் பற்றி இதுவரையில் ஒருவரும் ஆட்சேபம் கூறாததற்குக் காரணம் இந்த வகையில் அதிகாரிகள் தீவிரமாகத் தலையிடாமலிருந்ததே. மேலும், இது வரையில் நடத்திய கூட்டுப் பண்ணைப் பரிட்சைகள் தோல்வியே அடைந்துள்ளன. ஒரு உதாரணம் மட்டும் இங்கே கூறுகிறேன்.

வளந்தூர் கூட்டுப்பண்ணையின் கதி

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வளந்தூரில் ஒரு கூட்டு விவசாயப் பண்ணை சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. மிகுந்த ஆடம்பரத்துடன் வரிப் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டுத்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது உருப்படாமல், முழுதும் சீர்குலைந்து போயிற்று. வெகு பிரயாசையுடன் பல அங்கத்தினர்கள் சங்கத்தை விட்டு வெளிவந்தால் போதும் என்று சென்றுவிட்டனர். முன்னைவிட ஏழைகளாக, ஆனால் பரிதாபப்படக்கூடிய அனுபவத்துடன், அவர்கள் வெளியேறினர். மிகுதியுள்ள அங்கத்தினர்களைக் கொண்டு சங்கத்தை நடத்தி நிர்வகிக்க, மரணத்தறுவாயிலுள்ள நோயாளிக்குப் பிராணவாயு பிரயோகம் செய்வது போல், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அதை இன்னமும் உயிர்ப்பிக்க முடியவில்லை. இந்த வளந்தூர் பரிட்சையில் சர்க்காருக்கு நிகரமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை யாராவது கண்டுபிடிக்க முன்வந்தால் பல ருசிகரமான விவரங்கள் கிடைக்கும். ஒன்பது அங்கத்தினர்களுடன் அமைச்சர் திரு பக்தவத்சலம் தலைமையில் விவசாய உற்பத்தியைப் பற்றிப் பரிசீலனை செய்த கமிட்டி வளந்தூர் பரிட்சை தோல்வியடைந்து விட்டது என்பதை ஒப்புக்கொண்டு விட்டதால் விவாதத்துக்கு இடமில்லை. ''வளந்தூர் சங்கத்தின் நடவடிக்கைகள் கூட்டுப் பண்ணையின் பிற்காலத்தைப் பற்றி அவநம்பிக்கை கொள்ளும்படியாகவே இருக்கின்றன,'' என்று திரு பக்தவத்சலம் கூறியிருக்கிறார். (தினமணி 24-7-59ல் வெளி வந்த செய்தி.)

கிராம தானக் கிராமங்களில் கூடக் கூட்டுப் பண்ணை வெற்றிகரமாக நடைபெறவில்லை. கிராமதான இடங்களிலுள்ள நிலங்களெல்லாம் மட்டரகமான பூமியாக இருப்பதனால் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளப்படவில்லையாம். இவ்வளவு அனுபவமிருப்பினும், கூட்டுப் பண்ணையை ஏன் இவ்வளவு பிடிவாதமாகப் புகுத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அப்படிக் கேட்டால் அவர்கள் கூறும் பதில் விசித்திரமாக இருக்கிறது. ''ராபர்ட் ப்ரூஸ்'' என்ற ஸ்காட்லாந்து மன்னன் கதையை நீங்கள் கேட்டதில்லையா? ஏழு முறை அவன் தோல்வியடைந்தாலும் அவன் மனம் தளரவில்லை. எட்டாவது முறை அவன் வெற்றியே கண்டான். எப்படிப் பதில்!

எந்த விவசாயிக்காவது கூட்டுப் பண்ணையில் சேர வேண்டுமென்று எண்ணமிருந்தால், முதன் முதலில் அவன் வளந்தூருக்கு வந்து இங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து பிறகு வேண்டுமானால் இதில் பிரவேசிக்கட்டும் என்றுதான் நான் ஆலோசனை கூறுவேன்.

மற்றுமொரு அம்சத்தைப் பற்றி சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுப்

பண்ணைகளெல்லாம் சுதந்திரத்துடன்தான் இயங்கும்; அதில் சேரும்படி எவரும் நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த "சுவேச்சை" காகிதத்தில் மட்டும் தானிருக்கும் என்பதே என் துணிபு. சர்க்கார் கடன் பத்திரங்களுக்கு மக்கள் "சுவேச்சையாகத்"தான் பணம் கொடுத்தார்கள் என்பதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டீர்களே. இதிலும் அதேமாதிரி சுவேச்சை தானிருக்கும்"

அந்தரங்கம் அம்பலமாகிறது

எவ்வளவு சுவேச்சை இவ் விஷயத்திலிருக்கு மென்பதற்கு சமீபத்தில் திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமான் நாராயணன் காந்தி கிராமத்தில் பேசியதிலிருந்து தெரியவரும். அவர் கூறியதாவது

1. "விவசாயிகள் இந்தக் கூட்டுப் பண்ணை முறை வேண்டாமென்று நிராகரிப்பதற்குமுன் சில ஆண்டுகளுக்காவது அவகாசம் கொடுத்துப் பார்க்கவேண்டும்." எவ்வளவு ஆண்டு காலம் பொறுத்துப் பார்ப்பது என்பதை ஸ்ரீமான் நாராயணன் நிச்சயமாகச் சொல்லாவிட்டாலும் பத்தாண்டு கால வரம்பை அவர் கருத்தில் கொண்டிருந்தார் என்பது எல்லோருடைய ஊகம். அதாவது இந்தப் பரீட்சை வெற்றியில் முடியுமா முடியாதா என்பதைத் தெரிந்து கொள்ள பத்தாண்டு காலத்துக்கு விவசாயிகள் அல்லல்படவேண்டும்!

2. "விலகிக் கொள்வதற்கு முன் ஒரு வருஷ நோட்டீஸ் கொடுக்க வேண்டும்."

3. "அவன் வாங்கிக் கொண்ட கடன்களையும் இதர உத்தரவாதங்களையும் எல்லாவற்றையும் செலுத்திவிட வேண்டும்" (வட்டியைப் பற்றிச் சொல்லாவிட்டாலும் வட்டியுடன்தான் என்பது ஊகிக்க வேண்டியது.)

4. "நிலத்தில் சீர்திருத்தங்கள் ஏதேனும் செய்யப்பட்டிருந்தால் அவற்றுக்கு ஈடாக மதிப்பிட்டுத் தொகையைப் பண்ணையில் செலுத்திவிட வேண்டும்."

இந்த ஷரத்துகளுக்கு ஒருவரும் குறை சொல்ல முடியாது. காகிதத்தில் இவையெல்லாம் அவசியம் என்றுகூடத் தோன்றும். ஆனால் முக்கியமான கேள்வி "இந்த ஷரத்துகளை விவசாயிகளால் நிறைவேற்ற முடியுமா?" என்பதுதான். விலகிக் கொள்வதற்கு இவ்வளவு நிபந்தனைகளா? தனக்குச் சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காததாலேயே விவசாயி அங்கத்தினர் பதவியை விட்டு விலக ஆசைப்படுகிறான். இவ்வளவு கடன்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றி வைக்கப் பணத்துக்கு அவன் எங்கே போவான்?

இவை மட்டுமல்ல. இவைகளைக் காட்டிலும் திடுக்கிடச் செய்யும் செய்தியைக் கடைசியில் தெரிவித்தார். மேலே குறிப்பிட்ட கடன் வகைகள் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்த பின்பும் விவசாயி அங்கத்தினர் தன்னுடைய நிலத்தையே திரும்பி அடைவான் என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது; அவனுடைய நிலமே கிடைத்தாலும் கிடைக்கலாம்; அல்லது சமமான மதிப்புள்ள இதர நிலம் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

என்று ஸ்ரீமன் நாராயணன் சொன்னார். ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' 3-8-59 இதழில் இச்செய்தி வெளிவந்துள்ளது.)

சொத்துரிமையின் லட்சணம்!

கூட்டுப் பண்ணை அங்கத்தினர் தமது நிலத்தின் மீது சொத்துரிமை கொண்டாடும் உரிமை இந்த லட்சணமென்றால் சட்டப்படி சொத்துரிமை என்பதற்கே அர்த்தமில்லாமல் போய் விடுகிறதல்லவா? இம்மாதிரி சொத்துரிமையைத்தான் பிரதமர் நேருவும் அவருடைய சகாக்களும் மேடையிலிருந்து 'கூட்டுப் பண்ணையில் சேர்வதனால் நிலத்தில் உரிமை பறிபோய்விடாது' என்று வாய்கிழிய கோஷமிடுவது. சொந்தக்கார விவசாயி தன்னுடைய நிலத்தைத் திரும்பப் பெற முடியாது; வேறு இதர நிலம் கிடைக்கும்! அதுதான் உண்மை; வரம்புகளெல்லாம் வெட்டி எறியப்பட்ட பின் தன்னுடைய நிலமேதான் தனக்குக் கிடைக்குமென்று விவசாயிதான் எப்படி எதிர்பார்க்கலாம்? இவ்விஷயத்தை மூடி மறைக்காமல் இவ்வளவு தெளிவாகச் சொன்னதற்கு ஸ்ரீமன் நாராயணனுக்கு நாம் உண்மையிலேயே கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு நிஜலிங்கப்பாவின் தலைமையில் கூட்டுப் பண்ணை செயல் முறைகளைப் பரிசீலனை செய்து வரும் கமிட்டியினர், ''கூட்டுப் பண்ணைகளில் அடங்கிய நிலப் பரப்பு போதுமான அளவுள்ளதாகவும், ஒவ்வொரு அங்கத்தினருடைய நிலப் பரப்பும் தனித் தனியாகக் கட்டுப்படியாகச் சாகுபடி செய்யக்கூடிய அளவுள்ளதாகவும் இருந்தாலொழிய இம்மாதிரி பண்ணைகளை வெற்றிகரமாக நடத்துவது கஷ்டம்'' என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். அவ்வளவு விஸ்திரணமுள்ள நிலப் பரப்பு கட்டுப்படியாகச் சாகுபடி செய்யக் கூடியது என்பதைப் பற்றி **''ஐந்து ஏக்கர் முதல்தர நன்செய் நிலம்''** என்று பொதுவாகக் கருதப்படுகிறது என்று தெரிகிறது.

ஞானோதயம் வருகிறது

இப்போது தான் ஆட்சியாளர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஞானோதயம் வருகிறதாகக் காண்கிறது. இந்தக் கொள்கைப்படி பார்த்தால், தனித் தனியே ஐந்து ஏக்கர் நன்செய்நிலத்துக்கும் குறைவாக உள்ள அங்கத்தினர்களைக் கொண்ட கூட்டுப் பண்ணை வெற்றியடைய முடியாது என்று ஏற்படுகிறது. அதுவும் சாதாரண நன்செய் நிலமல்ல; முதல் தர நன்செய்நிலம். கடவுளே! கூட்டுப்பண்ணையின் போக்கே போக்கு!


ஆனால் இப்படிக் காரிருள் போன்று கருமேகங்கள் சூழ்ந்த விவசாய உலகில் சிறிது நம்பிக்கைக்கான அறிகுறியும் தென்படுகின்றது. இந்தக் குழப்பமான சூழ்நிலையில் இது ஒன்றுதான் ஆறுதலளிக்கும் சின்னம். அது என்ன என்கிறீர்களா? அதுதான் கள்ளங் கபடமற்ற நம் நாட்டு ஏழை விவசாயிகளின் சாமான்ய, ஆனால் அசைக்க முடியாத விவேகம். தங்களுக்கு எது நல்லது என்பதை நாட்டு அரசியல் தலைவர்களையும் எஜமானர்களையும் விட விவசாயிகளே நன்கு அறிந்து கொண்டு இந்தக் கூத்தாட்டத்தில் நுழைய மறுத்துவிட்டு ஒதுங்கி நிற்கும் அவர்களுடைய அனுபவ ஞானத்தினால் ஏற்பட்ட உணர்ச்சிதான் நமக்குள்ள ஆதாரம். சர்க்காரால் பகட்டுடனும், பிரசாரத்துடனும் பறைசாற்றி அறிவிக்கப்படும் அனுகூலங்களைக் கண்டு ஏமாந்து போகாமல் இருப்பதற்கு 'வளத்தூர் உதாரணம்' உஷார், உஷார் என்று எச்சரிக்கை செய்கிறது. நமது விவசாயிகள் ராபர்ட் புரூஸைப் போல ஏழு முறை தோல்வியானாலும் கஷ்டத்தைத் தாங்கக் கூடியவர்களல்ல. அவர்களுடைய வாழ்க்கை நிலையை நமது புனித தேசத்தில் படாதபாடுப் பெருமைப்படுத்திய மகான் காந்திஜீ ''தங்கள் இஷ்டம் போல் இறந்து போகத் தெரியாததால் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று விவரித்தார். எத்துணை உண்மை!

அப்படியானாலும் வேறு மாற்று யோசனை என்ன சொல்லுங்கள் என்று பிரதமர் நேரு கர்ஜிக்கிறார். மாற்று யோசனை இல்லையென்றும் நான் சொன்னது சரி என்பது அவர் கருத்து போலும்! சர்க்கார் கூறிய சிகிச்சை முறை வியாதியைக் காட்டிலும் கடுமையானது என்பதை எடுத்துக் காட்டவே இப்போது முன்வந்துள்ளேன். ஆட்சியாளர்களுக்கு இந்த எச்சரிக்கையை விடுப்பது எங்களுடைய தேசியக் கடமை என்று என்னைப் போன்ற பலர் எண்ணுவதாலேயே இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. காங்கிரஸிடம் அன்புக் குறைவால் இவ்வெச்சரிக்கையை விடுக்கவில்லை. நாட்டு நலனில் அக்கறை மிகுதியால் சொல்லுகிறேன். நாட்டின் நலனில் நமது மதிப்புக்குரிய தலைவர்களுக்கிருக்கும் உண்மையான பற்று என்னைப் போன்றவர்களுக்கும் இருப்பதால்தான் சொல்லுகிறேன்.

முதலில் பரீட்சைசெய்து பார்க்கவும்

அரசாங்கத்துக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்தப் பரிசோதனையை நாடு முழுவதும் ஒரே சமயத்தில் நடத்துவது என்பதைக் கைவிட்டு, குறிப்பிட்ட சில இடங்களில் பரீட்சார்த்தமாகச் சில கூட்டுப்பண்ணை சங்கங்களை நிறுவி, சில ஆண்டுகளுக்குச் செயலாற்றட்டும். அவற்றின் அனுபவங்களையும் பலன்களையும் கவனித்து அவை வெற்றிகரமாக நடந்தால், அவ்வெற்றியே இம்முறையினை விஸ்தரிப்பதற்குப் போதிய பிரசாரமாக அமையும். தொண்டை உலரக் கத்த வேண்டிய அவசியமே இருக்காது.

விவசாயிக்கு எல்லாவித உதவியும் தேவை என்பதில் சந்தேகமில்லை. சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையைப் பற்றி ஆட்சேபமே இருக்க முடியாது. எத்தனை இடங்களில் முடியுமோ அத்தனை இடங்களில் இவற்றை ஆரம்பித்து வைக்கட்டும். அவை யெல்லாம் சரிவர செயல்புரிகின்றனவா என்பதையும் கண்காணிக்கட்டும். இந்தத் துறையில் அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைக்கும் மக்கள் நன்றியை செலுத்துவார்கள். அது வரையில்தான் செய்ய வேண்டும்; அதற்கப்பால் போகக் கூடாது. அதுவே விவேகம்.



வேங்கையின் மைந்தன்

பத்தொன்பதாம் அத்தியாயம்

இரத்தமும் கண்ணீரும்

விண் மீன்கள் சிந்திய ஒளிக் கலவையினால் அமாவாசை இரவு கூட ஒருவகையில் அழகாகத் தான் இருந்தது. ஆனால் அந்த அழகைக் கண்டு களிக்கக் கூடிய மன நிலையில் அப்போது வந்தியத் தேவர் இருக்கவில்லை. இருளில் அவர் கண்ட காட்சி முதலில் அவரைத் திடுக்கிட வைத்தது; பின்னர் வியப்புறச் செய்தது.

ரகசிய வழியின் அருகில் நின்று கொண்டிருந்த ஆண் பிள்ளையின் உருவம் அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. என்றாலும் அவன் ரோகணத்து வீரனாகத்தான் இருக்க வேண்டுமென்று கணித்தார். முன்னேற்பாடான திட்டத்தோடு, ஒரு வேளை அமைச்சர் கீர்த்தியே மீண்டும் வந்திருக்கக் கூடுமென்று அவருக்குத் தோன்றியது.

ஆனால், ரோகணத்தைச் சார்ந்த மனிதனாக இருந்தால், ஏன் அவளைக் கண்டவுடன் இடையிலிருந்த உடைவாளை உருவுகிறான்? கொடிய கொலைபாதகனைப் போல் கழுத்தருகில் கத்தி முனையை நீட்டி விட்டானே!

கொடுமையை எதிர்பார்த்து, அதைத் தடுப்பதற்குத் துடித்துக் கொண்டிருந்த வல்லவரையருக்கு, அதைத் தடுக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. கொடுமைக்குப் பதிலாக அங்கே ஒரு குதூகலமான காட்சியின் துவக்கத்தைக் கண்டார். அவருடைய கால்கள் பின் நோக்கி நகர்ந்தன. சந்தடியின்றி ஒரு மறைவிடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தம் கண்களுக்கும் செவிகளுக்கும் வேலைகொடுக்கத் தொடங்கினார்.

அங்கே நின்று கொண்டிருந்தவன் வேறு யாருமில்லை; அவருடைய அருமைப் பேரன் இளங்கோ!

மூடப்பட்ட வாயிற் கதவுகள் மூடியபடி இருக்க, அவன் அங்கே எப்படி வந்திருப்பான் என்று ஒரு கணம் யோசித்தார். சிறிது நேரத்துக்கு முன்பு மாடத்தின் மேல் எழுந்த சத்தம் அவர் நினைவுக்கு வந்தது. இப்போது அவருடைய தலைக்குமேல் ஒரு நூலேணி தொங்கிக் கொண்டிருந்தது. இரண்டுக்கும் முடிச்சப் போட்டு நடப்பைத் தெரிந்து கொண்டார் வந்தியத்தேவர்.

'ஆ!' என்று அந்தப் பெண் பிள்ளை பயத்தினால் எழுப்பிய கூச்சலைக் கேட்டவுடன் இளங்கோவும் பயந்து விட்டான். அவனது கேழுதட்டைத் தாங்கிக் கொண்டிருந்த அவனுடைய உடைவாளின் முனை நடுங்கியது. அவசரம் அவசரமாக அதை

உறைக்குள் போட்டுக் கொண்டான். அவளை உற்றுப் பார்த்தான்.

அழகும் பயங்கரமும் அந்த இரவில் ஒன்று கூடியிருந்தது போலவே, அவள் தோற்றத்திலும் அழகும் பயங்கரமும் இரண்டறக் கலந்திருந்தன.

வாள் முனைக்கு அஞ்சி ஒரே ஒரு கணம் மேலே உயர்ந்த அவளுடைய தலை மறு கணமே கீழே கவிழ்ந்து கொண்டது. இலேசாக அவள் உடல் அச்சத்தால் நடுங்குவதைக் கண்டான் இளங்கோ. அவளிடம் தன்னால் பயத்தை எழுப்ப முடியும் என்ற நினைவு அவனுக்குத் துணிவைத் தந்தது. அவள் இப்போது சாகசக்காரியல்ல; பயந்தவள்.

"பெண்ணே! உண்மையைச் சொல்லி விடு; யார் நீ? இந்த நேரத்தில் தன்னந் தனியே எங்கே போகிறாய்?"

அவள் உண்மையையும் சொல்லவில்லை; பொய்யையும் சொல்லவில்லை. ஒன்றுமே சொல்லாமல் வாய் மூடி மௌனம் சாதித்தாள்.

அவன் தன் குரலைக் கடுமையாக்கிக்கொண்டு அவளை நெருங்கினான். "சொல்கிறாயா? இல்லை, உன்னைச் சொல்ல வைக்கட்டுமா?"

இரவும், தனிமையும், அவன் குரலின் கடுமையும் அவளை வாய் திறக்க வைத்தன. "நான் பட்ட மகிஷியின் தாதி; எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை" என்றாள்.

"பாவம், நீ என்ன செய்வாய்!" என்று அநுதாபம் கொள்வது போல் பரிகசிக்கத் தொடங்கினான் இளங்கோ. "மன்னரும் அவர் மகனுமே தப்பி விட்டார்கள்; இளவரசியும் மாயமாய் மறைந்து போனாள்; பிறகு நீயும் போக வேண்டியதுதானே? அது சரி, யார் நீ? அந்த ஒன்றரைக் கண்..."

'ஆமாம்' என்னும் பாவனையில் தலையசைத்தாள் அவள். இளங்கோவின் இதழில் மின்னிய குறும்புப் புன்னகையை அவள் கவனிக்கவில்லை.

"பயங்கரம்!" என்றான் கேலிக் குரலில் இளங்கோ. "இந்த ரோகணத்தில் எத்தனையோ அழகிகள் இருக்கும் போது, உன்னைப் போய்த் தேடிப் பிடித்தார்கள் பார், அதை நினைத்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது. உலகத்திலுள்ள அவலட்சணத்தையெல்லாம் ஒன்றாய்த் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறாயே. பாவம், நீதானா அவர்களுக்கு அகப் பட்டாய்? இதோ பார், பாட்டி! இந்தத்






தள்ளாத வயதில் நீ இப்படியெல்லாம் செய்யக் கூடாது. நல்ல வேளை, இருட்டாயிருப்பதால் உன் பக்கத்தில் நிற்க முடிகிறது என்னால். உன் முகத்தைப் பார்த்து விட்டேனோ..."

நகைக்கத் தொடங்கினான் இளங்கோ. எவ்வளவுக்கு அதிகமாக அவள் தோற்றத்தைப் பரிகசிக்க முடியுமோ அவ்வளவும் செய்தான். அவளும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். பொறுக்க முடியவில்லை. பொறுக்க முடியாத போது மற்ற எல்லாப் பெண்களும் என்ன செய்வார்களோ அதையே அவளும் செய்து விட்டாள். கண்ணீர் பெருக்கினாள்!

பெருகிய கண்ணீர் அவள் கன்னங்களை நனைத்தது. விம்மலும் தேம்பலும்



ஒன்றன் பின்னொன்றாகத் தொடர்ந்தன. தலையை மறைத்திருந்த துகிலால் தன் முகத்தை அழுந்தித் துடைத்துக் கொண்டாள். அவள் துடைத்த துடைப்பில் அவளுடைய நடிப்பின் சின்னங்கள் போன இடம் தெரியவில்லை. சுருக்கங்கள், கோடுகள், ஒன்றையுமே இப்போது காணோம்.

இளங்கோ இளகி விட்டான். கண்ணீர் அவன் மனத்தைக் கரைத்து விட்டது. அவளுடைய அழுகையை நிறுத்துவதற்கு வழி தெரியாது அவன் தவிக்கலானான். அவனுடைய தவிப்பைக் கண்டு வானத்து மீன்கள் தங்களுக்குள் கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்டன.

"ரோகிணி!" என்று கனிவு ததும்பும் குரலில் அழைத்தான் இளங்கோவேள். "ரோகணத்து இளவரசி!"

'வந்தது ஆபத்து!' என்று நினைத்துக் கொண்டு இப்போது வல்லவரையர் தவிக்கத் தொடங்கினார். மீண்டும் மீண்டும் அவன் அவள் பெயரைச் சொல்லி அழைக்கவே அவருடைய தவிப்பு பன்மடங்காயிற்று!

சிறிது சிறிதாக அவள் முகத் திரை நழுவியது. சிறிது சிறிதாக அந்த அமாவாசை இரவைக் கிழித்துக் கொண்டு ஒரு நிலா உதயமாகியது. சிறிது சிறிதாக அது மேலே எழும்பி வந்தது. அவனுடைய முகத்துக்கு நேராக வந்த பிறகும் கூட அது அங்கே நிற்கவில்லை. இன்னும் மேலே, இன்னும் மேலே உயர்ந்து அது வானத்தை அண்ணாந்து பார்த்தது.

அமாவாசை இரவில் பூரண சந்திரோதயமா! அந்தச் சந்திர வட்டத்தில் இரு வைரமணித் தாரகைகளா!

அவள் அவன் முகத்தைப் பார்க்கவே இல்லை. அவனோ அவள் முகத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. அந்த நிலவு வட்டம் அவனைத் தன்னோடு வான வெளிக்கே தூக்கிக் கொண்டு போகப் பார்த்தது.

நாகத்தின் சீற்றத்தைப் போல் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் அவள்.

அவனுடைய விழிகள் வானத்தில் மின்னும் மீன்களின் கூட்டத்துடன் ஒன்றி உறவாடி லயித்து விட்டன. அருகில் ஒருவன் நின்று கொண்டு தன்னையே விழுங்குவதுகூட அவளுக்கு நினைவில்லை போலும். அந்த உயிர்ச் சிற்பம் ஏன் அப்படி நிற்கிறதென்று இளங்கோவுக்கும் விளங்கவில்லை.

'என் அழகைக் குறை கூறினாயே, என் இளமையைப் பழித்தாயே, என் பருவத்தைப் பரிகசித்தாயே, இப்போது என்னை உற்றுப் பார்!' என்று கூறாமல் கூறுகிறாளா? தன் வண்ண முகத்தை, அதன் வைரமணிக் கண்களை, கார்மேகக் கருங் கூந்தலை என் கண்களில் பதிய வைக்கிறாளா? பிறகு ஏன் மரமாக, சிலையாக, சுவராக நிற்கிறாள்?

பகல் பொழுதில் தன்னை ஆட்டி வைத்து அலைக்கழித்த அதே பெண்தானா இவள் என்ற சந்தேகம்கூட மூளைவிடத் தொடங்கியது இளங்கோவின் மனத்தில். பகலுக்கும் இரவுக்கும் உள்ள மாற்றத்தைப் போலவே இவளுடைய மாற்றமும் இருக்கிறதே! பிற்பகலில் சிரித்த சிரிப்புக்கள், பழித்த பழிப்புக்கள், செய்த சாகசங்கள் இவை யாவும் இப்போது எங்கே போய் விட்டன?

செயலிழந்து, வலுவிழந்து, சொல்லிழந்து நிற்கும் அவளுடைய தோற்றம் இளங்கோவைப் பாகாய் உருக்கிவிட்டது. "ரோகிணி! உனக்கு நான் ஒரு தீங்கும் செய்ய மாட்டேன். நீ எங்கே புறப்பட்டாய் என்பதைமட்டும் சொல்லிவிடு" என்று கனிவோடு கேட்டான்.

அவள் எள்ளி நகையாடுவதைப் போல் சிரித்தாள். மின் வெட்டும் நேரத்தில் அவளுடைய அழகை அலட்சியச் சிரிப்பாக மாறிவிட்டது. "எதற்காக இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்? நான் மறுமொழி சொல்வேனென்று எதிர்பார்க்கிறீர்களா?"

"என்னுடைய அன்பை நீ புரிந்து கொள்ளவில்லை, ரோகிணி!"

"ஓ! அரை விநாடிக்குள் அன்பு பிறந்து விட்டதா உங்களுக்கு? வான் முனையின் வேகத்தில் மின்னிப் பாய்கிறதே உங்கள் அன்பு!" என்று அவள் மீண்டும் சிரித்தாள்.

முகத்தில் ஓங்கி அறைவதைப் போல் இருந்தது இளங்கோவுக்கு. "ரோகிணி! எனக்குக் கோபமூட்டாதே!" என்றான்.

"இதோ பாருங்கள், உங்கள் அன்பின் அடையாளத்தை!"—கீழுதட்டில் தன் ஆள்காட்டி விரலை வைத்து வழித்து அவனிடம் விரலின் நுனியைச் சுட்டிக் காட்டினாள். அந்த விரலின் நுனியில், அன்றொரு நாள் அவனுக்கு அருள்மொழி நங்கை வெற்றித் திலகமிட்டு விட்டாளே, அந்தத் திலகத்தின் துளி ஒட்டிக் கொண்டிருந்தது!

ஒரு சொட்டுச் செவ்விரத்தம்!

உச்சியிலிருந்து உள்ளங் கால் வரையில் அவனுடைய நாடி நரம்புகளிலெல்லாம் மின்னல்கள் பாய்ந்தன. அவன் எதிரில் அப்போது ரோகிணி நின்று கொண்டிருக்கவில்லை. சோழசாம்ராஜ்யத்தின் இளவரசி அருள்மொழி நின்று கொண்டு, தன் விரலில் பட்ட திப்புண்ணுக்காக மருந்து போடச் சொல்கிறாள்! அவனுடைய நெற்றியில் வீரத் திலகமிட்டுவிட்டு, அந்தத் திலகத்தின் துளியைச் சுட்டிக் காட்டுகிறாள்!

அவள் ரோகிணியல்ல; அருள்மொழி.

"என்னை மன்னித்து விடு பெண்ணே, மன்னித்து விடு!" என்று அலறினான் இளங்கோ. அவன் கண்களில் கண்ணீர்த் துளிகள் வெடித்துப் பொல பொலவென்று உதிர்ந்தன.

யாரிடம் மன்னிப்புக் கேட்டோம் என்று இளங்கோவுக்கே விளங்கவில்லை. 'பெண்ணே!' என்று அழைத்தது யாரை என்றும் அவனால் தீர்மானிக்க முடியவில்லை. தொலைதூரத்தில் இருந்து கொண்டு இப்போது அவன் மனக் கடலில் எழும்பி வந்த அருள்மொழியிடம் மன்னிப்புக் கோரினானா? அல்லது எதிரில் ரத்தமும் சதையுமாய், ஊனும் உயிருமாய், இளமையும் எழிலுமாய் நின்று கொண்டிருந்த இளவரசி ரோகிணியிடம் கேட்டானா?

யாரிடம் அவன் மன்னிப்புக் கோரியிருந்தாலும், ரோகிணி அதைத் தன்னிடம் கேட்டதாகவே எடுத்துக் கொண்டாள். தான் சிந்தும் ஒரு சொட்டு ரத்தத்துக்கு இவ்வளவு ஆற்றல் இருக்கும் என்று அவள் இதற்கு முன்பு நினைத்ததே இல்லை. வெற்றி கொண்டுவிட்ட வேற்று நாட்டு வீரன் ஒருவன், தன்னை அடிமையினும் அடிமையாக நடத்த வேண்டியவன் தனக்காக எத்தனை சொட்டுக் கண்ணீர் உதிர்த்து விட்டான்! ஒவ்வொரு அணுத் துளி ரத்தத்துக்கும், முத்தைப் போன்ற ஒரு முழுத் துளிக் கண்ணீரா! என்ன மாயம் இது?

அந்த மாயமோகினி தன் வலிமையை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டாள். அந்த வலிமையை உணர்த்தியவனிடம் முதல் முறையாக அவள் உள்ளத்தில் நன்றி உணர்ச்சி பெருக்கெடுக்கத் தொடங்கிற்று. அது வரையில் அவனை ஏறிட்டுப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தவள் அவனது கண்களை ஊடுருவி நோக்கினாள்.

அவனுடைய கண்ணிமைகள் படபடத்தன. இதழ்க் கோணத்தில் ஒரு புன்னகை அரும்பி, பிறகு மொட்டாகி, போதாகி, மலராகி மடலவிழ்ந்தது. பெருமை தாங்காமல் அவன் தன் மார்பகம் விம்மப் பெருமூச்சு விட்டான்.

"கொடும்பாளூர் இளவரசே!" என்று தன் வாய் நிறைய அழைத்து, "நான் நினைத்ததைப் போல் நீங்கள் அவ்வளவு கொடியவரில்லை. அரைக் கணத்தில்கூட அன்பு பிறக்க முடியும் என்பதை நீங்கள் மெய்ப்பித்து விட்டீர்கள். பாவம்! உங்களுக்கு நான் எவ்வளவு தொல்லை கொடுத்து விட்டேன்!" என்றாள்.

பாவம், இளங்கோ! ரோகிணியின் மாற்றத்தைக் கண்ட பிறகு அவனுக்கு இந்த உலகமே மறந்து போய் விட்டது. அருள்மொழியோ, அவன் இட்டுவிட்ட இலகமோ, சற்று முன்பு எழுந்த அவன் நினைவுச் சுழலோ எதுவும் இப்போது அவன் மனத்தில் இல்லை. அவனுடைய ஐம்புலன்களையும் அந்தக் கணத்தில் ரோகணத்து இளவரசி அடிமையாக்கி விட்டாள். வென்றவன் தோற்றுப் போனான்.

பிறகு இளங்கோ அவளிடம் ஏதேதோ உளறிக் கொட்டினான். அவளும் பதிலுக்கு உளறினாள்.

இருளில் மறைந்து கொண்டிருந்த வல்லவரையருக்கு இளங்கோவின் மீது கோபம் பற்றிக் கொண்டு வந்தது. அந்த இடத்தில் அவருக்கு இருக்கவும் பிடிக்கவில்லை; அதை விட்டு அகலவும் மனமில்லை. 'முட்டாள்! முதலில் இவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்க் காவலில் வைக்க வேண்டும்!' என்று தமக்குள் முணுமுணுக்கலானார்.

அடுத்தாற் போல் அவருடைய இளமைப் பருவம் அவர் மனக் கண்ணில் விரிந்தது. தமது மனைவியர் இருவரையும், அவர்கள் அன்புக்குத் தாம் அடிமையாகியதையும் நினைத்துக் கொண்டார். கோபம் தணிந்து, 'பாவம், குழந்தைகள்' என்று அனுதாபப்படும் நிலைமைக்கு வந்து விட்டார்.

"சரி, திரும்பிப் போகலாமா?" என்று ரோகிணி இளங்கோவிடம் கேட்பது வல்லவரையரின் செவிகளில் விழுந்தது.

இதைக் கேட்டவுடன் அவர் மெதுவாக எழுந்தார்; சந்தடி செய்யாமல் தாம் வந்த வழியே திரும்பினார். அவர் அங்கு வந்ததையோ, இருந்ததையோ மறைந்ததையோ மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

"தப்பியோட முயன்றவர்களுக்கு மாமன்னர் என்ன தண்டனை விதிப்பார், தெரியுமா?" என்று கேட்டான் இளங்கோ சிரித்துக் கொண்டே.

"கொலை செய்ய முயன்றவர்களுக்கு என்ன தண்டனை என்று முதலில் சொல்லுங்கள்" என்றாள் ரோகிணி.

"ஏன் கேட்கிறாய்?"

"நீங்கள் என்னைக் கொல்ல முயன்றதாக உங்கள் மன்னரிடம் முறையிடப் போகிறேன்!"

"அப்படியா? நீ என்னைக் கொன்று விட்டதாகவே நானும் முறையிடுவேன்" என்றான் இளங்கோ. "உண்மையில் நீ என் உயிரையே கவர்ந்துகொண்டாய்; நீ கொலைக் குற்றவாளிதான்!"

கலகலவென்ற கூட்டுச் சிரிப்பொலி, மதிலுக்கு அப்பால் அந்தப்புரத்துக்குள் நின்று கொண்டிருந்த வல்லவரையரின் செவிகளுக்கு எட்டியது.

இருபதாம் அத்தியாயம்

ஏமாற்றம்

ரோகணத்துப் பெண் எலி, தான் எந்த வளைக்குள்ளே புகுந்து வெளியேறப் பார்த்ததோ, அதே வளைக்குள் மீண்டும் நுழைந்து உள்ளே போக முயன்றது. "என் பின்னால் வாருங்கள்" என்று இளங்கோவை அழைத்துக் கொண்டே, மதிலுக்கு அருகில் சென்று மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

"நூலேணியில் ஏறிப் போகலாம், வா!" என்றான் இளங்கோ.

"இந்த வழியில் போனால் என்ன?"

"வேண்டாம்; நீ முன்னே சென்றாலும் தொல்லை; பின்னால் வந்தாலும் தொல்லை. முன்னே சென்றால் எங்காவது இருளுக்குள்ளே மறைந்து விடுவாய். பின்னால் வருவதும் நிச்சயமில்லை. இந்த நேரத்தில் நீ ஓடுவதும் நான் பிடிப்பதுமாக இருந்தால் நன்றாக இருக்காது. பேசாமல் நான் சொல்வதைக் கேள்."

"இன்னும் என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையே!" என்றாள் ரோகிணி.

"எப்படி நம்புவது? நீ எங்கே புறப்பட்டாய் என்ற கேள்விக்கு இன்னும் உன்னிடமிருந்து மறுமொழி கிடைக்கவில்லை. உன் வரையில் நீ சாமர்த்தியமாக இருக்கும் போது, என்னை மட்டும் ஏமாறச் சொல்கிறாயா?"

"நீங்கள் ஒன்றும் என்னிடம் ஏமாற வேண்டாம்!" என்று சிணுங்கிக் கொண்டே அவனோடு சென்று, அவன் கட்டிக் காட்டிய நூலேணியில் மளமள வென்று ஏறினான். இளங்கோவும் அவனைப் பின்பற்றினான்.

"ஆமாம்; நேர் வழியில் கதவைத் திறந்து கொண்டு வராமல் நீங்கள் ஏன் இப்படி வந்தீர்கள்?" என்று கேட்டான் ரோகிணி.

"அது வரையில் நீ பொறுத்துக் கொண்டா இருந்திருப்பாய்?"

"திரும்பும்போதாவது நேர் வழியில் போகலாமல்லவா? கீழே இறங்குகிறீர்களா? எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லை" என்று பாதி தூரம் ஏறிய பிறகு, நூலேணியிலிருந்து கொண்டே கேட்டான் ரோகிணி.

"இந்த வேளையில் நீயும் நானும் தனியாக நின்று கொண்டு கதவைத் தட்டினால் என்னுடைய கும்பகர்ணத் தாத்தா என்ன நினைப்பார், தெரியுமா?"

"கும்பகர்ணத் தாத்தாவா?"

"ஆமாம், உங்களுக்குக் காவலாகப் படுத்து உறங்குகிறாரே அவரைச் சொல்கிறேன். இலங்கைக்குவந்தபிறகு அவரும் கும்பகர்ணனாகி விட்டார். காவல் காத்துக் கொண்டிருந்த அழகைப் பார்த்தாயல்லவா?"

நூலேணி மாடத்தைத் தொடும் இடத்துக்கு வந்தவுடன் ஒரே தாவில் மேலே ஏறிக் கொண்டான் ரோகிணி. அங்கிருந்து கொண்டே முக்கால் பகுதிக்கு வந்து விட்ட இளங்கோவைப் பார்த்து, "வீரரே! சிறிது நேரம் அப்படியே இருந்து நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்" என்றான்.

"என்ன?"

"என்னை நீங்கள் நம்பவில்லையா! நான் நம்பக் கூடாதவன்தான். அதை இப்போது தெரிந்து கொள்ளப் போகிறீர்கள். உங்கள் இஷ்ட தெய்வத்தை நினைத்துக் கொள்ளுங்கள். ஏணியை இப்படியே கழற்றிவிடப் போகிறேன்!"

இதைக் கேட்டவுடன் இளங்கோவின் ஒரு கைப்பிடி தானாகவே தளர்ந்தது. கீழே குனிந்து பார்த்தான். இருள்மூடிக் கிடந்த தரை, கிணற்றின் அடிவயிற்றைப்போல் அதல பாதாளமாகக் காட்சி யளித்தது. கீழே விழுந்தால் தன்னை அடையாளம் கூடக் கண்டு பிடிக்க முடியாது என்று உணர்ந்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டுச் சிரித்தான் ரோகிணி.

கொலைச்சிரிப்பா அது? கொலைகாரியா அவன்? ஐயோ, ஏமாறவில்லை என்று நினைத்துக் கொண்டே இவனிடம் ஏமாந்து போனேனே!

"சொல்வதற்கு என்ன இருக்கிறது? கழற்றிவிடு! உன் பெயரைச் சொல்லிக் கொண்டே சாகிறேன்! நீதான் இப்போது என் இஷ்ட தெய்வம்."

அவனுடைய இஷ்ட தெய்வம் சிறிது அவனுக்குப் பயம் காட்டி விட்டு, நூலேணியை இறுக்கமாகப் பற்றிக் கொண்டது. பிறகு அவன் மாடத்தை நெருங்கும் சமயத்தில் அவனுக்குத் தன் கையைக் கொடுத்து உதவி செய்தது. அவனுடைய கரம், மென்கரமென்றாலும் பொன்கரம். அத்தனை உறுதி இருந்தது அதில்.

"பயந்து விட்டீர்களல்லவா?"

"உன்னைக் கண்டது முதலே எனக்கு உன்னிடம் பயந்தான்!"

சந்தடி செய்யாமல் படிகளில் இறங்கி அவர்கள் கீழே வந்தார்கள். வடக்கு வாயிலை நெருங்கியவுடன் ரோகிணி ஒரு கணம் அங்கே தாமதித்து, இடது புறத்துக் கல் யானையை அவனுக்குத் தெரியாமல் நோக்கினான். அவன் அப்படிப் பார்ப்பதை இளங்கோவும் அவனுக்குத் தெரியாமல் கண்காணித்தான்.

"ஆமாம், நீங்கள் எப்போது என்னைக் கண்டு பிடித்தீர்கள்?"

அவன் எதற்காகக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட இளங்கோ, "மதில் சுவரில் யாரோ கன்னக்கோல் வைப்பதைப் போல் சத்தம் கேட்டது. விழித்துக் கொண்டு எட்டிப் பார்த்தேன். கால்கள் மட்டிலும் வெளியில் தெரிந்தன. தலையைக் கொய்து கொண்டு போய் மாமன்னரின் திருவடிகளில் வைப்பதற்காக ஓடோடியும் வந்தேன்" என்றான்.

"ஓ!" என்று சொல்லிக் கொண்டே ஓரக் கண்களால் திரும்பவும் யானையைக் கவனித்தான் ரோகிணி. இளங்கோவுக்கு ஏற்கனவே நடந்த நடப்புக்களில் ஒரு பாதி தெரியும். வல்லவரையர் அவன் கண்களில் படவில்லையே தவிர, ரோகிணியின் செய்கைகள் ஒவ்வொன்றையும் அவன் பின்பற்றி வந்தான். மதிலுக்கு வெளியே அவன் அவனுடன் பேசிக் கொண்டிருந்த போது கூட, அவன் மனம் அடிக்கடி யானையின் அடிவயிற்றை வட்டமிட முற்பட்டது.

"சற்று நேரம் இங்கே அமர்ந்து பேசி விட்டுச் செல்வோமா!" என்றான் இளங்கோ.

"உங்கள் தாத்தா விழித்துக் கொள்ள மாட்டாரா?"

"மெதுவாகப் பேசுவோம்; அப்படியே விழித்துக் கொண்டாலும் பாதகமில்லை.

உன்னிடம் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லப் போகிறேன்.''

"சீக்கிரம் சொல்லுங்கள்!'' என்று, யானைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள் ரோகிணி. மெதுவான குரலில் பேசுவதற்காக அவனும் அவளருகில் நெருங்கி அமர்ந்தான்.

"இதோ பார், நீ ஈழநாட்டுப் பெண்; நான் தமிழ்நாட்டில் பிறந்தவன். இருந்தாலும் நமக்குள்ளே பகைமையில்லை, விரோதமில்லை, வெறுப்பில்லை.''

குபீரென்று கொட்டிச் சிதறுவது போல் வெளிவந்த சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் ரோகிணி. "பகைமையில்லாமல்தான் பல்லாயிரம் பேர் பட்டப் பகலில் உயிரை விட்டிருக்கிறார்கள் போலும்! உங்கள் உடைவாளைக் கேட்டுப் பாருங்கள்; எத்தனை பேரின் இரத்தத்தை அது சுவைத்திருக்கிறது என்ற கதையைச் சொல்லும்.''

"குறுக்கே பேசாமல் முழுவதையும் கேட்டு விட்டுப் பிறகு சொல்'' என்று மேலே கூறினான் இளங்கோ.

"நாங்கள் நாடாசை பிடித்து, ரோகணத்தைக் கட்டியாள வேண்டுமென்பதற்காக இங்கே வரவில்லை. எங்களைச் சார்ந்தவர்களும் எண்ணிலடங்காதவர்கள் இந்த மண்ணில் பலியாகியிருக்கிறார்கள். எங்களுக்கு உரிய பொருளை நாங்கள் கேட்கிறோம். எங்கள் நாட்டு மணி முடி அது. அதைத் திருப்பிக் கொடுத்து விடுவதால் உங்கள் பெருமை சிறிதும் குறைந்து விடாது. நீங்கள் இன்னும் அதிகமான புகழ் பெறுவீர்கள். மாபெரும் சோழ சாம்ராஜ்யத்தின் நட்பும் துணையும் உங்களுக்கு என்றைக்கும் கிடைக்கும். மகிந்தரிடமே இந்த நாட்டை மீண்டும் ஒப்புவித்து விடுவோம். இன்னும்...''

"மேலே சொல்லுங்கள்; ஏன் நிறுத்தி விட்டீர்கள்?'' என்றாள் ரோகிணி.

"இன்னும்....இளவரசி!...பகைமைக்குக் காரணமே இல்லாமல் நாம் பகைமையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். பாண்டியர்களுக்கும் ஈழ நாட்டவர்களுக்கும் பரம்பரை பரம்பரையாய்த் திருமண உறவு வளர்ந்து வந்திருக்கிறது. அதே உறவு....உனக்குப் புரிகிறதா ரோகிணி?''

"நீங்கள் பெரிய பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசுகிறீர்கள். நான் ரோகணத்து மன்னர் மகிந்தருமல்ல; நீங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ராஜேந்திரருமல்ல.''

"சக்கரவர்த்திகளின் கருத்தையே நான் இங்கு சொல்கிறேன். உன்னிடம் சொன்னால் உன் தந்தையாரிடம் நீ எடுத்துச் சொல்லலாமல்லவா?''

தந்தையார் என்ற சொல்லைக் கேட்டவுடன் தாரைதாரையாகக் கண்ணீரைப் பெருக்கினாள் ரோகிணி. "தந்தையாரின் நினைவை ஏன் இந்த வேளையில் கிளறுகிறீர்கள்? நீங்கள் கொடுங்கோலர்கள்! இரக்க சித்தமில்லாதவர்கள்! பழிபாவத்துக்கஞ்சாதவர்கள்!''

இளங்கோ திடுக்கிட்டான். 'மன்னர் மகிந்தர்' என்ற சொற்கள் அவள் வாயாலேயே வெளி வந்தன. ஆனால் 'தந்தையார்' என்ற உறவு முறைச் சொல்லாக அது மாறியவுடன் இவனும் கணத்தில் மாறி விட்டானே!

"ரோகிணி! என்ன இது?''

"தாயிடமிருந்து கன்றைப் பிரித்து வைப்பது போல் என்னை அவரிடமிருந்து



பிரித்து விட்டு, என்னிடமே அவரைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லை?''

"நாங்கள் பிரித்தோமா!''

"பேசாதீர்கள்!'' என்று சொல்லி விட்டு இருப்பிடத்தை விட்டு எழுப் போனாள் ரோகிணி. திரும்பவும் அவளைச் சுய நினைவுக்குக் கொண்டு வருவதற்குள் இளங்கோவின் பாடு பெரும்பாடாகப் போய் விட்டது. தந்தையின் மீது அவளுக்கிருந்த பாசம் தாய்ப்பாசத்தையும் மிஞ்சியது என்பதையும், ஒரு வேளை அவள் தன் தந்தையிடம் போய்ச் சேருவதற்காகவே இரவோடு இரவாகப் புறப்பட்டிருக்கலாமென்பதையும் அவன் ஊகித்துக் கொண்டான்.

"ரோகிணி! உன் தந்தையாரிடம் உன்னைச் சேர்த்துவிட வேண்டியது என் பொறுப்பு. இந்த ஒரு விஷயத்திலாவது நீ என்னை நம்பு.

"மணிமுடியைக் கைப்பற்றாமல் நாங்கள் இந்த மண்ணிலிருந்து நகர மாட்டோம். இந்த மண்ணோடு மண்ணாக நாங்கள் அனைவரும் மக்கி மடிந்தா

லும் எங்கள் உறுதி இதில் தளரப்போவதில்லை. வீணாகப் பகைமையை வளர விட்டுப் பிறகு நாங்கள் வெற்றி பெறுவதைவிட, இப்போதே நீங்கள் மனமுவந்து அதைக் கொடுத்து விடுவது நல்லது....ரோகிணி! நினைத்தால், நீயே உன் அழகான கரங்களால் அதைக் கொடுத்து விடலாம்."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"—ஒன்றும் புரியாமல் வினவுவது போல் விழித்தாள் ரோகிணி.

இளங்கோவுக்கு யானையின் வயிற்றுக்குள் இருப்பது மணிமுடிதான் என்ற எண்ணம் எப்படியோ ஏற்பட்டு விட்டது. அது தன் கையில் கிடைத்து விட்டதாகவே அவன் முடிவு கட்டிக் கொண்டான். மணிமுடியைத் தேடி வந்தவனுக்கு அது இவ்வளவு எளிதில் கிடைத்து விடவே, அளவற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. அத்துடன் அவன் திருப்தியுறவில்லை.



அவளுடைய பொன் வண்ணக் கரங்களால் அவளாகவே அதை எடுத்துக் கொடுக்க வேண்டும்! அப்படிக் கொடுத்ததற்குப் பிரதியாக மாமன்னரிடம் சொல்லி அவளை அவன் தந்தையாரிடம் 'சேர்ப்பிக்க வேண்டும்! தந்தையாரிடம் சேர்ப்பித்து விட்டு, பிறகு எல்லோருடைய சம்மதத்தையும் பெற்று அவளைக் கொடும்பாளூருக்கே அழைத்துச் சென்றுவிட வேண்டும்!

ஆசைக்கோர் அளவேது? கற்பனைக் கனவுகளுக்கோர் கடிவாளமேது?

"ரோகிணி! இப்போதே நீ அதைக் கொடுப்பாயானால், எடுத்துக் கொடுக்கும் கரங்களை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். கொடுக்கும் கரங்களைப் பற்றி என் கண்களில் ஒற்றிக் கொள்வேன்!" என்றான் இளங்கோ.

"கொடும்பாளூர் இளவரசே! உங்கள் சித்தம் கலங்கிப் போயிருக்கிறதோ?" என்று துடுக்குத்தனமாகக் கூறினாள் ரோகிணி. "பல இரவுகள் கண்விழித்துக் கனவு கண்டதால் நீங்கள் என்னவெல்லாமோ பேசுகிறீர்கள்!"

"எங்களுடைய நாட்டில் வீரர்களிடையே ஒரு பழக்கம் உண்டு. அதை மட்டும் கேட்டு விட்டு உன் முடிவுப்படி செய்து கொள். அதைக் கேட்ட பிறகும் உன் மனம் மாறாவிட்டால், உன்னுடைய அன்பு இவ்வளவுதான் என்பதை உணர்ந்து கொள்ளுகிறேன்."

"என்ன வழக்கம் அது?"

"'இன்னது செய்வேன்; செய்யாவிடில் செத்து மடிவேன்' என்று காளி கோயிலுக்குப் போய் சபதம் செய்து கொண்டு வருவார்கள். செய்து முடித்தால் வெற்றி விழா நடக்கும். இல்லையேல் தங்கள் சிரங்களைத் தாங்களே அரிந்து கொண்டு, தங்களைக் காளி தேவிக்குப் பலிதானமாக்கி விடுவார்கள்.—நானும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்தான். என்னுடைய நிலைமை உனக்குப் புரிகிறதா, ரோகிணி?"

அவள் நீண்ட நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர, அவளுடைய பார்வையிலிருந்து எண்ணங்கள் ஒன்றும் வெளிப்படவில்லை. இளங்கோவுக்கு இது பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. சற்று நேரத்துக்கு முன்பு அவள் நடந்து கொண்ட விதத்தையெல்லாம் தன் நினைவுக்குக் கொண்டு வந்தான். அவ்வளவும் வெறும் சாகசந்தானா? நடிப்புத்தானா?


இன்னும் அவள் இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. யானையின் தந்தங்களைத் திருகிக் கழற்றவில்லை. உள்ளே இருக்கும் பேழையைத் தன் மென் கரங்களால் எடுத்து அவனிடம் நீட்டவில்லை.

'காளிதேவியின் சந்நிதியில் உன்னை நீயே பலி கொடுத்துக் கொண்டால் எனக்கென்ன வந்தது?' என்று அலட்சியமாக இருக்கிறாள் போலும்! என்ன இருந்தாலும் வேற்று நாட்டுப் பெண் வேற்று நாட்டுப் பெண்தான்.

"நேரமாகிறதே!" என்றான் அவன்.

வெறுப்பு நிறைந்த நெஞ்சோடு அவனைக் கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டுக் கதவைத் தாழிட்டாள். வல்லவரையர் முன்போலவே அப்போது உறங்கும் கோலத்தில் இருந்தார். களைப்புடன் சிறு பொழுதை வடக்கு வாயில் படிகளில் கழித்து விட்டு, மெல்ல மெல்லக் கல் யானையின் அடி வயிற்றைத் திறந்து பார்த்தான் இளங்கோ.

அடி வயிற்றுக்குள்ளேயிருந்த சிறு அறை இப்போது வெற்றிடமாக இருந்தது. நன்றாகத் தேடினான்; துழாவினான்; ஒன்றையுமே காணோம். (தொடரும்)



தாயுள்ளம் கனவு காண்கிறது...



தனது சேயின் சுகத்தைப்பற்றி கனவு காண்கிறது தாயுள்ளம்... மிகச் சிறந்த சாதனங்களே அவளுக்கு ஏற்றவை... அவளுக்கு உகந்தவை குழந்தைகளுக்கான ஜான்ஸனின் தயாரிப்புகள்...

குழந்தைகளுக்கான ஜான்ஸனின் தயாரிப்புகளின் உயர்தரத்தை நீங்கள் பூர்ணமாய் நம்பலாம். அவைகள் 60 ஆண்டு அனுபவத்தையும் ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறந்த பொருள்களை உபயோகித்து தயாரிக்கப்படுகின்றன. ஆகவேதான், அவைகள் பச்சிளம் குழந்தையின் பூமேனிக்கு மிகவும் உகந்தவையாயிருக்கின்றன.

ஜான்ஸன்ஸ் பேபி சோப்: குழந்தைகளை குளிப்பாட்டுவதற்கு மென்மையான சோப்

ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்: குளிப்பாட்டிய பிறகும் அவன் 'ஜெட்டி'யை மாற்றும்பொழுதும் தடவுவதற்கு மிகவும் மென்மையான பவுடர்.

ஜான்ஸன்ஸ் பேபி ஆயிலும் க்ரீமும்: அவனது தோலின் ஈரம் சருமத்திற்கு பாதுகாப்பளிக்க சிறந்த சாதனங்கள்


ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்

60 ஆண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்கான சிறந்த சாதனங்களை தயாரித்து வருபவர்கள்

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்
ஆப் இந்தியா பிரைவேட் லிட்.

மறுபடியும் ஆச்சரியப்படும்படியான

ஆரோக்கியத்துடன் இருங்கள்



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிரூபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப் படுத்துகிறார்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்

போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இடைவிடாதிருந்து வரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப் புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேற்றுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில், புதியசிகப்பு லேபிள்களுடன் இப்பொழுது விற்பனைக்குக் கிடைக்கும்.



இப்பொழுது சிகப்பு தாளில் பாக்கிங் செய்யப்படுவதில்லை.

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள்

நவ(வி)நாயகர்

தும்பி

கைலாயத்தில் ஒருநாள் அன்னை பார்வதியும் அத்தன் பரமேசுவரனும் ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையில் உட்கார்ந்திருக்கிறார் மூத்த பிள்ளை விநாயகர். பிள்ளையை மிக்க வாஞ்சையுடன் அணைத்துத் தாயும் தந்தையும் மாறிமாறி முத்தமிட்டு மகிழ்கிறார்கள். இந்த நிலையில் இந்தக் குறும்புக்காரப் பிள்ளை ஒரு வேடிக்கை பண்ண நினைக்கிறார். அன்னையும் அத்தனும் சேர்ந்து முத்தமிட வரும் நேரத்திலே தன்னுடைய முகத்தைக் கொஞ்சம் பின்னால் இழுத்துக் கொள்கிறார். அவ்வளவுதான். அன்னையும் அத்தனுமே முத்தமிட்டுக் கொள்கிறார்கள். இதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறார் இந்தப் பிள்ளையார். நல்ல வேடிக்கைதானே? இப்படி ஒரு கற்பனை ஒரு கவிஞனுக்கு.

மும்மைப் புவனம் முழுநின்ற
முதல்வியோடும் விடைப்பாகன்
'அம்மை தருக முத்தம்'என
அழைப்ப, ஆங்கே சிறிது அகன்று
தம்மில் முத்தம் கொள நோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்த்தாள் என்
சென்னி மிசையிற் புனைவாமே

என்று காப்புக் கூறுகிறான் கவிஞன், நந்திக் கலம்பகம் என்னும் சிறு பிரபந்தத்தை இயற்றும்போது. நல்ல சுவையான கற்பனை, பிள்ளைக் குறும்பைக் குறிப்பிட.

விநாயக வணக்கம் நீண்டகாலமாகவே தமிழ் நாட்டில் நிலைத்திருக்கிறது. அது மட்டுமல்ல; எந்தத் தெய்வ வழிபாடும், விநாயக வணக்கத்தை முதன்மையாக வைத்தே நடந்து வருகிறது. விநாயகரை வணங்காமல் ஆரம்பித்த காரியங்கள் முட்டின்றி நிறைவேறுவதில்லை.

எல்லாத் தேவர்களும், எல்லா மனிதர்களுமே பிள்ளையார் குட்டுக் குட்டிவிட்டுத்தான் தங்கள் காரியங்களைத் துவக்குகிறார்கள். பிள்ளையார் சுழிபோடாமல் எதையுமே தமிழன் எழுத முனைவதில்லை. இப்படியே முன்னவர்க்கும் முன்னவனும் நிற்கின்றவர் பிள்ளையார். அதனாலேயே சிவன் கோயிலில் மட்டுமல்ல விஷ்ணு கோயிலிலுமே அக்ரஸ்தானம் கிடைக்கிறது அவருக்கு. சிவன் கோயிலில் பிள்ளையாராக, விநாயகராக, கணபதியாக முன் நிற்பவர்தான் பெருமாள் கோயிலில் **தும்பிக்கை ஆழ்வாராக**, கோபுர வாயிலிலேயே அமர்ந்துவிடுகிறார். எல்லோரும் வணங்கும் முதல் தெய்வமாக ஆகிவிடுகிறார்.

தமிழ் நாட்டிலே காணும் விநாயக வணக்கம் பிற நாடுகளுக்கும் பரவி இருக்கிறது. கடல் கடந்தும்சென்றிருக்கிறது. **எல்லோரா**க் குகையில் எழுந்தருளியதோடு நின்றுவிடாமல், **குஜராத்**திலும் ஜைனர்கள் வணங்கும் மூர்த்தியாக அமைந்துவிடுகிறார். **ஜைனர்கள்** மாத்திரம் என்ன, **பௌத்தர்**களுமே விநாயகரை வணங்குகிறார்கள். 'கணபதி இருதயம்' என்னும் மந்திரத்தை உருவேற்றுகிறார்கள். இத்துடன் **ஜாவா**வில், **ஜப்பா**னில், **சீனா**வில், **நேப்பாள**த்தில் எல்லாம் இவ்விநாயக வணக்கம் பரவியிருக்கிறது. அமெரிக்காவில் விவேகானந்தர் ஒரு கோயிலையே கட்டி அங்கு விநாயகரைப் பிரதிஷ்டை பண்ணிவிட்டு வந்திருக்கிறார். இன்னும் எங்கெல்லாமோ இவர் வியாபகம்.

இப்படிக் கலைஞனது சிந்தனையில் உருப்பெற்று மக்களால் எல்லாம் வணங்கப்பெறும் விநாயகர் திரு உருவத்தைச் சித்திரத்திலே எழுதினார்கள், கல்லிலே செதுக்கினார்கள், செம்பிலே வடித்தார்கள் தமிழர்கள்.

இப்படிப் பல வகையிலும் பெருமை பெற்ற விநாயகரைக் கோயில் கர்ப்பக்கிருஹத்துக்குள் மட்டும் பூட்டி வைத்துவிடவில்லை தமிழர்கள். ஊர் ஊராக, தெருத் தெருவாக, சந்தி சந்தியாகப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார்கள். பெரியவர்கள் மாத்திரம் அல்ல, சின்னஞ் சிறுவர்கள்; அறிஞர்கள் மாத்திரம் அல்ல, பாமரர்கள்; ஜாதியால் உயர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, தாழ்ந்த இனத்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் எல்லோரும் கண்டு தொழ, நெருங்கிப் பழகத் தகுந்த முறையிலே அமைத்திருக்கிறார்கள்.

தமிழ்க் கலைஞனது ஆசை இத்துடன் நின்றுவிடவில்லை. விநாயகரை இரண்டே கரங்களுடன் உட்காரவைத்துப் பார்த்திருக்கிறான். நான்கு கைகளுடன் எழுந்தருளச் செய்திருக்கிறான். நடம் ஆடவைத்துக் களித்திருக்கிறான். வாகனத்தில் ஏறி விரைவாக ஓடும் நிலையிலும், ஐந்து தலையும் பத்துக் கரங்களும் கொண்ட மூர்த்தியாகவும் நிறுத்தியிருக்கிறான். அவரையே சிம்ம வாகனராக, செப்புச் சிலையாக வடித்திருக்கிறான். அவர்களில் ஒன்பது பேரையே பின்வரும் பக்கங்களில் **நவநாயகர்களாக**ப் பார்க்கிறீர்கள்.

இந்த விநாயகர், பிள்ளையாரைத் தமிழ் நாட்டுக் கவிஞர்கள் பக்தர்கள் எல்லாம் பாடி இருக்கிறார்கள். மாணிக்கவாசகர் பாடவே காணோம். சுந்தரர் பாடிய பாட்டுக் கிடைக்கவே இல்லை. அப்பரும், சம்பந்தரும், திருமூலரும், அதிரா அடிகளும், நம்பியாண்டார் நம்பியும், கபில தேவராயனும் பாடிய பாடல்கள் எல்லாம் திருமுறைகளிலே இடம் பெற்றிருக்கின்றன. சேக்கிழார், குமரகுருபரர் பாடிய பாடல்களும் உண்டு. அந்தப் பாடல்களையுமேபடிக்கலாம்பக்கங்களைத் திருப்பினால். இந்த வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்துவரும் என்று நான் சொல்லித் தெரியவேண்டியவர்கள் இல்லையே நீங்கள்.



பிள்ளையார்பட்டி

பிடி அதன் உரு உமை
　　கொள மிகு கரியது

வடி கொடு தனது அடி
　　வழிபடும் அவர் இடர்

கடி கணபதி வர
　　அருளினன்

— சம்பந்தர்

நனிபள்ளி

பலபல காமத்தர் ஆகி
　பதைத்து எழுவார்
　　மனத்துள்ளே

கலமலக் கிட்டுத் திரியும்
　கணபதி என்னும்
　　களிறு

— அப்பர்





தாரமங்கலம்

ஐந்து கரத்தனை
　　ஆனை முகத்தனை

இந்தின் இளம்பிறை
　　போலும்—எயிற்றனை

நந்தி மகன்தனை
　　ஞானக் கொழுந்தினை

புந்தியில் வைத்து அடி
　　போற்று கின்றேனே

— திருமூலர்



வேலூர்

கொம்பனைய வள்ளி
    கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை
    நாரையூர்—நம்பனையே
தன்னைவலம் செய்துகொளும்
    தான்தடக் கையான்

— நம்பியாண்டார் நம்பி

தஞ்சை

வென்றாடு திருத்தாதை
    வியந்துகை துடிகொட்ட
நின்றாடும் மழகளிறு

— பழம் பாடல்





சேயாறு

தடக்கை ஐந்துஉடைத்
    தாழ்செவி நீள்முடிக்
கடக் களிறு

—சேக்கிழார்



வேதாரண்யம்

நிலந்துளங்க மேருத்
　துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி
　கொட்டும்—கலந்துஉளங்கொள்
காமாரி ஈன்ற
　கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்றமணி

— அதிரா அடிகள்

மின்னல்

யானை முகத்தான்
　பொருவிடையான் சேயழகன்
மான மணிவண்ணன்
　மாமருகன் — மேனிகழும்
வெள்ளக் குமிழி
　மதத்து விநாயகன் என்
உள்ளக்கருத்தில் உளன்

— கபில தேவநாயனார்





நாகப்பட்டினம்

பாசத்தனை அறுத்துப்
　பாவக் கடல்கலக்கி
நேசத் தனைப்பட்டு
　நிற்குமே—மாசற்ற
காரார்வரை ஈன்ற
　கன்னிப்பிடி அளித்த
ஓரானை வந்துளன் உளத்து

— குமரகுருபரர்



உள்ளத்தை உருக்கும் ஒரு கதை அம்சத்தை வைத்துக் கொண்டு அதைப் படமாக்கிப் பலரும் மகிழும்படி செய்வது மிகவும் அருமையான காரியம். அயல் நாட்டுப் படங்கள் எத்தனையோ அம்மாதிரி வெளிவந்திருக்கின்றன. ஆனால் நம் நாட்டுப் படாதிபதிகள் அம்மாதிரிப் படங்களைத் தயாரித்துத் தங்களைத் தாங்களே சோதனை செய்து கொள்ளத் தயாராயில்லை. ஆகவே, உயர்ந்த கருத்துக்களைப் பற்றித் துளியும் கருதாமல் சம்பவக் கோவைகளையே படமாக்கி வருகின்றனர்.

''நல்ல கருத்தை ஆதாரமாகக் கொண்டு, பார்ப்பவர்கள் உள்ளத்தில் பதியும் சிறந்த கதையைத் தயாரித்து அதைப் படமாக்கினாலென்ன? பண வருவுக்காகப் பத்துப் படங்கள் எடுத்தால், கருத்துக்காக ஒரு படம் எடுக்கக்கூடாதா?'' என்று ஒரு படாதிபதியை நான் கேட்டேன். சினங்கொண்ட நாகம் சீறிப் படம் எடுத்தது போலிருந்தது அந்தப் படாதிபதியின் முகத்தோற்றம்.

''படம் பார்த்து விமரிசனம் எழுதுகிற உங்களைப் போன்றவர்களுக்கென்ன! பொறுப்பில்லாமல் எதை வேண்டுமானாலும் எழுதி விடுவீர்கள். ஏராளமான பணத்தைப் போட்டுப் படம் எடுத்துப் பிறகு அதிலிருந்து போட்ட பணத்தை எடுப்பதிலிருக்கும் சிரமம் உங்களுக்கு எப்படித் தெரியும்? மக்கள் விருப்பம் அறிந்து ஜனரஞ்சகமான படம் தயாரித்தால்தான் ஒருவாறு போட்ட பணத்தையாவது எடுக்கலாம். இல்லையானால் ஒரேயடியாக நஷ்டப்பட வேண்டியதுதான்!'' என்று அவர் சீறினார்.

படாதிபதிகளுக்குப் படம் எடுப்பதில் உள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் விடப் படத் தயாரிப்பில், போட்ட பணத்தை எடுப்பதில் தான் அதிக சிரத்தை இருக்கிறது. மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்தால்தான் கருத்துள்ள கதையைப் பற்றிக் கருதலாம் என்று நினைக்கின்றனர் நம் படாதிபதிகள். கருத்துள்ள கதை படமாக்கப்பட்டால் எங்கள் ஆதரவு என்றும் உண்டு என்று மக்கள் கூறலாம். ''கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் ஆகும்'' — என்னும் பழமொழியைப் போல் இது தீராத பிரச்னையாகி விட்டது.

இந்த நிலையில் ''கருங் குயில் குன்றத்துக் கொலை'' என்னும் பழைய துப்பறியும் நாவல் ''மரகதம்'' என்ற பெயரில் படமாக்கப்பட்டிருப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

பக்ஷிராஜா பிலிம்ஸின் உரிமையாளரான எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு ''மரகத''த்தைத் தாமே டைரக்ட் செய்து தயாரித்திருக்கிறார். ''மலைக்கள்ளன்'' படத்தைத் தயார்செய்து புகழ் பெற்ற நாயுடு அவர்கள் இந்தப் படத்தையும் கடைசி வரையில் சுவாரஸ்யமாகச் செய்திருக்கிறார்.





கரும் குயில் குன்றத்து ஜமீன்தார் மிகவும் மர்மமாகக் கொலை செய்யப்படுகிறார். அந்தப் பழி அவர் தம்பி மார மார்த்தாண்டன் மீதே சுமத்தப்படுகிறது. அவர் நாட்டைவிட்டுத் தன் மகள் மரகதத்துடன் வெளியேறி இலங்கைத் தீவில் ஏகாந்தமாக வாழ்ந்துவருகிறார். அவர் மகளுக்கும் கருங்குயில் குன்றத்து இளைய ஜமீன்தார் வீரேந்திரனுக்கும் எதிர்பாராத முறையில் கள்ளன் உக்ரமசிங்கன் குகையில் சந்திப்பு ஏற்படுகிறது. கூடவே காதலும் முளைக்கிறது. மரகதத்தின் தந்தைமீது சுமத்தப்பட்டிருக்கும் பழி காரணமாக அவர் தம் மகளின் காதலுக்குக் குறுக்கே நிற்கிறார். மரகதமும் அவள் தந்தையும் கொள்ளைக்காரன் உக்ரமசிங்கனிடமிருந்து தப்பும் முயற்சியில் விபத்துக்குள்ளாகின்றனர். பிறகு மரகதம் அவள் தாயினாலே பாதுகாக்கப்படுகிறாள்.

வீரேந்திரனாகச் சிவாஜி கணேசனும், மரகதமாகப் பத்மினியும் வருகின்றபடியினால் படத்தின் மற்ற மதிப்புகள் ஒருபுறம் இடப்ப, நட்சத்திர மதிப்பு உயர்ந்துவிட்டது.

சிவாஜி கணேசனுக்கு இந்தப் படத்தில் கண்ணீர் விடுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் காதலிக்க நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன; வேகமாக வசனங்களைப் பொழிவதற்குச் சந்தர்ப்பம் கிட்டாவிட்டாலும் கருங்குயில் குன்றத்து ஜமீன் அரண்மனையிலேயே நாட்டுப்புற வேலைக்காரன் வேடம் பூண்டு நன்றாய் நடிக்கும் சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது. சமையலறை 'பொட்லை'ராகவரும் சந்திரபாபுவுடன் சிவாஜி கணேசனும் தமாஷாக நடிக்கிறார். அப்பொழுது அவரது முகபாவங்களும், அங்கசேஷ்டைகளும் அவரை ஒரு ஹாஸ்ய நடிகராகவே ஆக்கிவிடுகின்றன.

பத்மினியின் நடிப்பு படத்தின் சிகரமாக விளங்குகிறது. ''காலை மயங்குகின்ற நேரம்'' என்ற யோகி சுத்தானந்த பாரதியாரின் பாட்டுக்குப் பத்மினியின் அபிநயம் மிகவும் நன்றாயிருக்கிறது. ஈழ நாட்டில் தந்தையுடன் இருந்தபோதும், இளைய ஜமீன்தாரைக் காதலித்தபோதும், தந்தையின் மூலம் தன் குடும்ப ரகசியங்களை அறிந்துகொண்டபோதும், பெற்ற தாயின் அணைப்பில் இருந்தும் அதை அவளிடம் வெளியிட முடியாமல் தவித்தபோதும், கருங்குயில் குன்றத்துக் கோட்டை மர்மங்களைக் கண்டறிந்த காட்சிகளிலும் அவர் நடிப்பு தத்ரூபமாயிருந்தது.

மாரமார்த்தாண்டன் பாகத்தை எஸ். பாலசந்தர் ஏற்று நடிக்கிறார் என்று கூறுவதைவிட அவரே அந்தப் பாத்திரமாகிவிட்டார் என்று கூறினால் பொருத்தமாயிருக்கும். அழுத்தமும், உருக்கமும் கொண்ட அந்தப் பாத்திரத்தை வேறு யார் ஏற்றிருந்தாலும் அவ்வளவு பொருத்தமாயிருந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

பெரிய ஜமீன்தாரைக் கொன்று ஆதிக்கத்தைக் கைப்பற்றிய இலை மார்த்தாண்டனாக டி. எஸ். பாலையா வருகிறார். இயற்கையான அவருடைய நடிப்புக்கு இந்தப் படத்தில் அதிகச் சந்தர்ப்பம் இல்லை. டி. கே. துரைராஜும் அப்படியேதான்.

கருங்குயில் குன்றத்தின் இளைய ஜமீன்தார் இலங்கைக்கு வந்து கொள்ளைக்காரனிடம் சிக்குவானேன்? மாரமார்த்தாண்டர் கடலில் விழுந்த தம் மகளின் இருப்பிடத்தை அறிந்து எப்படி அவளுக்குக் கடிதம் எழுதினார்? எதிர்பாராத விதமாகப் பெற்ற தாயிடமே போய்ச் சேர்ந்த மரகதம், தன் தந்தையிடம் அவள் வைத்திருக்கும் மதிப்பை அறிந்த பின்பும் கூட அவர் கடிதத்தை மறைப்பானேன்? உண்மைக் குற்றவாளிகள் சிக்கின பிறகு, மாரமார்த்தாண்டர் கைத் துப்பாக்கியின் மூலம் தற்கொலை செய்து கொள்ள முயல்வானேன்? இந்தக் கேள்விகளைக் கேட்டால் திரைக் கதை தீர்ந்து போய்விடும்!

பதினெட்டாயிரம் அடிகளுக்கு மேற்பட்ட இப்படம் சில இடங்களில் நின்று நின்று செல்லுகிறது. புராணப் படங்கள் என்றால் அவை உட்கார்ந்து, படுத்து, எழுந்து எப்படி வேண்டுமானாலும் செல்லலாம். சமூகப் படங்கள் துரித கதியில் செல்லவில்லையென்றால் பார்ப்பவர்களுக்கு அலுப்பு உண்டாகிவிடும். பெரும்பான்மையான தமிழ்ப்படங்கள் இந்தக்குறையினாலேயே நல்ல தரக்க முடியாமல் தோல்வி யடைந்து விடுகின்றன.

''மலைக் கள்ள''னின் வேகம் ''மரகத''த்துக்கு இல்லையென்றாலும், இந்தப் படத்தைப் பற்றி ஒரு விஷயம் தீர்மானமாகச் சொல்லலாம். சரித்திரக் கதையும் குடும்பக் கதையுமே படமாக வந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் ஒரு துப்பறியும் மர்மக் கதை படமாக வந்தால் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கலாம் அல்லவா?

காந்தன்



சுதாவே தான்!

ருக்மிணி பார்த்தசாரதி

சாளரத்தின் மீது விடாமல் அடித்துக் கொண்டிருந்தது மழையுடன் கலந்த பேய்க் காற்று. காலை ஏழு மணி ஆகியிருந்த போதிலும் சூரியன் உதயமாகவில்லை என்று நினைக்கும்படியாக அந்தகாரம் வானத்தையும் வையத்தையும் கவ்விக் கொண்டிருந்தது. நித்திரை நீங்கியும் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வராதவனாய்க் கம்பளிப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு எண்ண அலைகளில் முக்குளித்து நீந்த ஆரம்பித்தான் நடராஜன்.

கோடைக்காலம் முடிந்து மழைக்காலம் ஆரம்பமாகி விட்டது. கதிரவனின் வெப்பத்திலிருந்து விடுதலை தேடி உதகமண்டலத்துக்கு வரும் தனவந்தர்கள் திரும்பியாகி விட்டது. நடராஜன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். ஏனென்றால் பைகாரா திட்டத்தைப் பார்க்க ஆசைப்படும் அவர்கள் தன்னுடைய உயிரை இனி வாங்க மாட்டார்கள் அல்லவா?

நடராஜன் பைகாரா திட்டத்தில் உதவி எஞ்ஜினீயராக வேலை பார்த்து வந்தான். மனத்துக்குப் பிடித்த வேலை. ஆனால் கவலையற்ற இன்பம் எங்கேதான் இருக்கிறது? அவனுடைய அமைதியைக் குலைப்பதற்கே வந்தவர்கள் போல் உதகமண்டலத்துக்குக் கோடைக்காலத்துக்கு வருபவர்கள் பைகாரா அணைக்கட்டைச் சுற்றிப் பார்க்க விரும்புவார்கள். சாதாரணமாக நடராஜன் தான் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டி வரும். அங்குள்ள உதவி எஞ்ஜினீயர்களுள் நடராஜன் ஒருவன்தான் மணமாகாதவன். கல்யாணமென்னும் பந்தத்தினால் பிணைக்கப்பட்டுக் குடும்பஸ்தர்களாகி விட்டவர்களுக்கு உல்லாசப் பிரயாணிகளுடன் சுற்றிக் கொண்டிருப்பதற்கு ஒழிவேது?

தன் பொழுதில் பெரும் பாகத்தை இந்த வகையில் செலவழிக்க வேண்டியிருந்தாலும் நடராஜனுக்குத் தன் சுதந்திர வாழ்க்கை—அதாவது பிரும்மச்சரிய வாழ்க்கை பிடித்தே இருந்தது. அலுவல்கள் முடிந்ததும் வீட்டுக்குப் போயே தீர வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. 'ஏன் இரண்டு நிமிடங்கள் தாமதித்து வந்தீர்கள்?' என்று கண்டிக்கும் மனைவி கிடையாது. 'மணி ஏழு ஆகிறது. எழுந்து காப்பி சாப்பிடுங்கள்' என்று சொல்லி விட்டு எழுந்து வந்தவனுக்குக் காப்பி கொடுக்க மறந்து ஊர்வம்பெல்லாம் சொல்லும் சகதர்மிணி கிடையாது. எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் இயற்கையின் எழிலில் தன்னை மறந்து, உலகை மறந்து இன்பத்திலேயே ஊர்ந்து செல்லலாம்.

ஆனால் இந்தச் சுதந்திர வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துத் தாம்பத்திய வாழ்வின் சிக்கல்களிலே அவனையும் மாட்டி விடவல்லவா அவன் தந்தையார் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

இவ்வளவு தூரம் எண்ண அலைகளில் மிதந்து சென்றதும் நடராஜனுக்குச் சலித்து விட்டது. தனக்காக என்னென்ன விளையாட்டுக்களையெல்லாம் வைத்துக் கொண்டு காத்திருக்கிறதோ விதி?

அதற்குமேல் செயலற்றுப் படுத்திருக்க அவன் விரும்பவில்லை. வேலைக்குச் செல்லும் வழியைப் பார்க்கலாமென்று எழுந்தான்.

ஆபீஸ் சென்றபோது அவன் மேஜை மீது இரண்டு கடிதங்கள் இருந்தன. முதல் கடிதத்தை அவன் தகப்பனார் எழுதியிருந்தார். கல்யாண விஷயமாகத்தான்.

சிரஞ்சீவி நடராஜனுக்கு,

அப்பா எழுதியது. உன் அம்மா உனக்கு ஒரு வாரத்துக்கு முன் கல்யாண விஷயமாகக் கடிதம் எழுதியிருந்தாள். நீ அதற்குப் பதில் போடவில்லையாதலால் இப்போது நான் எழுதுகிறேன். நீ என்ன குழந்தையா? உனக்கு வயதாகிறது. நல்ல வேலையும் பார்க்கிறாய். சீக்கிரத்தில் உனக்கு உயர்வு கிடைத்து விடும். அப்படியிருக்க நீ கல்யாணம் செய்து கொள்ளாமல் தட்டிக் கழிப்பது நன்றாக இல்லை. உன் அம்மா மிகவும் வருத்தப்படுகிறாள். பெற்றவர்களாகிய நாங்கள் உனக்குக் கெடுதலா செய்து விடுவோம்?

நேற்று நாராயணன் வந்திருந்தார். அவர் பணக்காரர் என்றாலும் தம் பெண்ணை உனக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். நீ வேலையில் கெட்டிக்காரன் என்று கேள்விப்பட்டாராம். நல்ல குடும்பத்தில் பிறந்து வேலையில் முன்னுக்கு வரக்கூடியவனுக்கே தம் பெண்ணைக் கொடுப்பது என்று அவர் தீர்மானித்திருக்கிறாராம். உன் விருப்பத்தை எனக்குத் தெரியப்படுத்து. அவர் தம் பெண்ணின் புகைப் படத்தை இன்னும் இரண்டு நாட்களில் கொடுப்பதாகச் சொன்னார். அவர் கொடுத்ததும் உனக்கு அனுப்புகிறேன். இந்தக் கடிதத்துக்காவது பதில்போடு.

இப்படிக்கு, அப்பா.

'பதிலாம் பதில்'. இனைத்தில் கல்லைப் போட்டாற் போல் கடிதம் எழுதி விட்டுப்

பதில் போடச் சொன்னாலும் யார் என்ன செய்ய முடியும்?" என்று முணுமுணுத்துக் கொண்டே இரண்டாவது காகிதத்தைப் பிரித்தான்.

ஸ்ரீமான் கே. என். நாராயணன் 'பைகாரா அணைக்கட்'டைப் பார்க்க அன்று பிற்பகல் மூன்று மணிக்கு வரவிருப்பதாகவும் அவரை அழைத்துக் கொண்டு சுற்றிக் காட்டத் தேவையான சௌகரியங்களையெல்லாம் செய்யுமாறு வேண்டும் என்றும் தலைமை எஞ்சினியர் எழுதியிருந்தார்.

"அட கடவுளே! இந்தச் சுற்றிக் காட்டும் படலம் முடிந்து விட்டதென்றல்லவா பார்த்தேன்? இன்னுமா முடியவில்லை?" என்று நடராஜன் அலுத்துக் கொண்டான்.

கடிகாரம் மூன்றடித்து ஓய்வதற்கும் வாசற்புறத்தில் ஒரு கார் வந்து நிற்பதற்கும் சரியாயிருந்தது. அதை அடுத்தாற்போல் ஆபீஸ் பியூன் ஒரு 'விஸிடிங் கார்டை'க் கொண்டு வந்து நடராஜனிடம் நீட்டினான். "கே.என். நாராயணன்" என்று அழகாக நவீன முறையில் அச்சிடப்பட்டு நாலாபுறமும் பொன் விளிம்பு கோடிடப்பட்டிருந்த கார்டைக் கண்டவுடன் நடராஜன் எழுந்து வந்தவரை வரவேற்க விரைந்தான். நடையில்தான் வேகம் இருந்ததே தவிர மனத்தில் உற்சாகமில்லை.

புத்தம் புதிய காரில் டிரைவருக்கு அருகில் அமர்ந்திருந்த நாராயணன் நடராஜனைக் கண்டதும் வெளியே வந்தார். அவருக்குச் சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். செல்வத்தின் சின்னங்கள் விலையுயர்ந்த கம்பளி ஸூட்டிலும், கை விரல்களில் மின்னிய வைர மோதிரங்களிலும் காணக்கிடைத்தன. பின் ஆசனத்திலிருந்து ஓர் இளம் பெண்ணும் பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனும் இறங்கினார்கள்.

"நமஸ்காரம்!" என்றான் நடராஜன்.

"நமஸ்காரம்! மிஸ்டர் நடராஜன்தானே?" என்று வினவிய நாராயணன் பின் பக்கத்திலிருந்து இறங்கிய பெண்ணையும் சிறுவனையும் நடராஜனுக்கு அறிமுகப்படுத்தினார்.

"என் பெண் சுதா, மிஸ்டர் நடராஜன்!"

அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டுச் சுதா கரம் கூப்பி நமஸ்கரித்தாள். அந்தக் காட்சியைக் கண்ட நடராஜனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டான்.

"இவன்தான் என் பையன் கிருஷ்ணன்" நாராயணன் அறிமுகப்படுத்திய சிறுவனோடு நடராஜன் கைகுலுக்கினான்.

"என்ன, போகலாமா? உங்கள் பைகாரா 'ப்ராஜெக்டை' நன்றாகப் பார்க்கவேண்டும்" என்றார் நாராயணன்.

"நிதானமாக நின்றுவைத்து பார்த்துவிட வேண்டும்!" என்று தந்தையார் சொன்னதை வலுப்படுத்தினாள் புத்திரி சுதா.

ஸ்ரீமான் நாராயணன் அவளை வெறித்துப் பார்த்தார். "நீ சும்மா இரு!" என்று சொல்வது போலிருந்தது அவர் பார்வை. சுதா இதைக் கவனிக்கவில்லையோ அல்லது கவனித்துத்தான் மதிக்கவில்லையோ தெரியாது. தொடர்ந்து பேசினாள்:


"என் கல்லூரி சிநேகிதிகள் எல்லாரையும் விட நான் நன்றாகப் பார்த்துவிட வேண்டும். ஆமாம்! நிதானமாக நின்றுவைத்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லி விட்டுத் தன் அலங்காரத்தைத் தானே ரசித்துப் பலமாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டாள்.

நடராஜனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. இப்படியுமா ஓர் அசட்டுத்தனம்? அவன் கண்கள் அவள் மீது படிந்தன. கல்லூரிப்பெண்ணாமே அவள் அழகாகத்தான் இருந்தாள். நல்ல தாம்பூ நிறம். அகன்ற விழிகள். எடுப்பான மூக்கு. கச்சிதமான உடற்கட்டு. வெளித் தோற்றத்துக்கும் புத்திக்கும் சம்பந்தமில்லை போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டான் நடராஜன்.

"போகலாமா?" என்று துரிதப்படுத்தியது ஸ்ரீமான் நாராயணனின் குரல்.

"மழை இப்போது இலேசாக விட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் தாமதித்தால் நன்றாக விட்டுவிடுமோ என்று பார்க்கிறேன்!" என்றான் நடராஜன்.

"என்ன சார்! உங்களைப் போன்ற இளைஞர்களே இப்படிச் சொன்னால் என்



போன்ற பெரியவர்கள் என்னதான் சொல் வார்களோ? பரவாயில்லை சார். இளம் புள்ளிகள்! மழை, காற்று என்று பார்த்தால் எப்படி முன்னுக்கு வருவீர்கள்?''

நடராஜன் முன் பக்கம் டிரைவருக்கு அருகில் வந்து உட்கார்ந்தான். நாராயணன் தம் மக்களுக்கு அருகில் பின் புறம் ஏறிக் கொண்டார்.

''சுதா! அரட்டைப் பேச்சென்று பேசாமல் சும்மாயிரு!'' என்று அவர் தம் புத்திரியை ரகசியமாகக் கண்டித்தது நடராஜனின் செவி களில் விழத்தான் செய்தது.

''முதலில் அணைக்கட்டைப் பார்ப்போமா?'' என்றான் நடராஜன்.

''நீர்வீழ்ச்சியைப் போய்ப் பார்த்தால்?'' என்றார் நாராயணன்.

''இங்குள்ள நீர்வீழ்ச்சி அப்படியொன்றும் பிரமாதமாக இருக்காது. ஒரு பிரதான அருவி யின் நீரையும் இன்னும் பல சிற்றாறுகளின் நீரையும் சேகரித்து அணைகட்டி அந்த நீரைத் தேவையான உயரத்திலிருந்து விழச் செய்து தான் மின்சாரம் தயாரிக்கிறோம்!''

''நல்ல நீர்வீழ்ச்சி கூட இல்லாமல் என்ன திட்டம் வேண்டியிருக்கிறது? சிவசமுத்திரம், ஜோக் போன்ற எத்தனை அழகழகான நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன நம் தேசத்தில்? உங்கள் பிராஜெக்டுக்கும் பைகாரா வென்று பெயர் வைப்பதற்குப் பதிலாக பைத்தியக் காரா வென்று வைத்திருக்கலாம்!'' என்று தன் புத்திக் கூர்மையை வெளியிட்டாள் சுதா.

நடராஜனின் மனம் முறுமுறுத்தது. 'அப்படிப் பார்த்தால் சுதா என்னும் பெயருக்குப் பதிலாக சோடா, கிரஷ் என்றுகூடப் பெயர் வைத்திருக்கலாமே?'

பைகாரா அணைக்கட்டை நோக்கி வண்டி செலுத்தப் பட்டது. அணைக்கட்டை நெருங்க நெருங்க மழையின் வேகம் அதிகமாகிக் கொண்டே வந்ததால் வண்டி மெதுவாகச் செல்ல வேண்டியிருந்தது. பனி மேகங்கள் தெருவின் மீதே ஊர்ந்து சென்று கொண் டிருந்தன. இரண்டு அடிக்கப்பால் என்ன இருக்கிறதென்று தெரியவில்லை. மழைச் சாரலுக்குப் பயந்து வண்டியின் கண்ணாடியை உயர்த்தியபோது உள்ளிருந்தவர்களின் மூச்சே கண்ணாடி மீது புகை போல் படிந்து கொண் டது. அடிக்கடி வண்டியை நிறுத்திக் கண்ணாடியைத் துடைக்க வேண்டி வந்தது.

வண்டி செல்லக்கூடிய சாலை, அணைக்கட்டுக் குச் சற்று தூரத்திலேயே நின்று விட்டது.

வண்டியை நிறுத்தி விட்டு எல்லோருமாகத் தத்தம் மழைக் கோட்டுகளை அணிந்து கொண்டு இறங்கினார்கள். நாராயணன் தம் குடையைப் பிரிக்கப் போன போது நடராஜன் தடுத்தான். ''வேண்டாம், இந்தப் பிரதேசத் தில் அடிக்கடி திடீரென்று காற்று வேகமாக அடித்துக் குடை பறந்து போய்விடும். மழைக் குல்லாய் மட்டும் அணிந்து கொள்ளுங்கள்!''

நாராயணன் அவ்வாறே செய்தார். கொட் டும் மழையில் எல்லோருமாக அணைக்கட்டை நோக்கி நடந்தார்கள்.


''ஆமாம், மிஸ்டர் நடராஜன்! இதென்ன இப்படி வானத்தைப் பிய்த்துக் கொண்டு பெய்கிறதே மழை? நான் எவ்வளவோ முறை வந்திருக்கிறேன். இந்த மாதிரி மழையைக் கண்டதே இல்லை!'' என்றார் நாராயணன்.

''ஊட்டியிலிருந்து மேற்காகச் செல்லச் செல்ல மழையின் வேகம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. ஆண்டுதோறும் பைகாராவில் ஊட்டியைப் போல் இரட்டைப் பங்குக்கு மேல் மழை பெய்கிறது!''

சுதா சொன்னாள், ''அதெப்படி முடியும்? பன்னிரண்டு மைல்களுக்குள் அவ்வளவு வித்தியாசமா இருக்கும்? நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்!''

நடராஜனுக்கு முகத்தில் அறைந்தாற் போலிருந்தது. கோபம் குமுறத் தன் உணர்ச்சிகளையெல்லாம் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அவமானமும் கோபமும் ஒருங்கே



இதயத்தை வதைக்க, "சுதா! சும்மா இரு!" என்று கண்டித்தார் நாராயணன்.

இதற்குள் அணைக்கட்டு வந்து விட்டது. மகத்தான அந்தக் காட்சி அச்சமூட்டுவதாவது அழகாக இருந்தது. அணைக்கட்டின் ஒரு பக்கத்தில் அலைமோதிக் கொந்தளிக்கும் நீரின் வேகம்; மறுபக்கத்தில் சாந்தியே உருவான அதிகப் படியான நீரின் சிறு அருவி. அணைக் கட்டைச் சுற்றிக் காட்டியபிறகு மின்சார பவர் ஹவுஸைப் பார்க்க அனைவரும் டிராலி யில் சென்றனர். "ஜெர்மன் பாயின்ட்" என்னும் இடத்துக்கு வந்ததும் டிராலி செங்குத்தாக வெகுவேகமாகக் கீழே இறங்க ஆரம்பித்தது.

"ஐயையோ! கயிறு அறுந்து விட்டால் என்ன செய்வோம்? எனக்குப் பயமாயிருக் கிறதே!" என்று அலறினாள் சுதா.

"பயமாயிருந்தால் கீழே பார்க்காமல் மேலே பாருங்கள். வாழ்க்கையில் கூட எதிர் காலத்தைப் பார்க்கத் துணிவு வராத போது நாம் கடந்து போன சம்பவங்களைத்தானே எண்ணிப் பார்த்துக் கொள்கிறோம்?"

டிராலி கீழே வந்து நின்றது. நாலா புறம் கவிழ்ந்து அடர்ந்திருந்த காடுகளைக் கண்ட போது நாராயணன் "இங்கெல்லாம் காட்டு மிருகங்கள் வருமல்லவா?" என்று கேட்டார்.

"எப்போதாவது ஓரிரு யானைகள் வரும். சில சமயம் அவை பவர் ஹவுஸுக்கருகில் வருவதும் உண்டு."

"யானைக்குப் பவர் ஹவுஸில் 'எலெக்ட்ரிக் ஷாக்' அடித்தால் பார்க்க வேடிக்கையாக இருக்காது?" என்றாள் சுதா.

அவளை முறைத்துப் பார்த்தார் நாரா யணன். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

பவர் ஹவுஸுக்குள் நுழையும் போதே யந்திரங்களின் ஆரவாரம் காதைத் துளைத்தது. அங்கு முதலில் கண்ணில் பட்டவை பெரிய சக்கரம் போன்ற கருவிகள்தாம்.

"இவைதான் 'டர்பைன்கள்'" என்றான் நடராஜன்.

"டர்பன் மாதிரி இல்லையே?" என்றாள் சுதா கேலியாக.

மகளின் பேதைமையை மறைக்க நாராயணன் வேறு விஷயங்களைப் பற்றி பேசினார்.

சுற்றிக் காட்டும் படலம் முடியவே நடராஜனின் மனம் விடுதலையடைந்த கூண்டுக் கிளியைப் போல் களிப்புற்றது.

சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்ய உள்ளே விரைந்த நடராஜனின் செவிகளில் பின்வரும் சம்பாஷணை விழுந்தது.

"சுதா! உன்னால் மானம் போயிற்று. இப்படியா உளறிக் கொட்டுவார்கள்?" என்றார் நாராயணன்.

"பேசுவதுகூடவா தப்பு?" என்றாள் மகள்.

"நான் பெரியவன் சொல்லும் போது..."

"பெரியவர் என்பதற்காக நீங்கள் சொல்வ தைக் கேட்டே தீர வேண்டுமா? 'கான்ஸ்டிடியூ ஷ'னில் எல்லோருக்கும் பேச்சுரிமை கொடுத் திருப்பது தெரியாதா...?"

அதற்கு மேல் நடராஜன் அங்கு நிற்கவில்லை. இதுதானா தற்காலத்துப் பெண்கள் பெற்றோ ருக்குக் காட்டும் மரியாதை?

அன்றிரவு தன் படுக்கையில் படுத்துக் கொண்டு நடராஜன் சிந்தனையில் ஆழ்ந்தான். சுதாவை நினைத்தபோதே அவன் உள்ளம் பயந்தது. உடல் நடுங்கியது. பெரியவர் பேச்சைக் கேட்காத பெண், அவர் சொல் வதை மதிக்காத பெண்—அவள் ஒரு பெண்ணா? பெண்மைக்கே அழகு கொடுக்கும் அடக்க மற்றவள் வெளித் தோற்றத்துக்கு மட்டும் அழகாக இருந்து விட்டால் போதுமா? வெளி அழகு செல்லரித்துப் போகும் ஸ்திரமற்றது. குணம்? ஆண்டவன் எவ்வளவு அழிவற்றவனோ அவனைப் போன்று அழிவற்றது நற்குணம்.

திடீரென்று அவன் மனத்தை ஒரு பீதி பிடித்துக் கொண்டது. சுதாவைப் போன்ற பெண் தனக்கு மனைவியாக வாய்த்து விட்டால்?...

ஆம்! மணந்து கொண்டால் பெரியவர்க ளாகப் பார்த்து நிச்சயம் செய்யும் பெண்ணைத் தான் மணந்து கொள்ள வேண்டும். அப்படிப் பட்ட பெண் அடக்கம் கொண்டவளாக இருப்பாளல்லவா?


நடராஜன் படுக்கையை விட்டு எழுந்தான். அவர்களாகப் பார்த்து நிச்சயம் செய்த பெண்ணையே தான் மணக்கத் தயாரென்று தன் தந்தைக்குக் கடிதம் எழுதினான். அந்த நள் ளிரவில் குளிரால் உடல் நடுங்கக் கடிதத்தை எடுத்துக் கொண்டு போய்த் தபாற் பெட்டியில் சேர்த்தான். அதன் பிறகுதான் அவன் மனம் நிம்மதியைக் கண்டது.

நான்கு நாட்களுக்குப் பிறகு அவனுடைய தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. அவன் செய்த முடிவினால் தங்களுக்கேற்பட்ட மகிழ்ச்சி யைக் கூறி விட்டு அவர் எழுதியிருந்தார்: "பெண் வீட்டுக்காரர் புகைப்படத்தைக் கொடுத்தார்கள். அதை நான் உனக்கு ரிஜிஸ்தர் செய்து அனுப்பியிருக்கிறேன். புகைப்படத்தைப் பார்த்தால் பெண் அழகாக இருப்பாளென்று தோன்றுகிறது. உன் அம்மா அவர்கள் வீட்டுக்குப் போயிருந்த போது பெண்ணும் அவள் தகப்பனாரும் இங்கிலை யாம். உதகமண்டலத்துக்கோ, கோடைக் கானலுக்கோ போயிருந்தார்களாம். உன் அம்மா பெண்ணின் தாயாரைப் பார்த் தாளாம். அந்த அம்மாளுடைய அடக்கத் தைக் கண்டதிலிருந்து அவர்களுடைய பெண்ணைத்தான் உனக்கு மணம் முடிப்பது என்று விடாப்பிடியாய்ப் பேசுகிறாள் உன் அம்மா. முகூர்த்தத்துக்கு நாள் கூடப் பார்த் துத் தொடங்கி விட்டாள்."

அன்று மத்தியானம் தபாலில் வந்த படத் தைப் பிரிக்க ஆரம்பித்தான் நடராஜன். மனத்தில் ஆயிரக்கணக்கான இன்பக் கோட் டைகள். இனிய எண்ணங்கள், அற்புதக் கனவுகள் ஒரே நொடியில் தோன்றின.

படத்தைக் கண்டான் நடராஜன். அவ் வளவுதான். அவன் உடனே தன் ஆசனத்தில் மூர்ச்சையாகி விழுந்து விட்டான்.

படத்தில் புன்முறுவலித்துக் கொண்டிருந் தாள் ஓர் அழகிய பெண். அகன்ற விழிகள், எடுப்பான மூக்கு, கச்சிதமான உடற்கட்டு— அவள் வேறு யாரும் இல்லை, சுதாவேதான்!



சௌகரியத்திற்கும் . . . நற்பணி புரிவதற்கும்

Accaire AW - 102 (A.C.)
DW - 102 (D.C.)


அக்கயர்

அறையின் ஜன்னலில் பொருந்தும் ஏர்கண்டிஷனர்

- குறைந்த பராமரிப்பு செலவு ● சத்தமின்றி இயங்கும்
- தொந்தரவற்ற சேவை ● ஒரு வருஷ உத்தரவாதம்

accooler தண்ணீர் குளிர்சாதனம்

அக்கூலர்



- கட்டாய முறையில் குளிர்ச் செய்யப்பட்ட — நிரந்தரமான தண்ணீர் சப்ளை
- துருப்பிடிக்காத பெட்டி ● சுலபமாக அமைக்கலாம்

உங்கள் சேவைக்கு
நல்ல அனுபவமுள்ள
சர்வீஸ் டிபார்ட்மெண்ட்

ஏர் கண்டிஷனிங் கார்ப்பரேஷன் பிரைவேட் லிட்.

மற்றும் பபலோ இண்டஸ்ட்ரியல் பங்காக்கள் தயாரிப்பாளர்கள்

கல்கத்தா - பம்பாய் - புது தில்லி

விநியோகஸ்தர்கள்

ஓபுல் ரெட்டி (மதராஸ்) பிரைவேட் லிமிடெட், மதராஸ் - போன் 84880
ரெப்ரிஜிரேட்டர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ் - போன் 86105
மரிக்கார் (மோட்டார்ஸ்) லிமிடெட், திருவனந்தபுரம் - போன் 2855
குவாலிட்டி மெஷினரி கம்பெனி, கோயமுத்தூர் - போன் C/o79

கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு

நாள் முழுவதும்

வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதேய்ப்பில் ஒழிக்கிறது!


உணவு சாப்பிட்டவுடன் கால்கேட் தரும் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

இதன் விசேஷம், ஊடுருவும் தன்மையுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டிலும் சிறந்திருக்கும் நூதன நறுமணத்தினால், குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



சிக்கன பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடரிலும் அடையலாம்–ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 1027 TAM.



கண்கள் உறங்காவோ?

மாயாவி

அத்தியாயம் 6

தாமதம் ஏன்?

வழக்கம் போல் மாலை ஆறு மணிக்கு டிஸ்பென்சரி அலுவல்களை முடித்துக் கொண்டதும் வீணா கையைக் கழுவிக் கொண்டு முன் அறைக்கு வந்தாள்.

விகாஸ் அங்கே வீணாவின் வைத்தியப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். அவள் வந்ததும், "வேலை முடிந்து விட்டதல்லவா? புறப்படலாமா?" என்று அவன் கேட்டான்.

தினந்தோறும் இப்படித்தான் அவன் அங்கே வந்து பழி கிடப்பான். அவள் வேலையை முடித்துக் கொண்டு வந்ததும், டிஸ்பென்சரியைப் பூட்டிச் சாவியைக் கையில் கொடுத்து, வண்டியில் ஏற்றி ஊருக்கு அனுப்பி விட்டுத்தான் வீடு செல்வான். ஆனால் இன்று அவன் அவளை வண்டியேற்றி ஊருக்கு அனுப்புவதற்காக, "புறப்படலாமா?" என்று கேட்கவில்லை. அவளைத் தன் வீட்டுக்கு மீண்டும் அழைத்துக் கொண்டு செல்லவே அவ்வாறு கேட்டான்.

அன்று பிற்பகலில் அவர்கள் அவன் வீட்டில் ஸொப்னாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் அல்லவா? அந்தப் பேச்சு இடையே திசை திரும்பி அவர்களுடைய சொந்த விஷயத்துக்குத் தாவினாலும், அவ் விஷயம் உடனே 'பைசல்' ஆகி விட்டதால், மீண்டும் ஸொப்னாவின் விஷயத்துக்கே வந்தது. அப்பொழுது விகாஸ், ஸொப்னாவுக்கு வீணா அறிவுரைகள் வழங்க வேண்டுமென்றும், அவளுடைய பிடிவாதப் போக்கைக் கரைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான்.

"ஆனால் அவள்தான் பிடிவாதமாக இருக்கிறாள் என்கிறாயே, விகாஸ்! சொந்தக்காரனாகிய நீ சொல்லியே கேட்காத அவள் அந்நியப் பெண்ணான நான்சொன்னால் கேட்டுவிடப் போகிறாளா?" என்று வீணா நம்பிக்கையின்றிக் கூறினாள்.

"இல்லை, வீணா! பெண்ணுக்குப் பெண் என்ற முறையிலும், அவளைப் போன்ற நிலையில் நீ இருப்பதாலும், உன் வார்த்தைகள் அவளிடம் நிச்சயமாக எடுபடும். 'உன்னைப் போலத்தான் நானும் பிடிவாதமாக இருந்தேன், அம்மா! ஆனால், பன்னெடுங் காலமாகச் சமூகம் இழைத்துவரும் அநீதிகளை நாம் சகித்துக் கொண்டிருப்பதால்தான் அவை நீடித்துக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே வந்த பிறகு உணர்ந்து இப்

பொழுது மனம் மாறி யிருக்கிறேன்' என்று நீ எடுத்துச் சொன்னால் அவள் மனமும் அவசியம் மாறிவிடும்'' என்று வற்புறுத்தினான் விகாஸ்.

ஆனால் வீணா அப்பொழுதும் அவன் கோரிக்கையை நிறைவேற்றத் தயங்கினாள். "இல்லை, விகாஸ்! என் மனம் தானாக மாறியது. உங்களுடைய தூண்டுதலாலோ போதனைகளாலோ அது மாறி விடவில்லை. அதுபோல் அவளுடைய மனமும் தானாகவே மாறவேண்டும். இம்மாதிரித் துணிகரமான புரட்சிகளில் எல்லாப் பெண்களும் சட்டென்று இறங்கிவிட மாட்டார்கள். ஆதலால் நீ அவசரப்பட்டுப் பயனில்லை'' என்று அவள் மறுத்தாள்.

"நான் அவசரப்படவில்லை, வீணா! பாழாய்ப் போன சமூகம் அல்லவா என்னை அவசரப்படுத்துகிறது! சொன்னால் வியப்பா யிருக்கும் உனக்கு. ஸொப்னாவை நான் வீட்டுக்கு அழைத்து வந்து ஒரு வாரந்தான் ஆகிறது. அதற்குள் காலனியிலுள்ளவர்கள் எவ்வளவு கீழ்த்தரமான வதந்தியைப் பரப்பி விட்டார்கள், தெரியுமா? இவ்வளவுக்கும், அவள் என் ஒன்றுவிட்ட தங்கையென்று ஒருவர் விடாமல் சொல்லி யிருக்கிறேன்! நம்ப வேண்டுமே? வடநாட்டானாகிய நான் ஒரு வடநாட்டு இளமங்கையைக் கண்டதும், அவள் வாழ்விழந்தவளானாலும் பரவாயில்லையென்று இழுத்து வந்து வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறேனாம்! ஆகையால்தான் நான் இரவுபகல் உறக்கமின்றி அல்லல்படுகிறேன், வீணா! 'தெரியாத்தனமாக இவளை அழைத்து வந்து விட்டோமே' என்றுகூடச் சில சமயம் வருத்தம் ஏற்படுகிறது. விரட்டித் தொலைத்து விடுவோமென்றால் அவள் எங்கே போவாள்? கிடைத்திருந்த வேலையைக்கூட விடச் செய்து விட்டேன். இளம் பெண். ஆதரவற்று வெளியே சென்றால் அவள் நிலை என்ன ஆகும் என்பது உனக்கே தெரியாதா? எனவே நீதான் எப்படியாவது எனக்கு உதவ வேண்டும். அவளுக்குச் சொல்ல வேண்டிய விதமாகச் சொல்லி, யாரையாவது மணந்து கொள்ளச் செய்து விட்டாயானால் என் கவலை விட்டுவிடும்'' என்று அவன் இறைஞ்சினான்.

விகாஸின் தவிப்பை உணர்ந்ததும் வீணாவுக்கு அவனுடைய வேண்டுகோளைப் புறக்கணிக்க மனம் வரவில்லை. "அவள் எங்கே? கூப்பிடு; பார்க்கிறேன்'' என்றாள்.

விகாஸ் ஸொப்னாவை அழைத்து வர எழுந்து சென்றான். ஆனால் அவள் அச்சமயம் பார்த்து வெளியே எங்கோ போய் விட்டாள். இதற்குள் மணி நாலாகி விட்டது. வீணா டிஸ்பென்சரிக்குப் போக வேண்டிய நேரம் வந்து விட்டது. "மாலையில் டிஸ்பென்சரி வேலை முடிந்ததும் அவளைப் பார்த்துப் பேசுகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவள் புறப்பட்டு விட்டாள்.

எனவே, இப்பொழுது அவன் அழைத்ததும் அவள் கிளம்பினாள். விகாஸும் அவளுடன் புறப்பட்டான். வீணா அவனைத் தடுத்து நிறுத்தி, "நீ அங்கே வர வேண்டாம். பெண்ணுக்குப் பெண்ணாக நாங்கள் மனம் விட்டுப் பேசிக் கொள்ள நீ அங்கே இருப்பது இடையூறாக இருக்கும். நீ இங்கேயே இரு. நான் தனியாகப் போய் வருகிறேன்'' என்றாள்.

விகாஸுக்கும் அது சரியென்றே பட்டது. "அப்படியானால் சரி. ஆனால் நான் இங்கே இருந்தால் உனக்குத்தான் சங்கடமாகும். டிஸ்பென்சரி திறந்திருக்கிறதே என்று நோயாளிகள் யாராவது வந்து சேருவார்கள். திரும்பி வந்த பிறகும் நீ வேலை செய்யும்படி ஆகிவிடும். நான் அணை ஸ்தலத்துக் காண்டீனில் போய்க் காத்திருக்கிறேன். நீ ஸொப்னாவைப் பார்த்துப் பேசிவிட்டு அங்கே வா'' என்றான் அவன்.

இருவரும் டிஸ்பென்சரியைப் பூட்டிக் கொண்டு தெருவுக்கு வந்தனர். எதிர்ச் சாரி வீட்டில் வெற்றிலை போட்டவாறு அமர்ந்துகொண்டிருந்த மாடசாமி அவர்களைக் கண்டதும் எழுந்து, வாசலில் நிறுத்தியிருந்த வண்டியைக் கட்டத் தயாரானான்.


"அடடா! இவன் வண்டியைப் பூட்டுகிறானே! வேண்டாம் என்று சொல், வீணா!'' என்றான் விகாஸ்.

"பரவாயில்லை, அவன் வண்டியைக் கட்டிக் கொண்டு ஊருக்குப் போகட்டும், விகாஸ்! எப்படியும் எனக்கு இன்னும் அரை மணி, ஒரு மணி நேரமாவது ஆகும். பொழுது இருட்டிவிடும். நான் சுந்தரத்தின் காரிலே போய்க் கொள்ளுகிறேன்'' என்ற வீணா, அவ்வாறே மாடசாமியிடம் கூறி, அவனை வண்டியுடன் ஊருக்கு அனுப்பி விட்டு விகாஸின் வீட்டுக்குச் சென்றாள்.

ஆனால் அங்கே அவளுக்கு அரைமணி நேரமும் ஆகவில்லை; ஒரு மணி நேரமும் ஆகவில்லை. பத்தே நிமிஷங்களில் அவள் காண்டீனுக்குத் திரும்பி வந்து விட்டதைக் கண்டு விகாஸ் திகைத்தான். "என்ன வீணா, காயா பழமா?'' என்று அவன் ஆர்வத்தோடு கேட்டான்.

"காய்தான் விகாஸ்!'' என்று கூறி விட்டு அவள் சோர்வோடு அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

"என்ன நடந்தது?''



"எது நடக்க வேண்டுமோ அதுதான் நடந்தது. என் தகுதியை உணர்ந்து கொள்ளாமல் ஒரு காரியத்தில் தலையிட்டேன். செம்மையாக மண்டையில் அடிபட்டுத் திரும்பி வந்தேன்."

"விஷயத்தைச் சொல், வீணா!"

"சொல்வதற்கு என்ன இருக்கிறது, விகாஸ்? நான் கூறியதை வொப்னா அமைதியாகச் செவி மடுத்தாள். "என்னுடைய நீண்ட சொற்பொழிவு முடிந்ததும் அவள், 'மன்னித்துக் கொள்ளுங்கள்; உங்களை ஒன்று கேட்கலாமா?' என்றாள்..."

"என்ன கேட்டாள்?"

"ஆணித்தரமான கேள்வி ஒன்றைக் கேட்டு என்னைத் தலைகுனிந்து கொண்டு திரும்பச் செய்து விட்டாள். 'நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான், வீணாதேவி! ஆனால் இவ்வளவு பேசும் நீங்கள் ஏன் இன்னும் அத்தகைய புரட்சி வாழ்க்கையில் ஈடுபடாமல் இருக்கிறீர்கள்?' என்று அவள் கேட்டாள்."

"'நானும் ஈடுபடத்தான் போகிறேன்' என்று சொல்வதுதானே!"

"சொன்னேன், விகாஸ்! ஆனால் அவள் மீண்டும் என்னை மண்டையில் அடித்து விட்டாள். 'முதலில் நீங்கள் மறுமணம் செய்து கொண்டு வழி காட்டுங்கள். பிறகு நான் செய்து கொள்வது பற்றி ஆலோசிக்கிறேன்' என்றாள்."

"ஆமாம், வீணா! அவள் சொன்னது சரிதான். நீதான் மனம் மாறி விட்டாயே, இன்னும் ஏன் உன் காரியத்தை ஒத்திப் போட வேண்டும்?" என்று கேட்டான் விகாஸ்.

வீணாவின் உள் மனமும் இப்பொழுது அதையேதான் கூறியது. 'ஆமாம், நீயோ துணிந்து விட்டாய். துணிந்து விட்டபின் ஏன் இந்தத் தாமதம்?'

* * *

இரவு ஏழரை மணி அளவில் சுந்தரத்துடன் காரில் ஊருக்குப் புறப்படும் வரையில் வீணாவின் மனம் இதே கேள்வியைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தது. 'ஏன் தாமதம்? ஏன் தாமதம்?'

அவள் மனத்தின் இக்கேள்வியை எதிரொலிப்பதே போல், வீணா காரில் ஏறி அமர்ந்துகொண்டதும் சுந்தரமும் அதையே கேட்டான்.

"ஏன் இன்று தாமதம்?"

அவள் அவனிடம் அன்று நடந்தது முழுவதையும் சொன்னாள். ஆனால் தன் மனமாற்றத்தையும் விகாஸுடன் இணைசேர விரும்பித் தோல்வியுற்றதையும் மட்டும் சொல்லவில்லை.

அதைக் கேட்டதும் சுந்தரம் ஏளனமாக நகைத்து விட்டு, "பிறருக்கு உபதேசம் செய்யப் புறப்படுவதற்கு முன் நாம் ஒழுங்காக இருக்கிறோமா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும், வீணா!" என்றான்.

"எனக்கு உபதேசம் செய்யும் நீங்கள் ஒழுங்காக இருக்கிறீர்களா?" என்று வீணா திரும்பிக் கேட்டாள்.

"ஏன்? எனக்கு என்ன? நான் ஒழுங்காகத்தான் இருக்கிறேன். விதவையை

சிந்தனைக்கு உணவு

ஆரோக்கிய உணவுபற்றிய நூல் ஒன்றில், படித்து நிறுத்திய பக்கத்திற்கு அடையாளமாகச் செருகியிருந்தது அந்தப் பழைய மூன்றாம் வகுப்பு ரெயில்வே டிக்கெட்டு. அதை அகற்றிக்கொண்டு, விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கிய என் மகள் தங்கம் திடீரென, "அப்பா இதென்ன, கரையான் போலிருக்கே!" என்றாள். ஊர்ந்து வெளியேறிக் கொண்டிருந்தது ஒரு ஜந்து.

புழங்கும் புத்தகங்கள் நிறைந்திருந்த சுறுசுறுப்பான எனது அலமாரியில் இதுதான் முதன்முதலாக நுழைந்திருந்த அழையா விருந்தாளி. ஏதோ, இடமாறாட்டமாக சில சமயம் அலமாரியில் கம்பருக்குப் பக்கத்தில் கார்ல்மார்க்ஸும், இப்ஸனை ஒட்டி இளங்கோவடிகளும், இசை நூலை யடுத்து யோகாசனப் புத்தகமும் உறவாடுவது உண்டே தவிர, தூசிக்கும் பூச்சிக்கும் அந்த அலமாரி என்றுமே வரவேற்பு அளித்தது கிடையாது.

போன மாதம் என் பாட்டனாரின் உபயமாக சில பழைய நூல்கள் எனது அலமாரியைத் தேடி வந்தன. அப்புத்தகங்களில் அடைபட்டிருந்த தூசி தும்பு, பூச்சி பொட்டு, அவற்றின் முட்டைகள் முதலியவற்றை அடியோடு அகற்றிய பிறகே புத்தகங்களை அலமாரி யேற அனுமதித்தேன். ஆனால் என்னையும் மீறி நுழைந்துவிட்டதுபோலும் ஒரு முட்டை! ....

★ ★ ★

என் பாட்டனாரின் புத்தகங்கள் மட்டுமென்ன, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, தீராப் பசியுடன் கணக்கற்ற நூற் செல்வங்களைத் தின்றுவந்த இந்தக் கரையானின் பாரம்பரை உணவுப் பழக்க வழக்கங்கள் அன்றைக்கு இன்று அணுவளவும் மாறவில்லை; பனைமரத்து ஓலைகளைப் பலகாரம் செய்த வாய் இன்று நாருக்காகக் காகிதங்களைக் கபளீகரம் செய்து வருகிறதே தவிர, இலக்கிய ரஸனையோ, தாரதர உணர்வோ அணுவளவாகிலும் அதற்கில்லை. சிந்தனைக்கும் சரி, வயிற்றிற்கும் சரி, உணவு தேடும்போது நுட்பமான அறிவறிந்த ரஸனையோடு தேர்வு காணும் மனிதவர்க்கத்திற்கும், செல்லினத்திற்கும் இடையே எத்தகைய மாறுபாடு! உண்ணும் உணவின் உண்மை மதிப்பை உணராத உதவாக்கரை ஜந்துவிற்கு உதாரணம் இந்தக் கரையானே!

★ ★ ★

ராமபாணப் பூச்சியின் பற்கள் என் பாட்டனாரின் கம்பராமாயண நூலைப் பதம் பார்த்து நயமிருந்த பாடல்களில் சல்லடைக் கண்கள் குடைந்திருந்ததோடு, யுத்தகாண்டத்தை யுத்தகளமாக மாற்றியிருந்ததைக் கவனித்தேன்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையின் அச்சுப்பிரதியொன்றும் அதேமாதிரி பாதிக்கப்பட்டிருந்தது. அடிக்கடி என் விரல்கள் அப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும்; கண்முன்னே சித்திரமாகப் படரும் அதன் கதை: .... காதல் மேலிட்ட சோழ இளவரசன் உதயகுமாரன் பின்தொடருகிறான் மணிமேகலையை.........அவளோ துறவுக் கோலத்தில் உலவுகிறாள் ....புரள்கின்றன பக்கங்கள்......... "இப் பிறவியில் என்னை மணக்க முடியாது, அடுத்து வரும் பிறவிகளிலே உங்களை அடைவேன்!" என்று உறுதிகூறிச் செல்கிறான் அவன் .... மணிபல்லவத் தீவிற்கு. .... மேலும் சில பக்கங்கள்......... தீவிலிருந்து கிடைக்கும் அமுதசுரபியை ஏந்திய வண்ணம் பசித்தோருக்கு உணவளிக்கிறது மணிமேகலையின் கைகள் .... உதயகுமாரனின் காதற் பசிக்கு அதிருஷ்டமில்லை, மக்களின் வயிற்றுப் பசிக்கே அதிருஷ்டம்!...இந்தக்

DL/P.4A-19 TM

கட்டத்தில் கறையானின் கோரப் பசி ஆரம்பமாகி அடுத்துவரும் பக்கங்களை ஜீரணமாகிவிட்டன!

அதற்கப்புறம் மணிமேகலையின் வரலாறு என்னவாயிற்று? ஆம், உதயகுமாரனுக்குக் கொடுத்த வாக்கை அவள் தவறவில்லை. எங்கள் வீட்டுச் சமையலறைப் பக்கம் வந்து பார்ப்பவர்களுக்குப் புரியும். நல்லதொரு முகூர்த்தத்திலே என்னை மணந்துகொண்டு இப் பிறவியின் இல்லறப் பொறுப்பை ஏற்று நடத்துகிறாள் அம் மங்கையர்க்கரசி! ஆனால் ஒன்று: அன்ன அள்ளக் குறையாத அந்த அமுத சுரபி இன்று எங்களிடம் இல்லையே என்று நாங்கள் கவலைப்படுவதில்லை. நமது புண்ணிய பூமி விளைகிறது. அறுசுவை உணவு ஆக்கிப் பரிமாற அவளுக்கு சொல்லியாதரவேண்டும்? திருவள்ளுவரின் பொருட் செறிவிலும் கம்பரது கவிதை நயத்திலும் ஆழ்ந்து, சிந்தனைக்குச் சத்துணவு சேகரித்துவரும் எனக்கு, உள்ளூறும் உணவின் உண்மை மதிப்பை உணர்ந்து தயாரித்த உயரிய சத்துணவை உடலுக்கு வழங்கிவருகிறாள் அவ் வுத்தமி. இதன் பயனாக எங்கள் அன்றாட உணவிலே புரதப் பொருள்கள், மாவுப் பொருள்கள், உலோகங்கள், வைட்டமின்கள்.........



★ ★ ★

எங்களைப் பொறுத்தவரையில் வைட்டமின் என்பது ஏட்டுச் சுரைக்காயாகவோ வெறும் அகராதிப் பதமாகவோ இருந்துவிடவிட்டதில்லை. பால், தானியங்கள், காய்கறிகள் மூலமாக மட்டுமின்றி அவற்றைச் சமைக்கப் பயன்படுத்தும் கொழுப்பின் மூலமாகவும் உடம்புக்கு வைட்டமின்களைக் கிடைக்கச் செய்கிறாள் அவள். புத்தம்புதிய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்படும் 'டால்டா' வனஸ்பதியையே சமையலுக்கு உபயோகிக்கிறாள்.

கண்களுக்கும் சருமத்திற்கும் பற்களுக்கும் எலும்புகளுக்கும் வலிவுதரும் வைட்டமின்களான 'ஏ' 'டி' இரண்டும் 'டால்டா'வில் சேர்க்கப்பட்டுள்ளதால் அது ஊட்டமளிக்கும் உணவாகவும் விளங்குகிறது.

வீட்டுச் சாமான்களைத் தூசி படியாமல் பளிச்சென்று வைத்துக்கொள்வதில் எவ்வளவு கருத்து உண்டோ அதே அளவுக்கு, சமையல் கொழுப்பைத் தேர்ந்தெடுப்பதிலும் உண்டு; தூசி படிய, ஈ மொய்க்க விற்கும் பொருள்களை நாங்கள் வாங்குவதில்லை. அதனால்தான் நாங்கள் 'டால்டா' வாங்குகிறோம். பேரீச்ச மர அடையாளமிட்ட, ஸீல் செய்த டின்களில் கிடைக்கும் 'டால்டா' புதுமையும் தூய்மையும் மாறாமல் சமையலுக்குக் கிட்டுகிறது.

★ ★ ★

சக்தியும் ஊக்கமுமே உருவான இவ் வாழ்க்கைக் கேற்ப, சமையலறை அலமாரியிலுள்ள கரண்டிமுதல் ஆரோக்கிய உணவுபற்றிய நூல்கள் இடம்பெறும் புத்தக அலமாரிவரை எங்குமே தூசுவோ தூசியோ ஆக்கிரமிக்க அனுமதிப்பது கிடையாது. அதோ என் மகள் தங்கத்தின் கரத்தில் இடம்பெறும் ஆரோக்கிய உணவுபற்றிய அந்த நூல், சமையல் கலையே தாயிடமிருந்து பெண்ணுக்கு வாழையடி வாழையாக வழிவழி வரும் அழகை எடுத்துக்காட்டுகிறது.

யன்றிப் பிறிதொரு பெண்ணுக்கு வாழ்வில் இடம் அளிப்பதில்லை என்று உறுதி பூண்டுதான் இருக்கிறேன்.''

"ஆனால் அது சொல்லளவில்தானே! செயலளவில்...?''

"செயலளவிலும் அதைக் காட்டத்தான் போகிறேன்.''

"எப்பொழுது?''

"சமய சந்தர்ப்பம் ஒத்து வரும் போதுதான்!''

"எந்தச் சமயமும் எந்தச் சந்தர்ப்பமும் ஒத்து வரவேண்டும்?''

"உங்களிடம் இது வரையில் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தேன், வீணா! ஆனால் இன்று நீங்கள் என்னை ஊக்கி விட்டீர்கள். என் மனத்தில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறேன். அதில் தவறு இருந்தால் மன்னித்து மறந்து விடுங்கள்....''

ரஸ்தாவில் முன்பு பாலம் கட்டிக் கொண்டிருந்தார்களே, அந்த இடத்தைக் கார் நெருங்கிக் கொண்டிருந்தது. அங்கே இப்பொழுது பாலம் உருவாகி விட்டது. அப்பாலத்தை அடைந்ததும், சுந்தரம் காரை ரஸ்தா ஓரமாக ஒதுக்கி நிறுத்தினன்.

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்?'' என்று இரு பொருள்படக் கேட்டாள் வீணா.

"நான் சொல்லப் போகிற விஷயம் ஓடிக் கொண்டே சொல்லும் விஷயம் இல்லை; உட்கார்ந்து பேச வேண்டிய விஷயம். வாருங்கள், அந்தப் பாலத்தின் கிராதியில் போய் உட்காரலாம்'' என்று அவன் காரின் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினன்.

வீணாவுக்கு அவன் என்ன சொல்லப் போகிறன் என்பது தெரியாதா? 'இதற்கு இத்தனை முன்னேற்பாடுகளா!' என்று வியந்தவாறு அவளும் கீழே இறங்கினள்.

பூரணமதி நான் நெருங்கிக் கொண்டிருந்ததால் முன்னிரவு நிலவு பாலைப் பொழிந்தது. அந்த இடம் மனித நடமாட்டமின்றி அமைதியுடன் விளங்கியது. தெற்கே சுமார் ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் அணை வேலை நடந்து கொண்டிருந்த இடத்தில் எரிந்த பிரகாசமான மின் விளக்குகளின் ஒளி நிலவுடன் போட்டியிட்டுக் கொண்டு வானத்தின் அந்தப் பகுதியையே வெண்ணிறமாக்கியிருந்தது. ரஸ்தாவின் இரு மருங்கிலுமுள்ள வயல்களில் பச்சைப் பசேல் என்று செழித்து வளர்ந்திருந்த நெற்பயிர்கள் மென்மையாக வீசிய இளங்காற்றில் தலையசைத்து அவர்களுக்கு முகமன் கூறின. வயல்வெளிகளை இருப்பிடமாகக் கொண்ட பூச்சி இனங்கள் விநோதமான ரீங்கார ஒலிகளை எழுப்பி அவர்கள் வருகைக்குக் கட்டியம் கூறின. பாலத்தின் அடியில் அணையிலிருந்து தாற்காலிகமாகத் திருப்பி விடப்பட்டிருந்த நீர் கரை பொங்க ஓடிக் கொண்டிருந்தது. 'நீங்கள் அமைக்க இருக்கும் புரட்சி வாழ்க்கையும் இவ்வாறு நிறைவு பெற்று ஓடட்டும்' என்று அது வாழ்த்துக் கூறுவது போல் இருந்தது.

இத்தகைய மனோகரமான சூழ்நிலையில் அவர்கள் இருவரும் வழவழப்பாக சிமெண்டு பூசப்பட்டிருந்த பாலத்தின் கிராதி ஒன்றில் வந்து அமர்ந்தனர்.

"சொல்லுங்கள்'' என்றாள் வீணா.

"ஒரே வார்த்தையில் சொல்லி விடட்டுமா? அல்லது விரிவாகச் சொல்லட்டுமா?'' என்று கேட்ட சுந்தரம் மெதுவாகத் தயக்கம் நிறைந்த புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்தான்.

"ஒரே வார்த்தையில் சொல்வதற்கு இங்கே வருவானேன்? காரிலிருந்தபடியே சொல்லியிருக்கலாமே!'' என்று வீணாவும் பதிலுக்கு முறுவலித்தாள்.



ஆகஸ்டு 15ந் தேதி திருவண்ணாமலையில் அருணகிரியார் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் நாட்டிலுள்ள நூறு பஜனைக் கோஷ்டிகளுக்கு மேல் இவ்விழாவில் கலந்து கொண்டன. லட்சம் பேருக்கு மேல் மக்கள் திரளாக வந்திருந்தனர். ஓயாத பஜனை வெள்ளம், சொல்மாரி, அன்னதானம், இவற்றின் பயனாக இரண்டு நாட்கள் கழித்துப் பெருமழை பொழிந்து கருணை உள்ளத்தைக் குளிர்வித்தது.

"காரில் போகும்போது சொன்னால் நீங்கள் கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்து விடுவீர்களோ என்று எனக்குப் பயமாக இருந்தது!"

"கீழே குதித்து விடுவேன் என்று பயந்தீர்களா? நானா? அப்படியானால் நீங்கள் சொல்லப் போவது என்னைப் பற்றிய விஷயமா?" என்று வீணா ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்.

"இல்லை, நம்மைப் பற்றிய விஷயந்தான். இருந்தாலும் நீங்கள் ஊகித்தே இராதது; உங்களுக்குத் திகில் அளிக்கக் கூடியது!" என்று இழுத்தான் சுந்தரம்.

வீணா மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள். 'இந்த ஆண்களே அசடுகள்! அதிலும் சுந்தரம் வடிகட்டின அசடு. இவர்களுக்கு ஒரு நாளுமே பெண் மனத்தின் ஆழம் தெரியாது!' என்று அவள் நினைத்துக் கொண்டாள். பிறகு வெளிப்படையாகச் சிரித்து விட்டு, "திகிலைத் தாங்கி வலுப் பெற்றதுதான் என் உடல். கவலைப்படாமல் சொல்லுங்கள்" என்றாள்.

சுந்தரம் உடலை ஒரு தடவை குலுக்கிக் கொண்டான். கழுத்தில் மாட்டியிருந்த 'டை'யை நெகிழ்த்தி விட்டுக் கொண்டான். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "சொல்லட்டுமா?" என்று மீண்டும் கேட்டான்.

"சொல்லுங்களேன்."

"அதாவது அது....." அவனுக்கு மேலே பேச வரவில்லை. உமிழ் நீரை விழுங்கினான்.

"அது.....?"

"இல்லை.....ஆமாம்.....முன்பே பல தடவைகள் நான்....."

வேறொருவரானால் சுந்தரத்தின் தத்தளிப்பை இன்னும் கிளறிவிட்டு வேடிக்கை பார்த்திருப்பார்கள். ஆனால் வீணா தான் பிறர் தத்தளிப்பதைக் காணப் பொறுக்காதவள் ஆயிற்றே! ஆதலால், அவன் சொல்லத் தயங்கியதைச் சொல்ல அவளே முந்திக் கொண்டாள். "சொல்லுங்களேன். நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள். என் உறுதியைக் குலைத்து என்னை மணந்துகொள்ளச் சந்தர்ப்பம் பார்த்திருக்கிறீர்கள்; அப்படித்தானே?"


"ஆமாம் வீணா; எத்தனை காலமானாலும் உங்கள் மனம் மாறக் காத்திருக்கத்தான் போகிறேன். ஆனால் நான் உங்களைக் காதலிப்பதாகச் சொன்னீர்களே; அது மட்டும் அத்தனை சரியில்லை."

வீணா திடீரென்று அதிர்ச்சி அடைந்தாள். "பின்?" என்ற கேள்வி அவளிடமிருந்து அம்பு போல் பாய்ந்தது.

"நான் காதல் வாழ்க்கைக்கு ஆசைப் படவில்லை, வீணா! கடமை வாழ்க்கை தான் வாழ விரும்புகிறேன்."

வீணாவுக்கு அவன் கூற்றுச் சரியாக விளங்கவில்லை. "அதாவது...?" என்று அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

"சமூகத்தின் துன்பம் ஒரு புறம் இருந்தாலும், வாழ்க்கை இன்பம் கிட்டும் என்று நான் ஒரு விதவையை மணந்து கொள்ள நிச்சயித்து விடவில்லை. அல்லது, 'நானும் சமூகப் புரட்சி செய்தேன்!' என்று மார் தட்டிக் கொள்ளுவதற்காகவும் வாழ்விழந்த ஒருத்தியை என் மனம் நாடவில்லை. என் லட்சியம் வாழ்நாள் முழுவதும் விதவைகளின் துயரைத் துடைக்கப் பாடுபட வேண்டும் என்பதே. ஆனால் அதற்கு அடிப்படையாக நான் முதல் முதலில் ஒரு விதவையை மணந்து கொள்ள வேண்டும். இல்லா விட்டால் இப்பொழுது விகாவின் தங்கை உங்களிடம் கேட்ட கேள்வியை உலகம் என்னிடம் கேட்கும். ஆகையால்தான் என் நோக்



நெட்டையானவர் : என்னப்பா, என் தலைமேலேயே கையை வைக்கப் பார்க்கறியே !

கத்தைக் கடமை நோக்கம் என்றேன். உண்மையாகச் சொல்லுகிறேன், வீணு! என்னுடன் இணை சேர விரும்பும் பெண், திருமணத்துக்குப் பின் தன்னைச் சகோதரியாகவே நடத்த வேண்டும் என்ற நிபந்தனையைப் போட்டால்கூட அதற்கு இணங்கத் தயாராக இருக்கிறேன் !''

சுந்தரத்தின் இந்தக் கடைசி வார்த்தைகள் வீணுவின் உடலைப் புல்லரிக்கச் செய்தன. அவளுக்கு அப்பொழுது தன்னருகில் அமர்ந்திருந்த சுந்தரம் சாதாரண மனிதனாகத் தோன்றவில்லை. லட்சியத்துக்காக எதையும் துறக்கத் துணிந்த ஒரு தியாகியாக, ஒரு மகாத்மாவாகவே தென்பட்டான்! உலகத்தில் கொள்கைக்காகச் செய்யப்படும் தியாகங்களில் இதைவிடப் பெரிய தியாகம் ஒன்று இருக்க முடியுமா? பெற்றோரும் உற்றோரும், ஊரும் உலகமும் தூற்றினாலும் தூற்றட்டுமென்று விதவையை மணந்து கொள்ளச் சிலர் துணியலாம். அதனால் ஏற்படும் துன்பங்களை இன்பமாக ஏற்கவும் துணியலாம். ஆயினும் அத்தனை கஷ்டப்பட்டு மனைவியாக்கிக் கொண்ட ஒருத்தியைச் சகோதரியாக நடத்தும் துணிவு யாருக்குமே ஏற்படாது. அத்தகைய துணிவைச் சுந்தரம் அடைந்திருக்கிறார் என்றால் அவருடைய கொள்கை போற்றப்பட வேண்டியதுதான்; ஆதரிக்கப்பட வேண்டியதுதான்.

வீணு அப்பொழுது தன் மன மாற்றத்தைப் பற்றியும் நினைத்துக் கொண்டாள். நான்கூட எங்கள் சமூகத்தின் துயர் தீர வழிகாட்டவேண்டுமென்றுதான் மறுவாழ்வு பெற நிச்சயித்தேன். ஆனால் எனக்குக்கூட இத்தகைய மகத்தான தியாக எண்ணம் எழவில்லையே!

இந்த நினைவுக்குப் பிறகு, சுந்தரத்தின் முன் தான் ஒரு துரும்பு என்று அவளுக்குத் ' தோன்றியது. இந்த உலகத்தில் தன்னைத் தானே யாருக்காவது அர்ப்பணிக்கலாமென்றால் அதற்குத் தகுதியுடையவர் சுந்தரந்தான் என்ற உறுதியும் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

சுந்தரம் வீணுவின் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். அவள் தலையைக் குனிந்தவாறு அமர்ந்திருந்தாள். தரையில் படாமல் தொங்கிக் கொண்டிருந்த அவளுடைய பாதங்கள் வெறுமனே ஆடிக் கொண்டிருந்தன. அந்த ஆட்டம் அவளுடைய மனத்தின் ஆட்டத்தையே பிரதிபலித்தது போலும்.

சட்டென்று அவளுக்குச் சற்றுமுன் வரையில் தன் மனம் கேட்டுக் கொண்டிருந்த கேள்வி நினைவுக்கு வந்தது. ''நீயோ துணிந்து விட்டாய்; துணிந்துவிட்ட பிறகு ஏன் தாமதம்?''

ஆழ்ந்த சிந்தனையைப் பிரதிபலித்த அவளுடைய முகத்தில் ஒரு மகிழ்ச்சி பிறப்பதைக் கண்ட சுந்தரத்துக்குத் தெம்பு ஏற்பட்டது. ''நீங்கள்....'' என்று அவன் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தான்.

ஆனால் அவள் அவனை இடைமறித்தாள். ''இனி என்னை 'நீங்கள்' என்று சொல்லாதீர்கள்; உரிமையுடன் 'நீ' என்றே அழையுங்கள்!'' என்றாள்.

''வீணு!''

''சுந்தர்!''

இருவர் உள்ளங்களிலும் பொங்கிய உணர்ச்சி, தொடர்ந்து வெளிவர வேண்டிய வார்த்தைகளை விழுங்கி விட்டது. ஆம்! மனமும் மனமும் இணைந்துவிட்ட பிறகு வாய்ச் சொல் எதற்கு?

* * *

லட்சிய வாயிலை நோக்கி இரண்டாவது அடி எடுத்து வைத்து விட்ட மகிழ்ச்சியுடன் வீணு இரவு எட்டரை மணிக்கு வீடு திரும்பினாள். உடை மாற்றிக் கொண்டு கூடத்துக்கு வந்ததும், ஊஞ்சலில் அமர்ந்திருந்த சச்சிதானந்தம், ''வந்துட்டியா அம்மா? சரி, சட்டென்று ஒரு வாய் சாப்பிட்டுட்டுத் தெற்குத் தெருவுக்குப் போயிட்டு வா. உன் மரகத அத்தை உன்னை கூட்டிக்கிட்டு வரச் சொல்லி, பகலிலே ஒரு தடவை, பொழுது சாய்ந்த பிறகு ஒரு தடவை ஆள் அனுப்பிவிட்டாள். அவங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே கர்ப்பமாயிருக்கிற பெண் ஒருத்தி சும்மா சும்மா மயக்கம் போட்டுக்கிட்டே இருக்குதாம். எந்த ராத்திரியானாலும் வந்து பார்த்து விட்டுப் போகச் சொல்லுங்கன்னு புஷ்பவனம் தம்பி சொல்லிட்டுப் போயிருக்கிறார்'' என்றார்.

(தொடரும்)

காலம் கடப்பதற்கு முன்
இப்பொழுதே இன்ஷ்யூர் செய்யுங்கள்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங், மதுரை

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர்
5 ஆமதாபாத், கோயமுத்தூர், கொச்சி

ஈறுகளை உறுதியுடனும்
பற்களை ஆரோக்கியத்துடனும்
சுவாசத்தை நறுமணத்துடனும்

இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்

பளிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்




ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹானஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Private Ltd.

TAM. 3-27

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது பயர்ஸ்டோன்



...நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்

ஏனென்றால்—உலகத்தின் தலைசிறந்த மோட்டாரோட்டப் பந்தயங்களில், ஒரு டயர் கூட பழுதுபடாமல், ஆபத்தான நெளிவு வளைவுகளுக்கும் அசுர அதிர்ச்சிகளுக்கும் கடுங் கொதிப்புக்கும் ஈடுகொடுத்து பயர்ஸ்டோன் டயர்கள் தமது பாதுகாப்புத் தன்மையை ஆண்டுதோறும் நிரூபித்து வருகின்றன. உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பவை பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும் ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்புத் தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் டயர்கள் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.

ஸவுத் கரோலினாவிலுள்ள டார்லிங்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒன்பதாம் வருடத்திய 500 மைல் மோட்டாரோட்டப் பந்தயத்தில் முதன்மையாக வெற்றி பெற்றவரான க்ளென் ராபர்ட்ஸ், அப் பந்தய ஓட்டத்தில் 121 டிகிரி உஷ்ணத்தை எதிர்த்து நிற்க வேண்டியிருந்த பயர்ஸ்டோன் டயர்களே 'தமது' அற்புத சாதனைக்கு அடிகோலியதென்று கூறுகிறார்.




Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

டியூப் இல்லாதது அல்லது டியூப்புள்ளது



சேயாற்றில் வென்றான்



உள்கோபுர வாயில்

பல்லவ மன்னர்கள் இலக்கியப் பெருமை பெற்றவர்கள். நந்திவர்மன் தொண்டை மண்டலத்தை ஆண்டவன் ஆனதினால் நந்தியம்பெருமான் தொண்டைமான் என்ற பெயரும் பெறுகிறான். இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஒரு கலம்பகம் எழுதி யிருக்கிறான் ஒரு புலவன். கலம்பகம் பாடிய புலவன் நந்திவர்மன் தம்பியே என்றும், இருவருக்கும் இருந்த பகை காரணமாகக் கலம்பகத்தில் அறம் வைத்துப் பாடினான் என்றும், கலம்பகப் பாடல்களைக் கேட்டால் உயிர் துறக்க நேரிடும் என்று கவிஞனே எச்சரித்த போதும், தமிழ்க் கவிதையில் உள்ள ஆர்வத்தால் கலம்பகப் பாடல்களைப் பாடக் கேட்டு, கடைசியில் சிதையில் ஏறி உயிர் நீத்தான் அவன் என்றும் கர்ண பரம்பரை கூறும். கலம்பகப் பாடல்களைப் படித்தால், அப்படியே உயிர் கொடுத்துக் கேட்கக்கூடிய பாடல்களே என்று தோன்றும். (கதையில் உண்மை ஒரு சிறிதும் இல்லாவிட்டாலும் கூட) கலம்பகத்தின் மூலம் அவனது வெற்றிப் பிரதாபங்களை யெல்லாம் அறிகிறோம் நாம். பாண்டியர், சோழர், சளுக்கியர்களை, நென்மலி, மண்ணைக் குடி, கருவூர் என்ற இடங்களில் நடந்த போர்களில் இவனே வெற்றி பெற்றிருந்தும், [கலம்பகத்தில்] இவன் தெள்ளாற்றில் பகைவர்களை வெற்றி கண்டதையே பிரதானமாகக் கூறி யிருக்கிறது. 'தெள்ளாறை நந்தி' 'தெள்ளாற்றில் வென்றான்' என்ற விருதுப் பெயர் நிலைத்து நின்றிருக்கிறது. இவனது கல்வி யறிவு, வள்ளன்மை, போரில் வெல்லுந் திறத்தை யெல்லாம் கலம்பகம் பாடிய கவிஞன் மட்டுமல்ல, பாரதம் பாடிய **பெருந்தேவனாரும்** பாராட்டி யிருக்கிறார், ஓர் அழகான பாட்டில் :

உண்மையால், கல்வியால்
மாபலத்தால், ஆள்வினையால்
வண்மையால் பாராள்
உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வான்ஏறத்
தெள்ளாற்றில் வென்றானொடு
யார்வேந்தர் ஏற்பார் எதிர்

தெள்ளாற்றில் வென்றான் என்ற பெயர் நந்திவர்மனுக்கு நிலைத்தது போல, **சேயாற்றில் வென்றான்** என்ற பெயரும் வடஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு சிறு ஊருக்கு நிலைத்திருக்கிறது. (பாலாற்றில் வென்றான் என்றும் ஒரு ஊர் உண்டு. அதைப் பாலாற்று வண்ணான் ஆக இன்று மாற்றி யிருக்கிறார்கள். பாலாற்றில் குடிக்கவே தண்ணீர் கிடையாதே, வண்ணானுக்கு எங்கே தண்ணீர் கிடைக்க போகிறது?) இந்தச் சேயாற்றில் வென்றவன் வேறு யாருமில்லை. சமயக் குரவர்களில் முதல்வரான ஆளுடைய பிள்ளையாம் **ஞான சம்பந்தரே**. அந்த வரலாறு என்ன என்று தெரிந்துகொள்ள செய்யாறு என்று இன்று வழங்கும் திருவோத்தூர் என்னும் தலத்துக்குப் போகிறோம்.

இளவயதினராக இருந்த ஞானசம்பந்தர், நாட்டில் பரவி இருந்த புறச் சமயத்தினராம் சமணரோடு வாதிட்டு வெற்றி காணவேண்டியவராகவும் இருந்திருக்கின்றார். மதுரையில் சமணர்களோடு கனல்வாதம், புனல்வாதம் எல்லாம் புரிந்து, அவர்களை வென்று, அங்கிருந்து ஆண்ட கூன்பாண்டியனின் கூனை (உடலில் உள்ள கூனையல்ல; உள்ளத்தில் உள்ள கூனையே) நீக்கி, அவனைச் சுந்தர பாண்டியனாக்கி, அவனது மனைவி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறை முதலியவர்களால் வணங்கித் துதிக்கப்பெற்றவர் அவர் என்பது வரலாறு. இந்தச் சமணர்கள் அவரை இத்துடன் விட்டுவிடவில்லை. பாண்டிய நாடு, சோழ நாடு எல்லாவற்றையும் சுற்றிவிட்டு, தொண்டை நாட்டிலே உள்ள திருவோத்தூர் என்னும் தலத்துக்கு வந்தாலும், அங்கேயும் சமணர்கள் ஆதிக்கம் மிகுந்திருப்பதையே காண்கின்றார். தென் திசையிலிருந்து வந்த ஞானசம்பந்தர் சேயாற்றின் தென்கரையில்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

இருந்தே, திருவோத்தூர் வேதபுரி நாயகன் கோபுரத்தையும் மதிலையும் தரிசித்து அந்தக் கரையிலுள்ள திருமடத்தில் தங்குகிறார். மதுரையில் ஞானசம்பந்தர் நிகழ்த்தியவைகளைக் கேட்டிருந்த செய்யாற்றுச் சமணர்கள் ஒரு வேள்வி செய்து அதிலிருந்து எழுந்த கொடிய பாம்பொன்றை அவர்மீது ஏவுகின்றார்கள். அவரோ பாம்பை, சமணர்களது 'வேந்தன் வாழ் இந்தி சூழ் திரு மனைக்கே ஏகென்று' உதறிவிடுகிறார். அதனால் துயருற்ற அரசன் வந்து அடிவணங்க, ஞானசம்பந்தர் :


> தொட்டீரே, துத்தி ஐந்தலை நாகத்தை
> ஆட்டீரே, அடியார்வினை
> ஓட்டீரே, உம்மை ஏத்தும், ஓத்தூர்
> நாட்டீரே, அருள் நல்குமே

என்று இறைவனை வேண்டுகிறார். இறைவனும் மகுடி ஏந்திப் பாம்பாட்டியாக வந்து, கண்டோர் வியக்கப் பாம்பை ஆட்டிவிட்டு அதைப் பிடித்துக்கொண்டே கோயிலுக்குள் சென்று மறைகிறார். இதனால் சமணர் பகை வளர, அரசன் விரும்பியபடி புனல்வாதத்திற்கே ஒத்துக்கொள்கிறார். சமணர்கள் எழுதியிட்ட ஓலையைச் செய்யாற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுகிறது. ஆனால் ஞானசம்பந்தர் பாடிய பதிகத்தில் ஒரு பாட்டை ஏட்டில் எழுதி ஆற்றில் இட, அது புதுநீரைக் கிழித்துக்கொண்டு முன்னேறி ஒரு பழம் பதியினை அடைகிறது. இவ்வாறு ஏடு எதிர் சென்று நின்று தங்கின இடமே அன்று முதல் **செய்யாற்றில் வென்றான்** என்ற பெயரால் வழங்கப்படுகிறது. செய்யாற்றில் வென்றவன் வேதபுரி நாயகனும் அவன் புகழ் பாடும் நற்றமிழ் வல்லஞானசம்பந்தனுமே என்றாலும், பெயர் நிலைக்கிறது ஒரு சிறு ஊருக்கு. இப்படியெல்லாம் தோற்றும் சமணர்கள் மாத்திரம் தங்கள் வாதத்தை விடுபவர்களாக இல்லை. 'இவ்வூர்க் கோயிலிலும் ஆற்றங் கரையிலும் காயாது நிற்கும் ஆண் பனைகள் நிற்கின்றன. அவைகளைக் காய்க்கும் பெண் பனைகளாக ஆக்க முடியுமா?' என்று சம்பந்தரிடமே மறுபடியும் 'சவால்' விடுகிறார்கள். அந்தச் சவாலை ஏற்று 'குரும்பை ஆண் பனை ஈன்குலை ஓத்தூர்' என்ற பாடலைப் பாட எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் கோயிலுக்குள் நின்ற ஆண் பனை குலைதள்ளி, பெண் பனையாக மாறுகிறது. இன்றைக்கும் அந்தப் பனைகளின் வாரிசாகக் கோயில் பிரகாரத்திலேயே, குலை ஈனும் ஐந்து பனைகள் நின்றுகொண்டிருக்கின்றன.

இந்த விதமாகச் சமணர்களையெல்லாம் வெற்றி கண்ட இடமாகவும், ஆண் பனை பெண்பனையான அற்புதம் நிகழ்த்திய தலமாகவும் இருப்பதே சம்பந்தர் தேவாரம் பெற்ற திருவோத்தூர் என்று அன்று வழங்கின இன்றைய **செய்யாறு** (பாலாற்றுக்கு ஒரு சேய் ஆறாக விளங்குவதே அழுத்தம் திருத்தமாகச் செய்யாறு என்று மக்களால் அழைக்கப்படுகிறது.) இங்கு கோயில் கொண்டிருப்பவர்தான் வேதபுரி நாயகன். அவர் துணைவியின் திருநாமமோ **இளமுலை நாயகி**. வேதங்களையெல்லாம் உலகுக்கு வழங்கிய பெருமகனை இறைவனை வேதபுரியான் என்று இத்தலத்தில் மட்டும் அழைப்பானேன்? வேதங்களை ஓதியுணர்ந்து பிறருக்கு உரைக்கும் முனிவர்களே வேதம் ஓதுதலை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் எல்லோருமாக வேண்ட இறைவனே வேதியர் உருவில் வந்து தேவர் முனிவர்களுக்கெல்லாம் வேதத்தை விரித்து ஓதுகிறார். வேதம் ஓதுவித்த ஊர் ஓத்தூர் எனப் பெயர் பெறுகிறது. இதை இறைவனே சொல்லுவதாகக் **காஞ்சிப் புராணம்** கூறும்.

> தத்து நீர் அலைபுரட்டும் சேயாற்றின்
> தடங்கரைக் கண், இமையோர்கட்கும்
> மெய்த்தவர்க்கும், ஓதுவித்தோம்
> ஆதலினால்
> மேவு திருவோத்தூர் என்றும்
> அத்தலத்தில் எமைத் தொழுவோர்
> அருமறை நூல் முழுதுணர்ந்து
> வீடுசேர்வர்

என்பது பாட்டு; இனி அந்த மறைகளை விரும்பியபடி வேத ஒலிகளை எல்லாம் சிவபெருமான் தமது டமருகத்தில் அடக்கி, அந்த டமருகத்தை ஒலித்துக் கொண்டு வீர நடனம் ஆடிய தலமும் இதுவே என்று தலவரலாறு கூறும். கோயிலில் உள்ள நடராஜரது திருஉருவில், வீர நடனத்தின் புதிய சாயை ஒன்றும் இல்லைதான்? என்றாலும் அங்கு வீர நடனம் ஆடும் பெரிய பிள்ளை உண்டு. கோயில் கோபுர வாயிலைக் கடந்து, அதற்கடுத்த வாயிலையும் கடந்து, வெளி மண்டபத்தையும் கடந்து, உட் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு பிள்ளையாரை, வெளியே நிறுத்தி இருக்கிறார்கள். அவருக்கு மார்புவரை ஒரு துணியையும் சுற்றி வைத்திருக்கிறார்கள். கலை உள்ளம் படைத்த அன்பர்கள் அர்ச்சகரை அழைத்துப் பிள்ளையாருக்கு அணிந்திருக்கும் அந்த வஸ்திரத்தை அகற்றினால், அவர் ஒரு நர்த்தன விநாயகர் என்றும் அந்தத் திருக்கோலம் மிகவும் அழகான வடிவம் என்றும் காண்பர். அந்த அற்புதத் திருக்கோலத்தையே பார்க்கிறீர்கள் பக்கத்திலே. 'வென்றூடு இருத்தாளை வியந்து கைத் துடி கொட்ட நின்றாடும் மழகளிறு' என்று அன்றே அழைத்திருக்கிறார்கள் பக்தர்கள். வீர நடனம் ஆடிய தந்தை துடி கொட்ட வீர நடனமே ஆடுகிறார் விநாயகர். கலை உலகில் ஓர் அரிய சிருஷ்டி அது. நான்கடி உயரத்தில்



வீர நடனம் புரியும் விநாயகர்

திருவாசியும் சேர்ந்து ஒரே கல்லில் செய்யப்பட்டுள்ள திருவுருவம் அது.

இனி கோவிலுள் சென்று வேதபுரிநாதனையும் இளமுலை நாயகியையுமே தொழுது திரும்பலாம். வேதபுரீசுரரைப் பற்றித்தான் வேண்டியமட்டும் தெரிந்து கொண்டோமே. அம்மையைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டாமா? தக்கன் மகளாகிய தாக்ஷாயணியை இறைவன் மணந்து கொள்கிறான். மாமனாராகிய தக்கனுக்கு, மருமகனாகிய இறைவனை விடத் தான் உயர்ந்தவன் என்ற செருக்கு. அதனால் இருவருக்கும் பிணக்கு. தக்கன் இயற்றும் வேள்வியில், மருமகனுக்கு அக்ரஸ்தானம் இல்லை என்பது மட்டும் அல்ல, அழைப்பே இல்லை. இறைவனுக்கோ ஒரே கோபம். மாமனுக்கும் மருமகனுக்கும் இடையே வளர்ந்துள்ள கசப்பைத் தீர்த்து வைக்க மகளே புறப்படுகிறாள், தக்கன் வேள்வி நடத்தும் இடத்துக்கு. அங்கு அவளுமே அவமதிக்கப்படுகிறாள் தந்தையால். அதனால் தன்னுடலையே தீக்கிரையாக்குகிறாள் தாக்ஷாயணி. பின்னர் இறைவன் அருளால் இமவான் மகளாகப் பிறந்து வளர்ந்து பேதைப் பருவம் எய்துகிறாள். பரமனை அடையக் கருதித் தவச் சாலை புகுந்து தவக்கோலம் கொள்கிறாள். தவத்திற்கு இரங்கிய இறைவன் ''இளமுலையே! நீ எனது வார்த்தையைக் கேட்காமல் தக்கன் வேள்விக்குச் சென்றாய். கொண்ட புருஷனின் சொல்லைத் தட்டிய பாவம் நீங்கினால்தான் உன்னை மணப்பேன்'' என்கிறார். அம்மையும் ''நானோ பேதைச் சிறுமி, பாவம் தீரும் வழியை அருளவேண்டும்'' என்று வேண்டுகிறாள். அவரும் ''திருவோத்தூர் என்னும் தலத்துக்குச் சென்று என்னை நோக்கித் தவம் செய்'' என்கிறார். அப்படியே செய்து இளமுலைநாயகி இறைவனை மணந்து கொள்கிறாள். அம்மையின் திரு உரு அழகான தொன்று. பேதைப் பருவத்திலே தவம் புரிந்து, பெதும்பைப் பருவத்திலேயே இறைவனை மணந்து கொண்டவள் அவள். மங்கைப் பருவத்தில் மணாளனை மணந்து கொண்ட நங்கையாக மற்றைய கோயில்களில் காட்சி தருபவளே இந்தத் தலத்தில் இளவயதில் இறைவனை மணந்த பேதையாக நிற்கிறாள்.

சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றைத் தவிர இப்பதியைப் பாடிய பெருமக்கள் பலர். 'நிலவு புகழ் திருவோத்தூர்' என்று **பட்டினத்தடிகள்** பாடினால், 'சிதமலர் மென்சோலை சூழ் திருவோத்தூர்' என்று **சேக்கிழார்** பாடுகிறார். தல புராணம் ஒன்றும் பாடப்பட்டிருக்கிறது விரிவாக. காஞ்சிக்குத் தெற்கே பதினெட்டு மைல் தொலைவிலேயே இருப்பதால் அன்பர்கள் சென்று 'இளமுலையாம் ஆத்தாள் தனைப் பணிந்து, அன்பால் துதித்து, அருள் படிந்து கூத்தாடியதால் உளத்து இருத்தி'டலாம்.'





''காலேஜ் வாத்தியார், அவர் சொன்ன வார்த்தையை வாபஸ் வாங்கா விட்டால் நான் இனிமேல் காலேஜுக்குப் போகப் போவதில்லை.''

''அவர் சொன்ன வார்த்தை என்ன?''

''காலேஜ் பக்கம் இனிமேல் வராதே என்றார்!''

★

''கமலம், உன் முகம் எவ்வளவு அழகு என்ன கம்பீரமாக இருக்கு!''

''இவ்வளவு நாளாக இல்லாமல் இப்போது திடீரென்று என்னை வர்ணிப்பதின் காரணம் என்ன?''

''நேற்றைக்குத்தானே ஒருவர் என் முகம் உன் முகம் மாதிரியே இருக்கு என்று சொன்னார்.''

★

''உங்கள் ஓட்டலில் பதார்த்தங்கள் மீது ஈக்கள் வந்து உட்காருகின்றனவே அதைத் தடுக்க ஏதேனும் முன் ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?''

''ஓ, செய்திருக்கிறேனே. வரும் வழியில் ஒரு பாத்திரத்தில் ஈக்கள் தாம் அமர்ந்துகொண்டு உண்ண வர ஜாம் வைத்திருக்கிறேன்!''

★

பக்கத்து வீட்டுக்காரர்: நீங்கள் என் வீட்டில் மரியாதையாக நடந்துகொள்ளாவிட்டால் நான் கடைக்குப் போய் என் மனைவிக்கு ஒரு விலை உயர்ந்த புடவையை வாங்கித் தந்து விடுவேன்.

மற்றவர்: சம்பந்தம் இல்லாமல் இது என்ன மிரட்டல்?

பக்கத்து வீட்டுக்காரர்: என் மனைவிக்கு ஒரு புடவை வாங்கினால் உங்கள் மனைவி அதைப் பார்த்து உங்களுக்கும் செலவு வைப்பாளல்லவா?''

★

சிலபேர் ஹோட்டல் சாப்பாட்டை நம்பியே தங்கள் வாழ் நாள் முழுவதையும் கழிக்கிறார்கள். சிலர் கல்யாணம் ஆகாத காரணத்தினால் அங்கு சாப்பிடுபவர்கள். சிலர் கல்யாணம் ஆன காரணத்தினால் சாப்பிடுபவர்கள்.

★

கைக் கடிகாரத்தைப் பார்த்தபடியே டாக்டர் நோயாளியின் நாடியைப் பரிசோதித்தார். 'அடாடா! நான் எதிர்பார்க்கவே இல்லையே. இப்படி திடீரென்று மோசம் செய்யும் என்று...... சப்தத்தையே காணுமே' என்றார். நோயாளி மூர்ச்சையானார். டாக்டர், 'சார்! சார்! உங்கள் நாடியைச் சொல்லவில்லை எழுந்திருங்கள். என் கைக்கடிகாரம் நின்றுவிட்டது. அதைத்தான் சொன்னேன்!' என்றார்.



தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவாரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.



பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

FPY-54-TAM

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள்: தாதா அண்டு கம்பெனி
86, லைனியப்ப நாயக் தெரு. சென்னை-3





பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

53. குசேலர் கதை

பிறகு சுகர் பரீக்ஷித்து மன்னனுக்கு உஷா பரிணயம், ஜராஸந்தன் முதலியோரின் வதம், பலராமன் கோகுலம் சென்றது, முதலிய வரலாறுகளை எடுத்துரைத்தார். மன்னவன் சுகரிடம் "கண்ணனுடைய லீலைகள் மற்றும் எவை உண்டோ, அவைகளைக் கேட்க விரும்புகிறேன். ஒருதரம் கேட்டவனுக்குப் போதுமென்ற எண்ணம் ஒரு பொழுதும் வராது" என்றான். சுகருடைய மனம் கண்ணனிடம் ஈடுபட்டது. மன்னனுக்குக் குசேலர் சரிதையைச் சொல்லலானார்.

சுதாமா என்று ஓர் அந்தணர் இருந்தார். அவர் இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தாலும், மனத்தையும் வென்று புலன்களையும் தன்வசப் படுத்திய பெரியார். கிடைப்பதைக் கொண்டு வாழ்ந்து வந்தார். கண்ணனிடம் பக்தி உள்ளவருள் முதல்வர். கண்ணனுக்குத் தோழர். அவருடைய குணங்கள் எல்லாம் பொருந்திய மனையாளும் அவருக்கு வாய்த்திருந்தாள். ஆனால் வறுமையால் வாடி மெலிந்திருந்தாள். வாழ்க்கை நடத்தப் பொருள் இல்லையென்று மனம் நொந்து வருந்தினாள். ஒருநாள் பயந்து, உடல் ஒடுங்கத் தன் கணவனை அணுகினாள். "அந்தணரே! உமக்குச் செல்வத்துக்கு அரசரானவர் நண்பராயிற்றே. அவர் தம்மை அண்டினவரைக் காப்பவர்; சரண்புகுந்தவரைக் கைதூக்குபவர் என்பது உண்மையன்றோ? ஆகவே, நல்லோருக்கு அடைக்கலமான அவரைக் கண்டு வருவீர். வறுமையால் வருந்தும் உங்களுக்கு அவர் ஏராளமான செல்வத்தை நல்குவார். தானே நினைப்பவருக்குத் தன்னையே தரும் தாமோதரன் பக்தி செய்பவருக்கு வெறும் பொருள்களைக் கொடுப்பார் என்பதில் சந்தேகம் இல்லை" என்றாள்.

இவ்வாறு மனைவியால் ஏவப்பட்ட அந்தணர் கண்ணனைக் காண இதுவும் ஒரு வாய்ப்பென்று ஆனந்தம் அடைந்தார். புறப்பட்டு துவாரகை செல்லுவது என்று நிச்சயித்தார். ஆயினும் "வெறும் கையோடு கண்ணனைக் காணலாகுமா? ஏதாவது காணிக்கை கொண்டு செல்ல வேண்டுமே?" என்று மனைவியை வினவினார். கொடுப்பதற்கு ஒன்றும் அவளிடம் இல்லை. நாலு வீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு கைப்பிடி அவல் வாங்கி, துணியில் கட்டிக் கணவனிடம் கொடுத்தாள்.

கண்ணனைக் காண வேண்டும் என்று வழி நடந்த அந்தணர் விரைவிலே துவாரகையை அடைந்தார். மூன்று காவல் கூடங்களையும், மூன்று வீதிகளையும் தாண்டி நகரத்துக்குள் சென்றார். அங்கு அந்தணர், யாதவர் முதலியோருடைய வீடுகளையும், கண்ணனுடைய பல பத்தினிமார் வீடுகளையும் கண்டார். அதன் நடுவே ஒளி நிறைந்து கண்ணைப் பறிக்கும் மாளிகை ஒன்று இருந்தது. பிரம்மத்தோடு கலந்தவர்கள் அடையும் பேரானந்தத்தை அடைந்து, சுதாமா அந்த மாளிகைக்குள் நுழைந்தார்.

வந்த நண்பனைக் கண்ணன் தூரத்திலேயே கண்டான். வீற்றிருந்த ருக்மிணியின் கட்டிலினின்று பரபரப்புடன் இறங்கினான். களிப்புடன் தழுவிக் கொண்டான். ஆனந்தக் கண்ணீர் வடித்தான். கட்டிலில் அமரச் செய்து பலவாறு உபசரித்தான். அவருடைய கால்களைத் தானே அலம்பினான். அவருடைய மேனிக்குக் களபம் பூசினான். குங்குமம் இட்டினான். நறுமண தூபங்களினால் மகிழச் செய்தான். அன்னமிட்டுத் தாம்பூலம் தந்தான். பசுவைத் தானமாக அளித்தான். பல்வேறு நல்வரவும் கூறினான். அழுக்கேறிய ஆடையுடுத்து மலினமான மேனியோடு வீற்றிருந்த அந்தணருக்கு ருக்மிணி தேவி தானாகவே வெண்சாமரம் கையேந்தி விசிறினாள். இந்த அதிசயத்தைக் கண்ட அந்தப்புரத்து ஆட்கள் ஆச்சரியப்பட்டனர். 'இந்த அந்தணன் என்ன புண்ணியம் செய்தனனோ? உடல் மீது அழுக்கு, வந்தது பிச்சை எடுக்க, தள்ள வேண்டிய தனியன், தலைவனைப்போல் கண்ணனால் ஆலிங்கனம் செய்யப்பட்டானே" என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர்.

கண்ணனும் சுதாமாவும் கை கோத்துக் கொண்டு பழங் கதைகளைப் பேசலானார்கள். இருவரும் ஆசிரியர் வீட்டில் படித்துக் கொண்டிருந்த

பொழுது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டனர். கண்ணன் "அறமறிந்த அந்தணரே! ஆசிரியர் அநுக்ரஹம் பெற்று வீடு திரும்பியதும் உமக்குத் தகுந்த மனைவியாள் வாய்த்தனளா? சிற்றின்பங்களில் நீர் ஈடுபடவில்லை என்று எண்ணுகிறேன். உம்மைக் கண்டால் பணத்தாசை பிடித்தவராய்த் தோன்றவில்லை. குருகுலத்தில் நாம் வாழ்ந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

"ஒருநாள் ஆசிரியர் மனைவி நம்மிருவரையும் கானகம் சென்று (ஸமித்து) சுள்ளி பொறுக்கி வரச் சொன்னது உமக்கு நினைவிருக்கிறதா? நாம் காட்டில் திரிந்து கொண்டிருக்கும் பொழுது புயலும், இடியும், மின்னலும் மழையும் தோன்றின. கதிரவனும் மறைந்தான். எங்கும் இருள் மூடிக்கொண்டது. பூமியெல்லாம் நீர் நிறைந்து, எது மேடு எது பள்ளம் என்று தெரியாமல் போய்விட்டது. அப்பொழுது நாம் இருவரும் திக்குத் தெரியாத காட்டில் கை கோத்துக் கொண்டு இங்குமங்கும் திரிந்தோம். பொழுது புலர்ந்ததும், நம்மைக் காணாமல் கவலை மிகுந்து தேடிக் கொண்டு ஆசிரியரான ஸந்தீபினி அங்கு வந்தார். வருந்தி நிற்கும் நம்மைக் கண்டார். 'என் மைந்தர்களே! மனிதருக்கு உடலே மேன்மையானது. அதைப் பொருட்படுத்தாது எனக்காக இரவெல்லாம் காட்டில் திரிந்தீர்களே! அறம் செய்ய அடிப்படையான உடலை எனக்கென்று அர்ப்பணம் செய்தீர்கள். இதைவிட குருவுக்குச் சீடன் என்னதான் செய்ய முடியும்? என் மனம் குளிர்ந்தது. நீங்கள் எண்ணியது கை கூடட்டும். நீங்கள் கற்றது பயன்படட்டும்' என்றார். இதைப் போல் எத்தனையோ சம்பவங்கள் நாம் குரு வீட்டில் வசித்து வருங்கால் நடந்தன" என்றான் கண்ணன். இதைக் கேட்ட சுதாமா "ஹே தேவ தேவ! மெய்யுருவான உம்மோடு கூட வாழும் பெரும் பாக்கியம் நாங்கள்பெற்றோம். அதைவிட வேறென்ன வேண்டும்?" என்று பதில் அளித்தார்.

மற்றவர் மனத்தில் தோன்றும் எண்ணங்களை உணர்ந்த கண்ணன், புன்னகை புரிந்து கொண்டு சுதாமாவை ஒரு கேள்வி கேட்டார்.

"என்னைக் காண வரும்பொழுது காணிக்கை ஏதாவது எடுத்து வந்தீரா? அன்புடன் அளிக்கும் அணுவும் எனக்குப் பெரிது. அன்பற்று அளிக்கும் எதுவும் எனக்குச் சிறிதே. துளிரோ, மலரோ, கனியோ, நீரோ, பக்தியோடு எனக்கென்று கொடுத்தால் அதை நான் ஆசையுடன் ஏற்றுக் கொள்வேன்" என்றான். இவ்வாறு கண்ணன் கேட்டும் அந்தணன் வெட்கி வாய் மூடி வீற்றிருந்தான். கண்ணனுடைய உள்ளம் கசிந்தது. "செல்வம் வேண்டுமென்று என்னை எப்பொழுதுமே இவர் வழிபாடு செய்ததில்லை. இப்பொழுது மனைவியின் இச்சைக்கிணங்கிப் பொருள் கேட்க வந்தும் வெட்கி நிற்கிறார். இவருக்கு விண்ணவரும் காணாத செல்வத்தைத் தருவேன்" என்று திண்ணம் கொண்டான்.

அந்தணர் வைத்திருந்த துணி மூட்டையைத் தானாகவே பறித்து, "இது என்ன?" என்று கேட்டான். மூட்டையை அவிழ்த்து உள்ளிருந்த அவலைக் கண்டான். "தோழரே! இந்த அவல் எனக்கு மிகப் பிரியமானதன்றோ? இவை எனக்குத் திருப்தியைத் தருகின்றன" என்று கூறிவிட்டு ஒரு கைப்பிடி அவலை எடுத்து உண்டான். இரண்டாவது கைப்பிடியை எடுத்து உட்கொள்ளவிருக்கும்பொழுது ருக்மிணி தடுத்தாள். "பிரபோ! இவ்வுலகிலும் மற்ற உலகங்களிலும் இருக்கும் செல்வமெல்லாம் ஒருவன் அடைவதற்கு நீர் ஒரு பிடி அவல் உண்டதே போதும்" என்று கூறிக் கையைப் பிடித்தாள்.

ஆனால் இந்த இரகசியத்தை அந்தணன் அறியவில்லை. அன்றிரவு மாதவன் மனையில் தங்கி வேண்டிய அளவு உண்டு, தம்மை விண்ணுலக வாசி என்றே கருதினார். மறுநாள் பொழுது புலர்ந்ததும் கண்ணனிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினார். கண்ணனிடமிருந்து தானம் ஒன்றும் பெற்றுக் கொள்ளவில்லை. வேண்டியதைக் கேட்கவும் இல்லை. வறுமையினால் வெட்கம் கொண்டு சும்மா இருந்துவிட்டார். ஆனால் 'கண்ணனைத் தரிசனம் செய்த பெரும் பாக்கியத்தை அடைந்தோம்' என்றுமனமகிழ்ச்சி மிகுந்தவராய் வழி நடந்தார். "லக்ஷ்மியை மார்பில் அணிந்த அனந்தனால் ஆலிங்கனம் செய்யப்பட்டேன். வறுமையால் வாடியிருக்கும் நான் எங்கே? லக்ஷ்மிநாதனான கண்ணன் எங்கே! ருக்மிணிதேவி எனக்குச் சாமரம் வீசினாளே. ஒருவேளை தனம் கொடுத்தால் தன்னை மறந்துவிடுவேன் என்று நல்லெண்ணம் கொண்டுதான் கண்ணன் எனக்கு ஒன்றுமே தரவில்லை போலும்" என்று எண்ணிக்கொண்டு தமது வீட்டை நெருங்கினார் சுதாமா.

ஆனால் அவ்விடத்தில் தமது சிறு வீட்டைக் காணவில்லை. சூரிய சந்திரருக்கு ஒப்பான விமானங்களைக் கண்டார். பறவைகள் நிறைந்து, மலர்ந்த செந்தாமரை மிகுந்த ஓடையுடன் விளங்கும் பூங்காவனத்தைக் கண்டார். மான்


எழிலுடன் திகழ...
சந்திரகாந்தா
ரெமி
அழகு சாதனங்கள்
AVRA-592
இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo
ரேடியோ சிலோன்: 41.72 மீட்டரில் "ரெமி கதைக்கலை நாடகம்"
வெள்ளிக்கிழமைதோறும் 6-30 லிருந்து 6-45 வரை




இந்திய, உதவி பாதுகாப்பு மந்திரி திரு ரகுராமய்யா அவர்களின் புதல்வி **ஸ்ரீமதி திவ்யஞான சரோஜினி தேவி, பி. ஏ.**க்கும் கோவை விஜயலட்சுமி மில்லின் நிர்வாக டைரக்டர் திரு வி. எல். பாலகிருஷ்ண நாயுடு அவர்களின் சகோதரர் திரு **கே. எல். வரதராஜன், பி. எஸ்.ஸி.**க்கும் ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் புது தில்லியில் நடந்தேறியது. திருமணத்துக்கும், மாலையில் நடந்த ஸ்ரீமதி எம். எஸ்.ஸின் இன்னிசையுடன் கூடிய வரவேற்பு வைபவத்துக்கும் ஏராளமான பிரமுகர்களும், மந்திரிகளும் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.

இடமிருந்து வலம்: மந்திரி திரு ரகுராமய்யா, காஷ்மீர் முதல் மந்திரி பக்ஷிகுலாம், ஸ்ரீமதி ரகுராமய்யா, பிரதமர் நேருஜி, மணமக்கள்.

கண் படைத்த மங்கையரைக் கண்ணுற்றார். "இதென்ன விந்தை? இது யாருடைய வீடு? என் வீடு என்னவாயிற்று?" என்று இவர் தமக்குள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது விண்ணுலக வாசிகளுக் கொப்பான ஆண்களும் பெண்களும முன் வந்து இசை பாடி எதிர்கொண்டு அழைத்தனர். அச் சமயம் கணவன் வருகையை அறிந்த அவர் மனைவி, அலர்மேல் மங்கையே அவதாரம் செய்தனளோ வென்று கண்டவர் கண் மயங்க, வீட்டிலிருந்து வேகமாக வெளியேறினாள். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. கணவனைக் கண்டதும் மனத்திலே வணங்கினாள். தேவமாதெனத் தோன்றும் மனைவியைக் கண்டு சுதாமா ஆச்சரியம் அடைந்தார். அவளோடு இந்திரன் மாளிகையென விளங்கும் அரண்மனைக்குள் சென்றார். மணிமயமான தூண்கள், பால் நுரையை வென்ற படுக்கைகள், தங்கத் தண்டு வாய்ந்த சாமரங்கள், மெதுவான மேல் விரிப்பையுடைய ஆசனங்கள், மரகதம் பதித்த சுவர்கள், இரத்தினத்தால் இழைத்த விளக்குகள், இன்னும் ஏராளமான செல்வங்கள், எல்லாவற்றையும் கண்டு அசைவற்று நின்று, வேண்டாமலே வந்த வைபவத்தைக் குறித்து சுதாமா சிந்திக்கலானார். "தரித்திரத்துக்கே உவமையென வாழ்ந்து வந்த எனக்கு எல்லையற்ற செல்வம் கிட்டியது. கண்ணனைக் கண்ணுற்றேன் என்ற காரணம் ஒன்றே. இது திண்ணம். குடியானவன் உறங்கும் பொழுது தெரியாமல் பொழியும் மழையென, எனக்குச் சொல்லாமலே செல்வங்களைச் சொரிந்தனன் எம்பிரான். தான் கொடுக்கும் பெரும் செல்வம் அற்பம் என்று கண்ணன் கருதுகிறான் போலும். அன்புடன் அளிக்கும் அணுவும் எனக்கு மேலானது என்று கண்ணன் உரைத்ததின் உண்மை எனக்கு இப்பொழுதுதான் விளங்கிற்று. ஒரு கைப்பிடி அவலுக்கு இத்தனை பெருமையா? கண்ணனோடு கலந்து பேசிப் பெருமை பெற்ற எனக்கு அவனிடம் அன்பும், பக்தரின் பரிசயமும், எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். இதொன்றே எனது கோரிக்கை. செல்வத்துடன் செருக்கும் சேரும். மெய்யறிவு மறைந்து போகும். ஆகவே, கண்ணன் தன்னுடைய உண்மை பக்தர்களுக்குச் செல்வத்தைக் கொடுப்பதில்லை. எனக்கு ஒரு வேளை பக்தி போதாது; செல்வம் போதுமானது என எண்ணினானோ?" என்றெல்லாம் சிந்தித்துத் தயங்கினார். கண்ணனிடம் பக்தி குறையக்கூடாது என்று நிச்சயம் செய்து கொண்டார். ஆகவே செல்வங்கள், கொட்டிக் கிடந்தும் அவைகளில் அதிகமான பற்றுதல் இல்லாது வாழ்க்கையை நடத்தி வந்தார்.

ஒருவராலும் வெல்ல முடியாத திருமால் தனது பக்தர்களால் வெல்லப்படுகிறான், என்பதே இக் கதையின் கருத்து. இக் கதையை பக்தியோடு கேட்பவர்கள் செயற் பயனைத் தவிர்த்து முக்தியை அடைவார்கள் என்று புராணம் கூறுகிறது.



அம்பீஸ் கபே

1959 ஆகஸ்ட் 23ம் தேதி அன்று இந்தியாவின் நிதி அமைச்சர் கனம் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களால் மவுண்ட் ரோடில் உள்ள வானளாவும் L. I. C. கட்டிடம் திறந்து வைக்கப்பட்டபோது நடைபெற்ற டீ பார்ட்டியை வெற்றிகரமாகச் செய்ய ஒத்துழைத்த

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

நிர்வாகத்தினருக்கும், ஊழியர்களுக்கும் தங்களது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகின்றனர்

டீ பார்ட்டி சப்ளை செய்தவர்கள்

அம்பீஸ் கபே

(போர்டிங் & லாட்ஜிங்)

6, 7, 8, & 9, பிராட்வே, சென்னை - 1

போன் : **4747 & 21853**

திருமண விருந்துகள், பகல் விருந்து வைபவங்கள், தேனீர் மற்றும் தோட்ட விருந்துகள் உள்பட எல்லாவிதமான உணவு விருந்து சேவையும் மிதமான கட்டணங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

L. R. SWAMI

கிஷோராமிர்தம்

(ஆயுர்வேத கிரைப் வாட்டர்)

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு மிகச்
சிறந்ததொரு டானிக்

குழந்தைகளின் வியாதிகளுக்குக்
கைகண்ட மருந்து

✿

தயாரிப்பவர்கள்

தி நேஷனல் பார்மஸி

195, வக்கீல் புதுத் தெரு, மதுரை

நண்பர் ஒரு நல்ல செய்தி
யைச் சொல்கிறார். அடிக்
கடி எப்ரிலைம் உட்
கொள்ளலாம். அவர்
ஆஸ்த்மா உபாதையால்
தற்போது அவதிப்படுவதில்லை



EPHRILIME
எப்ரிலைம்

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி, லிட்.

மதராஸ் டிப்போ :

2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ் -1

போன் : 55074 தந்தி "RAJWAST"

கே. ஏ. ராஜா

வேஸ்ட் பேப்பர் வியாபாரி

காரியாலயம் : 64, ஆர்சாரப்பன் தெரு, சென்னை - 1
கிளை : 8, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை - 1
பிரிக்குமிடம் : 16, புட்டி சாஹிப் தெரு, சென்னை - 1

கீழ்க்கண்ட ஸ்தாபனத்திற்கு மூலப்பொருள் சப்ளை செய்பவர்கள்

மெஸர்ஸ். ரோடாஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

டால்மியாநகர், பீஹார்

உபயோகமற்ற காகிதங்களை விற்பனை செய்ய விரும்பும் காரியாலயத்தினரும் மற்றவர்களும் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்

எமது நியாயமான விலையைக் கருதி எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

தேன்கூடு

அத்தியாயம் 43

வதந்தி

ஆர்வி

ஒரே நாளில் தன்னிடம் பெருத்த மாறுதல் ஏற்பட்டுவிட்டதாக எண்ணிக் கொண்டாள் உஷா. உள்ளத்தில் ஏதோ ஓர் அறிவும் தெளிவும் பிறந்திருப்பதாக உணர்ந்தாள். திடீரென்று தன்னுடன் உறவு கொண்ட எல்லாவற்றையும் தாண்டிப் போய் நிற்பது போல் அவளுக்குத் தோன்றியது. மனத்துக்குள் விவரம் விளங்காத பெருமிதமும் பெருந்தன்மையும் கலந்து நிறைந்திருந்தன. எதிலும் குற்றமோ, குறையோ காணாத பக்குவம் அடைந்துவிட்டதாக அவளுக்குத் தோன்றியது.

இது எவ்வளவு தூரம் உண்மை? இந்தப் பக்குவம் எப்படி ஏற்பட்டது? எங்கிருந்து ஏற்பட்டது? அவளுக்கே இது புரியவில்லை.

அம்மாவின் விசித்திரப்போக்கு அவளை இன்று சிறிதும் பாதிக்கவில்லை. கல்லூரி மாணவிகளின் சிரிப்பும் கேலியும் அவளைச் சிறிதும் கவரவில்லை. இவர்களையெல்லாம் விட்டு, பல படிகள் முன்னேறிப் போய்விட்டதாகக் கருதினாள். கல்லூரிக்குப் புறப்படும் வரையில் அவளுக்கு அம்மாவின் நினைவே உண்டாகவில்லை. கல்லூரிக்கு வந்த பிறகு அவள் வகுப்புத் தோழிகளின் பேச்சும் பார்வையும்தான் முன்வந்து வரவேற்றன. அவர்களுடைய சிறுபிள்ளைத்தனத்தைக் கண்டு அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. இளமைப் பருவத்து எழிலையும் எண்ணங்களையும் இப்படி அறியாமையில் வீணாக்குகிறார்களே என்று அவள் நெஞ்சம் ஒரு கணம் இரங்கியது. ஆனால் அவளுடைய கருத்தை ஒருத்தியாவது சரியென்று ஒப்புக்கொள்வாளா? ஒப்புக் கொள்ளும்படி செய்வது வீண் முயற்சி மட்டுமல்ல, கேலிக்கு இடமான விஷயம் என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரியும். எண்ணத்திலே கூட அவர்களை விட்டு விலகி நிற்க முயல்வது வெளிப்பட்டுவிட்டால் வேறு வினையே வேண்டியதில்லை. கல்லூரிப் படிப்பு முடிந்து பட்டம் கிடைக்குமோ கிடைக்காதோ, அப்போது உடனேயே பட்டப் பெயர் கிடைத்துவிடும்.

அம்பலவாணி சின்ன வயதில் பெரிய தனம் கொண்டாடுகிறவள் என்பதற்காக, ஆங்கிலத்திலேயே 'ஸ்நாப்' என்று அவளுக்கு மற்றப் பெண்கள் பட்டப் பெயர் சூட்டியிருந்தார்கள். குமுதாவுக்கு 'மிஸ் போர்' என்று பெயரிட்டிருந்தார்கள். ரூபிக்குத் தமிழிலேயே 'வான்கோழி' என்று பெயர் வைத்திருந்தார்கள். இன்னும் இப்படி எத்தனையோ பெண்களுக்கு எத்தனையோ பெயர்கள்! தெரிந்து ஒன்று தெரியாமல் ஒன்று என்று பட்டத்தை வாங்கிக் கட்டிக்கொள்ள யார்தான் விரும்புவார்கள்? உஷா, இள மங்கையரின் உள்ளப் போக்கை நன்றாக எடை போட்டு வைத்திருந்தாள். அவளிடம் யாரும் இப்படி விளையாட்டு வைத்துக் கொள்வதில்லை. கட்சி கட்சியாகப் பிரிந்து நிற்கும் பெண்களிடையே அவள் எந்தக் கட்சியிலும் சேராதவள். அழகு, படிப்பு, செல்வம் மூன்றிலும் அவள் முன் வரிசையில் இருந்ததுடன் மட்டுமல்ல, எல்லாம் தெரிந்தும் அடக்கமாக இருப்பவள் என்ற மதிப்பு அவளுக்கு இருந்தது. சிவகாமசுந்தரி கூட அந்த முன் வரிசையைச் சேர்ந்தவள்தான்; ஆனால் அப்பாவி! திறமை வாய்ந்த கட்சியினர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அவளை இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைத்துவிடுவார்கள்! அழ அழவும் வைத்துவிடுவார்கள்! படிப்போ, அழகோ, பணமோ இருந்துவிட்டால் மட்டும் போதுமா? உலக விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டாமா? உஷா எல்லோரிடமும் நெருங்கியும் நெருங்காமலேதான் பழகினாள். சிரித்தும் சிரிக்காமலும்தான் பழகினாள். அதனால்தான் எப்பொழுதாவது அவள் ஏதாவது ஒன்று சொன்னாலும் அதற்கு நல்ல மதிப்பு இருந்தது. அவளிடம் பேச அச்சப்பட்டுக் கொண்டு வருகிறவர்கள் ஆறுதல் பெற்றுத் திரும்பினார்கள். அலட்சியமாக எண்ணிக்

கொண்டு பேச வருகிறவர்கள் அவளிடம் தோல்வியுற்றுத் திரும்பினார்கள்.

எல்லோருக்கும் முன்னால் உஷா அன்று வகுப்பறையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு ஆம்பலழகிக்கு அதிசயமாக இருந்தது. சரியாக ஐந்து நிமிஷத்துக்கு முன்னால் வகுப்பினுள் நுழையும் உஷா கால் மணி நேரத்துக்கு முன்னால் வந்திருக்கிறாள் என்றால் அது அதிசயந்தானே?

"ஹலோ!"

"ஹலோ!"

"ஏது இன்னிக்கு, இத்தனை 'எர்லி'யா வந்திருக்கியே!" என்று பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் ஆம்பலழகி.

உஷா சிரிக்க முயன்று, "ஆமாம்" என்றாள்.


"என்னவானும் 'இம்பார்ட்டெண்டா?'"

"ஊம்...அதெல்லாம் இல்லே!"

"எல்லாம் சரி, உஷா! நான் ஒண்ணு சொல்லுவேன்...'மிஸ்டேக்' பண்ணிக்க மாட்டியே!"

"சேசே, நான் ஏன் அப்படி நினைக்கப் போகிறேன்!"

"உஷா! மறுபடி 'ரிபீட்' பண்றேன்... 'மிஸ்டேக்' பண்ணிக்கப் படாது. நான் உன்னை 'லைக்' பண்ணாப்பலெ...என்ன.... உன் பெயரை 'லைக்' பண்றதில்லே...அது ஒண்ணுதான் உங்கிட்டே ஒரு குறை எனக்கு...இன்னும் எதுக்காக இந்தப் பெயரைச் 'சேஞ்ச்' பண்ணாமெ வச்சுக்கிட்டிருக்கிறே?"



உஷா இதைக் கேட்டு விட்டுப் புன்னகை செய்ததோடு " நிறுத்திக் கொண்டாள். அவன் சொன்னதற்காக அதில் வருத்தப்பட என்ன இருக்கிறது? அவனுக்குச் சரி என்று பட்டதை அவன் சொல்கிறான். இதில் என்ன தவறு?

"என்ன உஷா, 'ஸ்மைல்' பண்ணிட்டுப் பேசாமல் இருக்கே?"

"வேறு என்ன செய்வது? இதற்கு நான் என்னவோ பொறுப்பாளியல்ல. என் வீட்டில் இந்தப் பெயர் வைத்தார்கள். அதற்கு நான் என்ன செய்யலாம்?" என்றாள் உஷா.

"ஏன் செய்யக் கூடாது? இப்பக்கூட நீ நல்ல பெயரா ஒன்றைச் 'சூஸ்' பண்ணி, மாத்திக்கலாமே!"



"மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நாம் மாற்றிக் கொள்ள வேண்டியது இது ஒன்றுதானா? பெயரில் என்ன இருக்கிறது?"

"ஒவ்வொன்றாகத்தானே போகணும்!"

உஷா சிரித்த முகம் மாறாமல் ஆம்பலழகி சொன்னதைக் கேட்டுத் தலையசைத்தாள்.

இதனால் சிறிது துணிவடைந்த ஆம்பலழகி, "போகட்டும் உஷா! ஒரு 'ரூமர்' ஒன்னு காதிலே விழுந்திச்சே, உண்மைதானா?" என்று கேட்டாள்.

"என்ன அது?"

"நீ 'மாரியேஜ்' பண்ணிக்கப் போறியாமில்லே?"

உஷாவின் சிரித்த முகம் சிறிது சிறுங்கியது. "யார் இதை உனக்குச் சொன்னார்கள்?" என்றாள்.

"ஜிஜியைத் தெரியுமில்லே?... அவள் எங்க வீட்டுக்குப் பக்கத்திலேதானே இருக்கிறாள்! அவள் சொன்னாள்!"

"அவளுக்கு எப்படித் தெரியுமாம்? கேட்டிருப்பாயே?"

"ஆமாம்; கேட்டேன். அவ 'ஸிஸ்ட'ரும் உன் 'ஸிஸ்ட'ரும் 'கிளாஸ்மேட்'டாமே!"


"அவள் சொல்லித் தெரிந்து கொண்டாளாக்கும்! நீ அவள் சொல்லித் தெரிந்து கொண்டிருக்கிறாய், இல்லையா? ஆனால் உண்மையாகச் சொல்கிறேன். என் கல்யாணத்தைப் பற்றி எனக்கு ஒன்றுதான் தெரியும். அதாவது நான் இப்போதைக்குக் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை. அதுவும் கல்லூரிப் படிப்பு முடியும் வரை நிச்சயமாய்!" என்றாள் உஷா.

"நம்ப 'காலேஜ்' எல்லாம் கூட இந்த 'ரூமர்' அடிபடுதே!"

"அப்படியா?"

"ஆமாம் உஷா - சிங்கப்பூர் 'மில்லியனர்' யாரோ ஒருத்தர் வந்திருக்கிறாராம். நீ டான்ஸ் பண்ணினையாம். அப்ப உங்க ரெண்டு பேருக்கும் 'லவ்' ஆயிடுச்சாம்...உங்க 'மதர்' இதை 'லைக்' பண்ணலியாம். ஆனா உங்க 'பாதர்' சம்மதிச்சிட்டாராம்! அடுத்த மாசமே கல்யாணம் நடக்கப் போவுதாமே!"

உஷா இவ்வளவையும் கேட்டுக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தாள். என்ன இருந்தாலும் தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவது போல, ஆம்பலழகி வதந்தியோடு தன் கைச்சரக்குகளையும் சேர்த்துப் பேசுவாள் என்று அவளுக்குத் தோன்றவில்லை.



பம்பாய் பிரீமியர் ஆட்டோமோபைல்ஸைச் சேர்ந்த திரு எஸ். என். சுவாமி அவர்களின் சகோதரர் திரு ஹரிஹரனுக்கும் சௌ அனந்தலக்ஷ்மிக்கும் விவாகம் நடந்தது.



திருவாளப்புத்தூர் கல்கி ஏஜண்ட் திரு. கோவிந்தசாமி அவர்களின் புதல்வி சௌ. சந்திராவுக்கும் திரு கே. எஸ். ஜே. கோவிந்தராஜனுக்கும் திருமணம் நடந்தது.

ஏனெனில் ஆம்பலமுகிக்கு அந்தளை கற்பனைத் திறன் கிடையாது.

எனவே அவள் கடைசியாக, "எது எப்படியோ போகட்டும். எனக்குத் தெரிந்தது என்னவோ இவ்வளவுதான்!" என்று பேச்சை முடித்துவிட்டு எழுந்தாள். ஆம்பலமுகியைப் போலவே அப்போது வகுப்பறையினுள் நுழைந்து வந்துகொண்டிருந்த மாணவிகளில் சிலருக்கும் உஷா முன்னதாக வந்திருப்பது புதுமையாக இருந்தது.

"ஹலோ, உஷா! 'கங்கிராஜுலேஷன்ஸ்!'" என்று கூவிக்கொண்டே முன்னுல் வந்து கையை நீட்டினுள் ஹேமலதா என்ற மாணவி. அவளைத் தொடர்ந்து ஐந்தாறு குரல்கள் அதே பாட்டைப் பாடின.

தன் இருப்பிடத்துக்குச் செல்ல எண்ணிய ஆம்பலமுகி, உஷாவை நின்று கவனித்தாள். ஹேமலதாவின் கையை மெல்ல ஒதுக்கிவிட்டு, "அருமைத் தோழிகளே, என்னைப் பாராட்ட வேண்டிய வேளை உங்களுக்கு இப்போதைக்கு வரப்போவதில்லை! ஆகவே வதந்திகளைக் காதில் போட்டுக்கொள்ளாதீர்கள்!" என்று நிறுத்திக் கூறினுள் உஷா.

அவள் நடந்துகொண்ட விதம் மேன்மையோடு விளங்கியது. அவளுடைய பேச்சைக் கேட்ட நைலான் ஆடையமுகி ஒருத்தி நாவினுல் உதடுகளை நனைத்துக்கொண்டாள். ஹேமலதா இதற்கு விளக்கம் கேட்பதுபோல் ஆம்பலமுகியை ஏறெடுத்து நோக்கினுள். இதைக் கண்டதும் இந்த வதந்தி எப்படி, யார் மூலம் பரவியிருக்கிறது என்பது உஷாவுக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது.


அவள் எல்லோருக்கும் பொதுவாக, "வதந்திகள் நெருப்புப் போன்றவை. எத்தனை பெண்களுடைய வாழ்க்கையை இதுபோன்ற வதந்திகள் பாழ்படுத்தி




திரு ஏ.எஸ். சுந்தராச்சாரியார் அவர்களின் புதல்வர் திரு ஏ. எஸ். துரைசாமிக்கும் சௌ. பிரேமாவுக்கும் திருமணம் நடைபெற்றது.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனைச் சார்ந்த திரு கோபாலன் சௌ. சரளாவைத் திருப்பதியில் மணம் புரிந்துகொண்டார்.



கல்கத்தா இந்தியன் ஸ்டாடிஸ்டிகல் இன்ஸ்ட்டியூட்டைச் சேர்ந்த திரு ஜி. கல்யாண சுந்தரத்துக்கும் சௌ சரஸ்வதிக்கும் விவாகம் நடைபெற்றது.



சென்னை ரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி காரியாலயத்தைச் சேர்ந்த திரு வேதாந்தம் சௌ. கௌசல்யாவை மணம் புரிந்து கொண்டார்.

யிருக்கின்றன என்று தெரியுமா உங்களுக்கு? பெண்களுக்கு வதந்தி பெரும் நெருப்பு! இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றான்.

அப்போதைக்கு அவன் அவர்களுடைய சந்தேகத்தைப் போக்கிவிட்டதாகவே உணர்ந்தாள். ஆனால் வகுப்பு நடைபெறும்போது அவளை எத்தனை கண்கள் பார்த்துச் சிரிக்க முயன்றன! அத்தனை பேருக்கும் அவள் எப்படி விளக்கம் தரப் போகிறாள்? சிரிக்கும் கண்களில் சில, தன்னையே அடிக்கடி கவனிப்பதை அவள் கண்டாள். இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல, பாதி வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது அவளுக்குக் கல்லூரி பிரின்ஸிபாலிடமிருந்து அழைப்பு வந்தது. இதைக் கேட்டதும் அவள் ஒரு கணம் திகைத்து நின்றாள். அத்தனை கண்களும் தன்னையே இலக்காகக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். ஆயினும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அவள் வகுப்பறையைவிட்டு விடுவிடென நடந்து சென்றாள். கல்லூரித் தலைவியின் அறையினுள்ளே நுழையும் வரையில் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. வழியில் யார் நிற்கிறார்கள், தன்னை யார் கவனிக்கிறார்கள் என்றெல்லாம் அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.

ஆனால் பிரின்ஸிபாலின் வரவேற்பைக் கேட்ட பிறகுதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது; தைரியமும் வந்தது.

"நீதானே உஷா? பாரிஸ்டர் பரமசிவம் அவர்களின் மகள்?''

"ஆமாம்!'' என்றாள் உஷா.

"இதோ, உன் தந்தையின் நண்பர் ஒருவரிடமிருந்து உனக்கு ஒரு உறை வந்திருக்கிறது. இதை எடுத்துக் கொள் முதலில்!'' என்று கூறிவிட்டு, மணியைத் தட்டினார் அந்தத் தலைவி.



திரு தங்கவேலுவுக்கும் சௌ ஜயலக்ஷ்மிக்கும் கவரவனை சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் திருமணம் நடந்தது.



பம்பாய் ஓவர்ஸீஸ் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்டைச் சேர்ந்த திரு சந்தானம் செல்வி ஸ்டெல்லாவை மணந்தார்.

வேலையாள் வந்து நின்றதும், "வெளியில் ஒருவன் காத்திருக்கிறானே, அவனைக் கூப்பிடு!" என்று பணித்தார்.

உஷா, உறையுடன் திரும்ப முயன்ற போது, "கொஞ்சம் நில், உஷா, ஒரு நிமிஷம்!" என்று அவளை நிறுத்தி வைத்தார் அந்தத் தலைவி.

உஷாவின் கண்கள் நிலைகுத்திப் போய் நின்றன. ஒரே நொடியில் தலை சுழன்றது. கால்கள் நிற்க மறுத்தன. ஆயினும் அங்கே கிடந்த நாற்காலி ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றாள் அவள். பாபு அங்கே எதற்காக வரவேண்டும்? யாராவது அழைத்து வந்திருக்கிறார்களா, அல்லது தானாக வந்திருக்கிறானா?

"இவனை உனக்குத் தெரியுமா உஷா?"

பூமி இரு கூறாகப் பிளந்து தன்னை விழுங்கிவிடலாகாதா என்று எண்ணிய உஷா, 'தெரியும்' என்பதுபோல் தயக்கத்துடன் தலையை அசைத்தாள்.

"இவன் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறானா?"

"ஆமாம்; வந்திருக்கிறான்!"

"ஜட்ஜ் ராமசுந்தரத்திடம் அட்டெண்டராக இருந்தவனுமே இவன், உண்மைதானா? தெரியுமா உனக்கு?"

"தெரியும். அதெல்லாம் உண்மை தான்!"

"அட்டெண்டர் வேலையையா விட்டு விட்டான்?"

"ஆமாம்."

"அதுதான் கேட்டேன். சற்றுமுன் உன்னைக் கூட்டிவரச் சொன்னபோது பக்கத்திலிருந்தான் இவன். உன்னை நன்றாகத் தெரியும் என்று சொன்னான். அதனால்தான் கேட்டேன்!"

உஷாவுக்கு இப்பொழுதுதான் சிறிது தெம்பு பிறந்தது. பாபு இங்கே வேலை தேடி வந்திருப்பதாக ஊகித்துக் கொண்டாள். ஆகவே அவள், "அவன் சொன்னது உண்மைதான். எனக்கு நன்றாகத் தெரியும்!" என்று தற்சாட்சி கூறுவது போல் கூறினாள்.

"எனக்கு இதுதான் வேடிக்கையாக, நம்ப முடியாமல் இருந்தது. அந்த வேலையை விட்டுவிட்டு, 'வேஸ்ட் பேப்பர்' வியாபாரம் செய்ய வருவது என்றால்! காலையில் வீட்டிலே பேப்பர் எடுக்க வந்திருந்தான். அப்படியே இங்கும் வருமாறு சொல்லியிருந்தேன். வந்திருக்கிறான். அப்ப நல்லவன்தான் என்கிறாய்!"

"நல்லவன் மட்டுமல்ல; நாணயமும் கண்ணியமும் உள்ளவன். ஒருவரிடம் போய் ஊழியம் செய்வதைவிட, பொது நல ஊழியம் செய்வதில் நாட்டம் உள்ளவன். உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவன்..." உஷா தன்னை மறந்து ஏதோ அடுக்கிக் கொண்டே போனாள்.

அவளையும் எதிரில் வைத்துக்கொண்டு, இவ்வளவையும் கேட்பது கல்லூரித் தலைவிக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை.

"சரி; அதற்குத்தான் அழைத்தேன்! நீ போகலாம்!"

உஷா கை கூப்பி வணங்கிவிட்டு வெளியில் வந்து ஒரு கணம் தயங்கி நின்றாள்.

"என்னப்பா, உனக்குப் பெரிய 'சர்ட்டிபிகேட்' கொடுத்துவிட்டுப் போகிறாளே!" என்றார் தலைவி.

"அது எல்லாரையும் போல அல்ல, அம்மா! பெண்களிலேயே உயர்ந்த பெண்! எவ்வளவோ சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். ஏழைகளிடம் இரக்கமும் எளியவர்களிடம் பரிவும் காட்டக் கூடிய பெண்!"

"ஏது, நீயும் புகழ ஆரம்பித்துவிட்டாயே! ஒருவருக்கொருவர் பேசி வைத்துக்கொண்டவர்களைப் போல மாற்றி மாற்றிப் புகழ்கிறீர்களே!"

"அதைப் பார்க்கப் போகிறேன் என்று நான் எண்ணவேயில்லை ... நான் எங்கேயோ இருக்கிறேன். அது எங்கேயோ இருக்கிறது..."

"இல்லை; பேச்சுக்குத்தான் சொல்கிறேன்! சரி. வந்த வேலையைக் கவனிக்கலாம்..."

உஷா அதற்கு மேலே அங்கு நிற்பது சரியல்லவென்று எண்ணியவாறு வகுப்பை நோக்கி நடந்தாள். வகுப்பை நெருங்கிய சமயத்தில்தான் அவளுக்குத் தன் கையிலிருக்கும் உறையின் நினைவு உண்டாயிற்று. சட்டென்று நின்று உறையைப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தைப் பிரித்தாள்.

கடிதமா அது? இல்லை; நான்கு இலக்கமுள்ள ஒரு தொகைக்குரிய செக்! ஆயிரத்து ஒரு ரூபாய்!

நேரில் பாராட்டும் வாய்ப்பு அளிக்காத ஒரு பெண்ணுக்கு அன்புக் குறிப்பைக் காட்டும் சிறு காணிக்கை!

கண்ணபிரானுடைய கையெழுத்திட்ட துண்டுக் கடிதம் அந்தச் செக்கோடு இணைக்கப் பட்டிருந்தது. சற்று முன்பு உண்டான மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் மாற்றுப் போல இருந்தது இது. உஷாவின் கண்களிலே கோபக் கனல் எழுந்தது. செக்கோடு மடித்து உறை

யைச் சுக்குச் சுக்கலாகக் கிழித்து எறிய விழைந்தன கைகள்.

ஆனால் ஒரு துண்டு விடாமல் பொறுக்கி எடுத்து ஒட்ட வைக்கக்கூடிய கைகள் வருப்பிலேயே இருப்பதை எண்ணி உறையை மறைத்துக்கொண்டு உள்ளே வந்து அமர்ந்தாள். ஒன்றுமே நடக்காதது போன்ற சாந்தம் தவழ்ந்தது அவள் முகத்தில். ஆங்கிலப் புரொபசருக்குக் கூட என்ன நடந்தது என்று கேட்க ஆவல்தான். ஆனால் அதை இவ்வளவு பேருக்கு எதிரில் எப்படிக் கேட்பது என்று எண்ணி, "ஏன் உஷா, உனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது என்று இங்கே யாரோ சொன்னார்களே!" என்றாள் நாசூக்காக. புரொபசர் என்றாலும் பெண்களுக்குக் கல்யாணப் பேச்சு என்றால் கசக்குமா?

உஷா பணிவுடன் எழுந்து, "சொல்லியிருப்பார்கள் புரொபசர். என்னிடமே வந்து சிலர் கேட்டார்கள். என் கல்யாணத்தைப் பற்றி எனக்கே தெரியாத போது, இவர்களுக்கு மட்டும் எப்படி இந்தச் செய்தி எட்டியதோ தெரியவில்லை. கதைக்கு கால் ஏது, கை ஏது என்று சொல்வார்கள். ஆனால் ஆதாரமற்ற வதந்திகளுக்கோ கால், கைகள் மட்டும் என்ன, சிறகும் முளைத்துப் பறக்கும் என்று நான் சொல்வேன்!" என்று கூறிவிட்டு உட்கார்ந்தாள்.

செவிக்கு விருந்தை எதிர்பார்த்துக் காத்திருந்த கண்கள், எல்லாம் சுவையற்றுத் தீர்ந்து விட்டதைக் கண்டு சோர்ந்து போயின. இந்தக் காட்சியைப் பார்த்த பிறகுதான் உண்மையிலேயே உஷாவுக்கு மன அமைதி உண்டாயிற்று.

அத்தியாயம் 44

உயர்ந்தவன்!

கல்லூரியில் பாபுவைக் காண நேரும் என்று உஷா கனவிலும் எண்ணவில்லை. எதிர்பாராதவாறு அவனைச் சந்தித்ததும் அவனைப் பற்றி பிரின்ஸிபாலிடம் பேசியதும் அவளுக்கு அளவிட முடியாத இன்பத்தைத் தந்தன. அவன் தன்னைப் பற்றியும், தான் அவனைப் பற்றியும் கூறிய புகழ் மொழிகளை உள்ளத்திலிருந்து இழுத்து, அசை போட்டுக்கொண்டிருந்தன அவள் உதடுகள்.

அவற்றைப் போய் யாராவது வெறும் புகழ்மொழிகள் என்று சொல்வார்களா? அவ்வளவும் அவர்களுடைய உள்ளத்திலிருந்து உடைத்துக்கொண்டு பொங்கி வந்த உண்மைகள்! இது ஒருகால் பிறருக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் அவளுக்கும் அவனுக்கும் இது நன்றாகத் தெரியும். ஒவ்வொரு சொல்லையும் அவர்கள் எண்ணிப்பார்த்தா சொன்னார்கள்? தம்மையும் அறியாமல்தான் சொன்னார்கள்!

பிரின்ஸிபாலுக்கு வேண்டுமானால் இது புரிந்திருக்காது! புகழ்பெற்ற பாரிஸ்டர் பரமசிவத்தின் செல்வக் குமாரி எங்கே, பழைய காகிதம் வாங்க வந்து நிற்கும் இந்த வியாபாரி எங்கே என்று அதை அந்த விநாடியே மறந்து போயிருக்கக் கூடும். ஆனால் அசை போடும்போதெல்லாம் சுவை தருகின்ற இன்பத்தை எடுத்துக் கூற வார்த்தைகள் ஏது?

"என் படங்களையெல்லாம் எதற்காக இப்படிக் கத்திரித்து அடுக்கி வைத்திருக்கிறாய்?" என்று அவன் அன்று சங்கத்துக்குப் போயிருந்தபோது கேட்டான்.

"இதோ பார் உஷா, இன்னொரு முறை உன் படங்கள் என்று சொல்லாதே! இதெல்லாம் இப்போது என் படங்கள்; நான் கைப்பணம் போட்டு, விலை கொடுத்து வாங்கியவை! தெரியுமா?" என்றான் பாபு.

அவன் சொன்ன விதம் என்னவோ அதட்டலாகத்தான் இருந்தது. ஆனால் அதனுள் இருந்த பொருளோ எத்தனை நேரம் இனித்துக் கொண்டிருந்தது அவளுக்கு!

அவன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு எழும்பாமல் அவள் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அந்தப் பார்வைக்கு எதிர்ப்பார்வை இல்லாமல் அவன், "என்ன அப்படிப் பார்க்கிறாய் உஷா! இந்தப் படங்களை எல்லாம் எடுத்து வைத்து அழகு செய்யவோ, அழகு காட்டவோ எனக்கு உரிமை உண்டு. எட்டணா கொடுத்து இத்தனை பெரிய உரிமையை வாங்கிவிட முடியுமா என்று பார்க்கிறாயா?" என்று கேட்டு அவளை மேலும் மடக்கப் பார்த்தான். பாவம், அவள் அவனிடம் பேச முடியாமல் தோற்றுத்தான் போனாள். ஆனால் வெற்றி என்பது வெறும் வாய்ப் பேச்சில்தானா இருக்கிறது? அது எண்ணத்திலும் செயலிலும் அடங்கியிருக்கிறதென்றால் வெற்றி உண்மையில் யாருக்கு?

"இப்படியெல்லாம் பேசுவாய் என்று தெரிந்திருந்தால் நான் இங்கே வந்திருக்



உங்கள் மனைவியிடம் நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிடும் பழக்கம் மிக்க நல்லது. சொல்லுவதைச் சீக்கிரம் சொல்வது நலம். உங்களைப் பற்றி சொல்ல வேறு யாரேனும் முந்திக் கொண்டு விடப் போகிறார்கள்.

சமாஷ் தமாஷ்



உங்கள் கணவர் தூங்கும்போது குறட்டை விட்டால் அதற்கு இந்த மருந்து பிரயோசனப்படும். பாட்டிலில் உள்ள அடைப்பானைத் திறந்தால் அதற்குள் பஞ்சு அடைக்கப்பட்டு இருக்கும். அதை எடுத்து உங்கள் காதுகளில் அடைத்துக் கொண்டு தூங்கவும்.

கவே மாட்டேன்!" என்று அவள் முகத்தைக் கடுத்துக்கொண்டு கூறினாள்.

உண்மையில் பாபு பயந்துதான் போயிருக்கவேண்டும். ஆயினும் அவன், "இப்படியெல்லாம் கோபம் வரும் என்று தெரிந்திருந்தால் ஒரு வார்த்தை கூடப் பேசியிருக்க மாட்டேனே!" என்று நடித்துக் காட்டினான், சிறிதும் பயப்படாதவன் போல!

உஷா, வெள்ளைப் பிள்ளையாரை ஒரு முறை வலம் வந்துவிட்டு, புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்த கண்ணிச் சட்டத்துக்கு எதிரே வந்து எதையோ பார்ப்பவளைப் போல நின்றாள். பாபு உண்மையில் பயந்துபோய் விட்டதாகத்தான் தோன்றியது. அந்தக் கெடுபிடியுடனேயே அவன் "சரி, நேரமாகிவிட்டது. புறப்படுகிறேன்!" என்று சொல்லிவிட்டு வண்டியை நோக்கி நடந்தான்.

பாபு சாலைக்கு வந்து வழியனுப்பும் வரையில் வண்டி என்னவோ புறப்படவில்லை. அவன் கதவை இறுக அடித்துச் சாத்திவிட்டு, "நான் சொன்னது ஏதாவது தப்பாகப் போய்விட்டதா?" என்று தணிந்த குரலில் கேட்டான்.

அதைக் கேட்டு நெஞ்சு தழுதழுக்க அவள், "அப்படி நான் ஏதாவது சொன்னேனா?" என்றாள்.

"அதுவும் இல்லை; இதுவும் இல்லை. ஆனால் மறுபடி எப்போது பார்க்கலாம்?" என்றான் அவன்.

"அதை இப்போது எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் இந்த வேலை உனக்குப் பிடித்திருக்கிறதா, என்ன?" என்று வார்த்தைகளுக்குள் அகப்பட விரும்பாமல் பேச்சை மாற்றினாள் அவள்.

"இன்றுதானே தொடங்கியிருக்கிறேன். இது எப்படியிருக்கிறது என்று அடுத்த தடவை வரும்போது சொல்கிறேன்!" என்றான் பாபு.

அவன் அதைப்பற்றிச் சொல்வதற்கு இப்பொழுது அவசியம் இல்லாமலே போய்விட்டது! அவன் எந்த வேலையைச் செய்தாலும் அது நாணயமும், கண்ணியமும் நிறைந்த வேலையாகவே அவள் எண்ணத் தொடங்கி விட்டாள். கோடி கோடியாகப் பணம் இருந்து, கௌரவக் குறைவாக நடந்து கொள்பவனைவிட அவன் உயர்ந்தவனாகவே அவளுக்குத் தோன்றினான்.


"ஏன் குழந்தை, காலையிலே இன்னிக்குச் சீக்கிரமாகப் புறப்பட்டுட்டே?" என்று வீட்டுக்குத் திரும்பி வரும்போது தான் கேட்டான் குப்பன்.

"அந்த மைனர் என்னை நேரிடப் பாராட்டுவதற்காக வரப்போகிறார் என்று போன் வந்தது! ஆனால் கல்லூரிக்கு முன்னதாகப் போயாக வேண்டும் என்று நான் புறப்பட்டுவிட்டேன்! அப்படியும் அந்த மைனர் சும்மா இருந்துவிடவில்லை. கல்லூரிக்கே வந்து பார்த்துவிட்டுத்தான் காரியம் பலிக்காமல் திரும்பிப் போயிருக்கிறார்! இதோ பார்த்தாயா, செக்கை! பிரின்ஸிபாலின் கேள்விக்குப் பயந்து கொண்டுதான் இதை மட்டும் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்!" என்றாள் உஷா.

"ஆயிரத்து ஒரு ரூபாய்! இதை என்ன செய்யப்போறே குழந்தை, நீ?"

"இதோ பார்த்தாயா! இப்படித்தான் ஒரு துண்டுகூட அகப்படாமல் கிழித்தெறியப் போகிறேன்!" என்று கூறியவாறே அந்தச் செக்கை வாங்கி உருத் தெரியாமல் சுக்குச் சுக்காகக் கிழித்தெறிந்தாள் உஷா! **(தொடரும்)**


நான் எப்பொழுதும் ஹமாம் சோப்பையே வாங்குகிறேன்
புதுமுறையான மிருதுத்துவம் அளிக்கும்
இதை உபயோகித்து குளிக்கும்போது சுத்திகரித்து புத்துணர்ச்சி அளிக்கிறது
நீண்ட நாட்கள் நீடித்து நிற்கிறது.
ஹமாம்
HAMAM
எங்கள் குடும்பத்தில் யாவரும் ஹமாம் சோப்பையே விரும்புகிறார்கள்



நீதியும் நியாயமும்

சுகி சுப்பிரமணியன்

அம்பாசமுத்திரம் தாலுகா. மேற்படி பிர்க்காவைச் சேர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கோமதி நாயகம் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்து, மேஜைமீது வைத்தார். கடமையை நினைப்பூட்டும் பொருள் மேஜையில் கிடந்தது. அவருக்குப் பாசத்தை நினைப்பூட்டும் அருமை மகள் தரையில் வாழைத் தண்டு போல் சுருண்டு கிடந்தாள்.

"என்னம்மா கத்தப் பைத்தியக்காரியாக இருக்கிறே. எழுந்திரு காந்திமதி."

"இந்த ஒருதடவை மாப்புக் கொடுத்திடக் கூடாதா, அப்பா?"

"மாப்பும் ஆச்சு, மன்னிப்பும் ஆச்சு. அயோக்கியப் பயல்கள் கூட்டத்தில் இருந்தால்? பனைமரத்தடியில் பாலைக் குடிச்சாலும் கள்ளுக்குச் சமம் என்பார்கள். உன்னிடம் என்ன சொன்னான்?"

"சென்னைக்கு உத்தியோகம் தேடிப் போவதாகச் சொன்னார்."

"இப்போது, ஸ்ரீ வைகுந்தத்துக்குப் பக்கம் சூதாடிக் கொண்டிருக்கிறான் என்று செய்தி கிடைத்திருக்கிறதே."

"தப்புத்தண்டாவுக்கு அவுக போயிருக்க மாட்டாக அப்பா!"

"பெரிய ரோக்கியர். சவத்தைத் தின்னு. ஏட்டு நாயுடு சும்மா சொல்லுவாரா? நான் இப்போ அந்தக் கூட்டத்தைப் பிடிக்கப் போறேன். அங்கே அவனைப் பார்த்தேன்: கூட்டே தள்ளி விடுவேன்."

"செய்யுங்க அப்பா செய்யுங்க. நான் மஞ்சளும் குங்குமுமாக இருப்பது பிடிக்கா விட்டால் செய்யுங்க."

போலீஸ் இன்ஸ்பெக்டரின் மனத்துக்குள் எவ்வளவு பெரிய பூகம்பம் குமைந்து சமைந்து கொண்டிருந்தது என்பது அவரது அருமை மகளுக்குத் தெரியாது.

'டக்டக்' என்ற கனத்த பூட்ஸின் ஓசை, வெளியே செல்லச் செல்லக் காந்திமதியின் இதயம், பிளந்துகொண்டே வந்தது. சென்ற வாரம் வந்த கடிதத்தை - சென்னையிலிருந்து அவள் கணவன் எழுதிய கடிதம் - எடுத்துப் படித்தாள். மனப்பாடமே ஆகிவிட்டது.

அடி என் ஆசைக் கிளியே! என்னைச் சோம்பேறி, கையாலாகாதவன் என்று உன் அப்பன் நினைத்தான். நானா சோம்பேறி? நான் வேலையை உதறித் தள்ளியதை நீயும் வெறுத்தாய்; அப்பனைப் போன்ற அப்பாவிப் பெண்தானே? உன்னைச் சொல்லி என்ன பயன்? இன்னும் இரண்டே மாதங்கள்தான். அப்புறம் நான் ராஜா; நீ ராணி. நாம் இந்த உலகத்தையே விலைக்கு வாங்குவோம்."

இதுபோன்ற வரிகள் வரிசையாக அவள் மனத்திலே ஓடிக் கொண்டிருந்தன. குற்றாலநாதனும் அத்தனை அருமையாகத்தான் அன்பைக் கொட்டி அடுக்கடுக்காக எழுதி யிருந்தான். இன்றைக்குத் தந்தை சொல்வது உண்மையாக இருக்குமா? என்னை என்னை அவள் மனம் வெய்யிலில் பிய்த்தெறியப்பட்ட தாமரைத் தண்டாக உலர்ந்து கொண்டு வந்தது.

* * *

கோமதிநாயகம் ரகசியமாகப் பிடித்த சூதாடிகள் கூட்டம் பற்றிய செய்திகள் பாமரர்களுக்கும், படித்தவர்களுக்கும் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக அம்பலமாகி விட்டன அனலாகத் துடித்தாள் காந்திமதி.

பணம் வைத்துச் சூதாடிய கூட்டம். அதற்கும் அப்பால் பணமே அச்சடித்துச் சிருஷ்டிக்கும் யந்திரத்துடன் அகப்பட்டது; அவர்களுக்குள் தன் கணவன் ஒருவன் என்றால் என்ன பாடுபடும்? கோமதி நாயகமோ விசுவாசப் பிரமாணம் எடுத்திருந்தவர். நேர்மையுடன் மருமகனையும் எதிரியாகவே பாவித்துக் கைது செய்தார். மற்றக் குற்றவாளிகளுடன் அவர் மருமகனும் குற்றவாளிதான், அவருடைய போலீஸ் அதிகாரத்துக்கு. விலங்கு பூட்டிய பந்தோபஸ்துடன் கொண்டு வந்தார். உறவும் பாசமும் அவர் வரை மத்தனம் பாறையாக உறைந்து விட்டன. குற்றாலநாதனோ. "மாமா! நான் தவறு செய்யவில்லை. நம்புங்கள்; இவர்களால் வஞ்சிக்கப் பட்டேன்: என்னை நம்புங்கள்; விட்டு விடுங்கள். உங்கள் மகளை எண்ணி எனக்கு விடுதலை தாருங்கள்" என்று மலைப்பிராந்தியம் எல்லாம் எதிரொலிக்கக் கதறியும், அவரும் மலையைப் போல் கலங்காது இருந்து விட்டார்.

அவனோ, காலில் விழுகிறான். தாடியைப் பிடித்துக் கெஞ்சுகிறான்.

"என் கண்முன்னே நீ குற்றவாளி; நீதியும் நியாயமும் என்ன தண்டனை தருகிறதோ அதைப் பெற்றுக்கொள். பிதற்றாதே."

"இதற்கெல்லாம் நீங்களே ஒரு நாள் அனுபவிப்பீர்கள்."

"இப்பொழுதே அனுபவிக்கிறேன். பேச்சை நிறுத்து."

குற்றாலநாதன் மீண்டும் காலைத் தொட்டு வணங்கினான்; கதறினான். தப்பவிட்டுவிடு வதற்கு மன்றாடினான். அவர் உணர்வும் நெகிழ்வும் கொண்ட மனிதராக இல்லை. இரும்பும் சிமெண்டும் சேர்ந்த காங்கிரீட் மதிற்சுவராக இருந்து விட்டார்.

வழக்குப் பதிவாகி விட்டது. சுவாரஸ்யமான செய்திகளைப் பத்தி பத்தியாகத் தினப் பத்திரிகைகள் தந்து கொண்டிருந்தன; குற்றாலத்து அருவியில் குளிக்கும் சுகமும், குமரி முனையில் காணும் கடற்காட்சியும் நிரச்

செந்தூர் முருகப் பெருமான் அருளும் ஒரு சேரக் கிடைத்தது போன்ற இன்பத்துடன் அந்த மாவட்டத்துள் ரசித்தார்கள்.

உறவுக்கும் - நேர்மைக்கும் அல்லவா வழக்குத் தொடர்ந்து தீர்ப்பு நடக்கப் போகிறது!

• • •

தாமிரவர்ணிக் கரையில் பூ சிந்தும் இடமெனப் பெயர் பெற்ற சிந்து பூந்துறையில் 'சோலைவனம்' என்ற பெயரிட்ட பங்களாவுக்குள் நீதிபதி நெல்லையப்பன் குடி விருந்தார். மல்லிகையும் மாவும், பாக்கும் பலாவும், வாழையும் வண்ணப் பூச்செடிகளும் நிரம்பிய அந்தச் சோலைவனத்துக்குள் காந்திமதி நுழைந்தாள். அவள் வருங்கால வாழ்க்கைக் கயிறு அங்கே முறுக்கேறிக் கொண்டிருந்தது.

சோக உருவத்தைக் கண்டதும் நீதிபதி திடுக்கிட்டார். இருட்டைப் போல் துணுக்குற்றார். அவர் மனத்தில் பழைய சம்பவப் படலங்கள், மகனுக்குப் பெண் கேட்டது. மகன் உயிருக்குயிராய் காதல் கொண்டது. அதை நிராகரித்த காந்திமதி வந்து கொண்டிருக்கிறாள். மருகனும் தாய்நாட்டை வெறுத்து மேல் நாட்டுக்குக் கல்வி கற்கப் போன மகன், விமான விபத்தில் விழுந்து செத்தது — எல்லாம் நினைவில் நிழலாட்டம் போட்டன. காந்திமதி மஞ்சளும் குங்குமமுமாக இருக்கிறாள். விதி, நம்மையும் மீறி அவளுக்குச் செய்துள்ள நன்மையை எண்ணி அவர் சிரித்துக் கொண்டார். முன்பு தாமாக வற்புறுத்தியும் அவள் வாழ்வை மாற்றிக் கொண்டாள்; இன்று அவரது கையில் அவள் வாழ்வு மாட்டிக்கொண்டது.

மீண்டும், அவருக்குச் சோதனை காந்திமதியின் உருவிலே நுழைந்து கொண்டிருந்தது. உறவு கொண்டாட வந்தாளா? உயிர்ப் பிச்சைக்கு வந்தாளா?

" நான் வந்தது சட்ட விரோதம் என்பதை அறிவேன். பாசமுள்ள இதயத்துக்கு நீதியும் நியாயமும் தெரியாது. என்னை அப்படி பாக்கிவிடுவீர்களா ?"

மீண்டும் அவர் மனத்துக்குள் ஆயிரமாயிரம் சட்டிகள் பாய்ந்து, நர்த்தனம் செய்தன. காந்திமதியைச் கமலக்கனி முத்திரையுடன் பார்க்க முடிகிறதே!

" காந்திமதி !"

நீதிபதிக்கு அதற்கு மேலாகப் பேசமுடியாத நிலை. இருவரது கண்களும் சந்தித்தன.

" என்னைக் காப்பாற்றுங்கள்; என் உயிரைக்



கொடுங்கள்; தண்டனை கொடுத்துக் கொன்று விடாதீர்கள்'' என்று கண்ணீர் மல்கப் பேசின; மொழியில் பேச வேண்டுவதை விழிகள் பேசின. ''நீதியும் நியாயமும் செய்வேன்'' என்று நீதிபதியின் கண்கள் திவலிப்புடன் கூறின.

''என் அப்பாவின் மனம் சட்டத்துக்கும் பயப்படுகிறது; சம்பிரதாயத்துக்கும் பணிகிறது. வேலைக்காக நியாயம்; மகன் விடுதலைக்காகப் பணம் கொடுத்து வாதாடச் சொல்லுகிறார்கள்'' என்றான் அவன்.

''எனக்குத் தெரியும். கடமையும் மக்கள் மீதுள்ள பாசமும் இரண்டு பெரிய கடல்கள். நீ போய் வா'' என்றார் அவர்.

''குற்றமற்றவருக்கு — சந்தர்ப்பதோஷத்தால் அகப்பட்டவருக்கு — விடுதலை நீங்கள் தான் வாங்கித் தர வேண்டும்.''

''கவனிக்கிறேன். எனக்கு எது நியாயமோ, நீதியோ அதைச் செய்வேன்.''

காந்திமதி மனிதப் பிரயத்தனத்தின் சிகரத்தைச் செய்து விட்டாள்; தந்தை கொடுக்கும் பணத்தை வாங்கி வாங்கி வக்கீலுக்குத் தானம் செய்து விட்டாள். உறவுக்காரரான நீதிபதியிடம் சென்று கண்ணீர் மாலையைக் கோத்துக் கருணையை வேண்டி நின்றாள்.

குற்றாலநாதன் அப்ருவ'ராக எடுக்கப் பெற்றான். சிறைச்சாலைக்குச் செல்லாமல் விடுதலை கிடைத்தது. ஐயோ! காந்திமதியின் மனச் சிறையிலிருந்துமா அந்தக் கிராதகன் விடுதலை பெற்றுக் கொள்ள வேண்டும்? அவளது பற்றையும் பாசத்தையும் என்னவிப் பார்த்தானா அந்தப் பாவி? அவளது அன்பு வெள்ளம் அத்தனையும் எதிர்ப்பு வெள்ளமாக அவன் தலையில் வடிந்தது. யாரையும் கேட்காமல் தன் உள்ளத்தைக் கேட்டு விட்டாள் மாதாரி. அன்பிலும், கடமையிலும், ஆபத்திலும் சிக்கிக் கொண்டாள் காந்திமதி.

கைதிக் கூண்டிலிருந்து விடுதலைபெற்றவனை, 'அத்தான்' என்று ஆசையோடு அழைத்தாள்; அவன் திரும்பிப் பார்க்காமல் வண்டியேறித் தென்காசி போய் விட்டான். அப்போது சீசன் சமயம். அங்கே காற்று வாங்கவும் ஸ்நானமாகக் குளிக்கவும் போய்விட்டான். அவன் அருவியைக் காணச் சென்றான்; அவள் கண்ணீர் அருவியுடன் அவன் வீட்டுக்குள் வந்தபோது, நடையேற்ற மறுத்தான். அவள் கெஞ்சினாள்.

''அத்தான்! விடுதலை வாங்கிக்கொடுத்த எனக்கு இதுவா பரிசு?''

''அன்றைக்கு, ஆறு மாதங்களுக்கு முன்னால் பிடிபட்ட நாயைப்போல் கெஞ்சினேன்; சட்டமென்றார், நீதி யென்றார் உன் தந்தை.''

''அது, அவர்கள் கடமை.''


''இது என்னுடைய கடமை'' என்றவன் காலால் எட்டி உதைத்தான். அவள் அப்போதும் கோபங்கொள்ளாது காலைத் தொட்டுக் கண்ணீர் விட்டாள். இருக்க இடம் கேட்டாள். இரும்புக் கரத்தால் பிடித்துத் தள்ளினான் இதயமற்றவன்.

''இது என் கடமை. ஓடிப் போய்விடு. என் உயிருள்ள அளவும் நீ உன் தகப்பன் வீட்டில் இருந்து அழுதழுது கண்ணீர் வடிப்பதை அந்த நீதிமான் இன்ஸ்பெக்டர் அவர்கள் கண்ணாரக் கண்டு, காதாரக் கேட்டுப் புழுப்போல் புலம்பித் துடிக்க வேண்டும்.''

''என் அப்பா, உங்கள் விடுதலைக்காகப் பணம் செலவு செய்தார்கள். அவர்கள் கடமையைச் செய்தவர்கள்.''

''பணம்தான் உன்னையும் செலவழித்து விட்டது. நான் ஆறுமாத காலம் பட்ட அவஸ்தைகளை உன்னைப் பெற்ற மகராசன் அறுபது ஆண்டுகள் படவேண்டாமா? பழிக்குப் பழி. நான் யார் அவரைப்போல் அதிகாரியா? அவரைவிட அதிகாரி என்பதை இப்பொழுது உணர்த்துகிறேன். ஓடட்டும்.''





சிறிதளவு *டினோபால்
வெள்ளைத் துணிகளை
அதிவெண்மையாக்குகிறது
TINOPAL BVN
* டினோபால், ஜே. ஆர். கெய்கி. எஸ். ஏ. பாஸல். ஸ்விட்ஸர்லாந்து. அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்
தயாரிப்பவர்கள்: ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட். வாடி. வாடி. பரோடா
ஏக விநியோகஸ்தர்கள்: ஸுஹ்ருட் கெய்கி டிரேடிங் பிரைவேட் லிமிடெட், பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்-1

காலம் தனக்குத் துணை நிற்குமென்று நம்பித் தந்தை வீட்டுக்கு, அம்பாசமுத்திரம் வந்தாள். அங்கேயும் புயல் வீசியது. இன்ஸ்பெக்டர் கொதித்துக் கொண்டிருந்தார்.

"அவனுக்கு விடுதலை வாங்கித் தந்தாய். வினை இப்பொழுது தென்காசிக்கு வரக் கூடாது என்று விரட்டிவிட்டான். இனியாவது அவனை மறந்துவிட்டு, இங்கேயே இரு. உனக்குத் திருமணமே ஆகவில்லையென்று எண்ணிக் கொள்ளுகிறேன்."

"அப்பா! அவர் மனம் மாறும். நான் என்றாவது அவரோடு போய் வாழ்வேன்."

"இன்னும் ஆறு மாதங்களுக்குள் அவன் உன்னை அழைத்துப் போகவேண்டும். அல்லது நீ அவனை மறக்க வேண்டும்."

"மறக்க முடியுமா, அப்பா!"

"சோறும் துணியும் வேண்டும் என்றால் மறக்கத் துணிவும் வேண்டும், ஆறு மாதங்கள் கெடு தருகிறேன்."

ஆறு மாதங்களிலும், அவள் மாதாமாதம் குற்றாலநாதன் வீடு தேடித் தென்காசிக்குப் போவாள். குற்றாலத்தில் பச்சையும் பசுமையும் வந்தன; அருவி சோவெனக் கொட்டியது. ஏன் அவளுடைய கண்களிலும் கூடத்தான் கொட்டியது.

அன்று அவள் அதேமாதிரிப் போய் வந்த பொழுது. "இந்தக் கடிதத்தைப் பார்!" என்று ஒரு கடிதத்தை நீட்டினார் தந்தை.

கணவன் கையெழுத்தைப் பார்த்தாள். படித்தாள் :—'போலீஸ் புலியாரே! உமது மகளின் வாழ்க்கை பாலைவனம் ஆக வேண்டுமா? அவள் கண்ணீரில் நீர் கரைய வேண்டுமா? உம்மை, உமது மனத்தைத் தண்டிக்கும் ஒரே வழி அவள் உம்முடைய வீட்டில் இருப்பதுதான்!'

அவர் இரத்தம் கொதிப்பேறி நின்றது. ஆத்திரமும் ஆவேசமும் மோதிக் கண்கள் கனலை கனிக் கொண்டிருந்தன.

"உம் என்று சொல். அந்தப் பயல் கையில் விலங்கை மாட்டிச் சிறைக்குள் என்றும் தள்ளி வைக்க முடியும்."

"அவரை உள்ளே தள்ள முயற்சி செய்தால் எனக்கு மீட்டுத்தரத் தெம்பு உண்டு."

"அப்படியானால் அடுத்த வேளைச் சோற்றுக்கு அந்தத் துணிவைப் பயன் படுத்திக் கொள்" என்றார் அவர் கோபத்தோடு.

"அம்மா!" என்று அலறினாள். அம்மாவா வீட்டுக்குள் இருந்தாள்? சிறிய தாயார் அல்லவா இருந்தாள்!

ருத்திரமூர்த்தியானார் தந்தை. "வீட்டுக்குள் வரவேண்டுமா? நான், பெற்றபிள்ளை என்று பெயர் வாங்க வேண்டுமா? கோர்ட்டிலே ஜீவனாம்சம் கோரி வழக்குத் தொடுக்க வேண்டும். வக்கீல் வீட்டுக்குப் புறப்படு."

"முடியாது, அப்பா!"

"யோசனை செய்துவிட்டுப் பேசு."

"அதைவிட... ரயில்பாலத்தின்மீது கொண்டு நிறுத்தித் தள்ளிவிடுங்கள்."

"அதை நீயே செய்துகொள். என் பேச்சைக் கேட்டே ஆகவேண்டும்."

"நான் கணவனுக்கு எதிரியில்லை: பிச்சைக் காரியாகவும் வாழமாட்டேன்."

"நானும் தர்மதாதாவில்லை. உன்போன்ற கொள்ளிக் கட்டையைக் கொண்டு தலையைச் சொறிந்து கொள்ளும் முட்டாளும் இல்லை."

"அப்பா! நான் எங்கே போவது?"

"இப்பொழுதே வக்கீல் வீட்டுக்குப் போவோம், வருகிறாயா?"

"முடியாது."

கதவைப் படீரென்று சாத்தினார் அவர். இதயக் கதவும் அடைத்துக் கொண்டது. வீட்டுக்குள்ளிருந்து இரண்டாந்தாரத்தின் இளநகையொலி கலகலத்தது. அவள் காதிலே அமிர்ததாரையாக விழுந்தது: அவள் காதில் விழுந்ததோ இல்லையோ; அவள் சிந்துபூந்துறை நோக்கி, நீதிபதியின் சோலைவனத் துள்ளே புகுந்து ஒரு குரல் கொடுக்க எண்ணி, ரயில் நிலையம் அடைந்தாள்.

மழைத்துளிகள் விழுந்து சோலைவனத்துச் செடிகொடிகள் பசுமையாக இருந்தன. அங்கே குளுமை சற்று அதிகமாக இருந்தது.

நீதிபதியின் காதில் அங்கொரு கோடும், இங்கொரு பொட்டுமாகப் போட்டு வைத்தாள். "அப்பாவுக்கு என்மீது கோபம்; அவருக்கு என்மீது வருத்தம். நான் சில தினங்கள் தங்குவதற்கு இடந்தர வேண்டும். தங்களைத் தவிர்த்து நான் எங்கே போவேன்?"

"சமுத்திரமும் அருவியும் தள்ளிவிட்ட பிறகு...நான் என்ன செய்கிறது? நீதிக்கும் நியாயத்துக்கும் முயற்சி செய்கிறேன்."

அவரது சொல்லாட்சியும், வழக்காடும் திறமையும் சேர்ந்து தென்காசிக் குற்றாலநாதன் விலாசத்துக்கு ஒரு கடித வடிவிலே போய்ச் சேர்ந்தது. மற்றொரு கடிதம் சம்பிரதாயம் பண்பாடு என்பதைச் சாற்றிக் கொண்டு அம்பாசமுத்திரம் போய் நின்றது. இருவர்களும் வருவார்கள் என்று நீதிபதி எதிர்பார்த்தார்; ஏமாந்தார்.

தந்தை எழுதிய கடிதத்தின் சாராம்சம்: காந்திமதிக்கு ஜீவனாம்சம் கோரி தாவாத் தொடரும் எண்ணம் இருந்தால் தந்தி கொடுங்கள், அழைத்துப் போகிறேன். இல்லாவிட்டால் அவரை என் மனம் செத்துச் சுண்ணாம்பு ஆகிவிட்டது.

கணவன் எழுதியிருந்தான்: ஜீவனாம்சம் எத்தனை ஆண்டு காலத்துக்கும் கொடுத்துத் தொலைக்கிறேன்; அவள் தந்தை என்றைக்கு இறந்தாரோ அடுத்தநாடி அவளாகவே வரலாம்; நானே மேளதாளத்துடன் அவளை வரவேற்பேன்.

முதலையும் மூர்க்கனும் மோதிக் கொண்ட இடத்திலே சிறு மீனைப்போல் அவள் தத்தளித்தாள்.

"காந்திமதி! நான் நீதியும் நியாயமும் தருவதற்காக முயன்றேன். உன் கணவனை அன்றைக்குப் பிறரைப் போல் பன்னிரண்டு ஆண்டுகள் தண்டித்திருந்தால் என் மனச்சாட்சி இத்தனை துயரம் அடைந்திருக்காது. அவனுக்கு இனி என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ, அதைக் கொடுப்பேன். அது தான் நியாயம்."

"என்ன சொல்லுகிறீர்கள்?" அவள் கேள்வியிலே அதிகாரம் மிளிர்ந்தது.

"உனக்கு ஜீவனாம்சம் தரவேண்டுவது நியாயம். நானே வழக்குத் தொடுக்க வக்கீலுக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"எனக்கு நீதி ஸ்தலம் உங்கள் கோர்ட்டு இல்லை. என் இதயமே என் நீதிஸ்தலம்."

"அவன் அயோக்கியன். உன்னையும் உன் தகப்பனாரையும் இவ்வாறு பழிவாங்குவது மிகத் தவறு."

"என் தந்தைதான் முட்டாள் என்று எண்ணினேன். அவரும் நீங்களும் மனித சக்தியை வளர்க்க நம்புகிறீர்கள்; எனக்கு மனித உணர்ச்சிமீது நம்பிக்கை. ஏழு ஜன்மம் எடுத்தாலும் நான் ஜீவனம்சம் பெற விரும்பேன். அந்த புத்தியை, வழக்குத் தொடுக்கும் எண்ணத்தை எனக்குச் சொல்லாதீர்கள். நான் இறந்தால் எல்லோருக்கும் நிம்மதி பிறக்கும்" என்று கொதித்தாள் காந்திமதி.

'என் தந்தை முட்டாள்; நீருமா முட்டாள்?' என்ற கேள்வி அவள் கண்ணிலே தெரிந்தது. நீதிபதியின் மனமோ அடுத்த தெருவுக்குள் கால் வைத்துவிட்ட புதுநாயைப்போல் ஒண்டி ஒடுங்கிவிட்டது. அன்பினில் விளைந்த ஆரமுதைக் கண்டார்.

"இதற்கு முன்னால் உனக்கு எவ்விதமான உதவியும் நான் செய்யவில்லை. இனிமேல் உன்னை எதுவும் கேட்கவும் மாட்டேன். இனிமேல் நீ இங்கே இருப்பதில் எவ்விதமான வாதமும் கிடையாது."

• • •

ஆறு மாதங்கள் ஓடின. அவர் கோடை விடுமுறைக்குக் குற்றாலம் போவது வழக்கம். அவருடன் வசிக்கும் காந்திமதிக்குக் குற்றாலம் என்றால் புயலாகுமே என்பதற்காகக் கோடைக் கானல் செல்லத் தீர்மானித்தார். ஏதோ ஒரு வழக்கின் நிமித்தம் கொக்கிரகுளம் கோர்ட்டுக்கு வந்த இன்ஸ்பெக்டர் கோமதி நாயகத்தைக் கண்டு கோபம் கொண்டார்.

"நீங்கள் கிராதகன்; பெற்ற பாசம் வேண்டாமா?"

"காந்திமதி என்ற பெண் இருப்பதை மறந்து விட்டேன்!"

"அவள் தங்களை மறக்கவில்லை; எப்படி இருந்தாலும்..."


"தென்காசி அயோக்கியன் குற்றாலநாதன் காலில் விழுந்து கெஞ்சச்சொல்லுகிறீர்களா?"

"பெண்பாவம் பொல்லாதது. அவள் தாய் இருந்தால் இதைச் செய்திருப்பீர்கள். ஆமாம், செய்யும்படி வற்புறுத்தப் பட்டிருப்பீர்கள். நான் இப்பொழுது செய்யச் சொல்வது ஒன்றும் பெரியதல்ல. அவள் உள்ளம் வாழ வழிகாட்டுங்கள்."

"நான் கடமையைச் செய்தேன். நீதியும் நியாயமும் எனக்கு வேண்டாம். நீங்கள் போகலாம்!" என்றவர் திரும்பிப் பார்க்காமல் போய்விட்டார். அளவுக்கு அதிகமாக உரிமை கொண்டாடி மனத்தைப் புண்படுத்தி விட்டோமே யென்று நீதிபதி சற்று வருத்தம் அடைந்தார். இந்த விவரத்தைக் காந்திமதியிடம் சொல்லவில்லை; அடிக்கடி குற்றால நாதனுக்குக் கடிதம் எழுதி அவன் மனதைத் தங்கக்கம்பியாக்கி வருவதையும் அவர் சொல்லவில்லை.

கோடைக்கானல் பங்களாவுக்கு வந்து ஒரு வாரம் சென்றது. தந்தியொன்று வந்தது. தென்காசி — உடனே வந்து காந்திமதியை அழைத்துப் போகிறேன்.—குற்றாலநாதன். வானவீதியில் பறக்கத் தொடங்கினாள் காந்திமதி. இன்பக்கோட்டைகள் பல எழுப்பிக் கொண்டிருந்தவேளையில் தபால் ஒன்று சிந்து பூந்துறைபோய்க் கோடைக்கானலுக்கு வந்தது. "மகளே, அன்றைக்கும் வழக்காடப் பணம்தந்து கடமையைச் செய்தேன். இன்றும் கடமையைச் செய்கிறேன். உன்கணவனுடன் மகிழ்வோடு வாழ்ந்துகொண்டிரு. உன்சிறிய தாயாரையும் சற்றுக் கவனித்துக்கொள். —உனதன்புள்ள தந்தை கோமதிநாயகம்."

புரியாமல் அவள் திகைத்தாள். ஆனால் அன்றைய தினப்பதிப்புக்கள் அனைத்தும் கொட்டை எழுத்துக்களில் அம்பாசமுத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தற்கொலை பற்றி எழுதியிருந்தன.



ப்ரூக் பாண்ட் தேயிலை



தேயிலைகளுக்குள்ளே தலை சிறந்தது

ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்.



மன்னிப்பு

கோமதி சுவாமிநாதன்

"அண்ணாச்சி! சேதியைக் கேட்டீகளா? நம்ப கருங்குளத் தாச்சி மகன் வீரபாகுப் பயல் ஜெயிலிலிருந்து விடுதலையாகி வந்துட்டானாமில்ல!" என்று சொல்லிக் கொண்டே காந்திமதிநாத பிள்ளை உள்ளே நுழைந்தார்.

"சவத்தை விட்டுத் தள்ளுங்க! பாழாய்ப் போன பயல் பேரைக் கேட்டாலே எனக்குப் பத்திக்கிட்டு வருது" என்று நிதானமாகச் சொல்லிக் கொண்டே கையிலிருந்த திருவாசகப் புத்தகத்தை மூடிய நம்பியா பிள்ளையின் முகத்தில் திடீரென்று மாறுதல் ஏற்பட்டது. அவர் இமைகள் படபடத்தன.

"ஏன் தம்பி! அதற்குள்ளேயும் அவன் எப்படி வெளியே வருவான்? அவன் உள்ளே போய் மூணு வருஷம் கூட ஆயிருக்காதே! கொக்கிரகுளம் கோர்ட்டார் அவனை ஏழு வருஷமில்ல உள்ளே தள்ள உத்தரவு போட்டது?" என்றார் நம்பியாபிள்ளை. அவர் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. குரல் படபடத்தது.

"பயல் யோக்கியமாகவும் நல்ல தனமாகவும் நடந்துக்கிட்டு இருப்பான்! நல்லவங்களை உள்ளே அடைச்சு வைக்கறதிலே சர்க்காருக்கு என்ன லாபம்? வெளியே அனுப்பிச்சிருப்பாங்க!......வீராபுரம் முதலியார்தான் சொன்னாரு. நான் அந்தப் பயலே இன்னும் பார்க்கலே!"

'சூதி! அவனாவது நல்ல தனமாக நடந்து கொள்றதா ... அப்படி இருந்தால் அவன் ஏன் தம்பி ஜெயிலுக்குப் போறான்?...சவத்துப் பயல் ஜெயில் கம்பியைப் பெயர்த்து விட்டுக் கூட வெளியே வந்திருப்பான். அவனாலே குடும்பத் கௌரவமே போச்சு!..." என்று நம்பியாபிள்ளை சீறினார்.

"அப்படியிருந்தால் அவன் தைரியமாக ஊருக்குள்ளே வந்து தலை நிமிர்ந்து நடப்பானா அண்ணாச்சி?...எங்கோ நாட்டுக் காட்டுக்கில்ல ஓடியிருப்பான்! ...எனக்கென்னவோ ஆரம்ப முதலே அவன் நிரபராதின்னு ஒரு நினைவு. விதி அவனை மாட்டி விட்டிருக்கு!...நான் வறேன் அண்ணாச்சி!" என்று கூறிக் கொண்டே காந்திமதிநாதபிள்ளை கிளம்பிவிட்டார்.

நம்பியாபிள்ளையின் இதயத்திலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. எழுந்து போய் ஜன்னல் கதவைத் திறந்து வைத்து அதன் வழியாக வான வெளியை வெகு நேரம் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். மேகமில்லாது நிர்மலமாக இருந்த அந்த வானவெளியில் அவர் உள்ளத்திரையிலே பதிந்திருந்த பல பழைய நிகழ்ச்சிகள் உயிர் பெற்று உருவம் பெற்றுத் திரைப்படம் போல் ஓடத் தொடங்கின.

பொருநையில் புது வெள்ளம் இரு கரைகளையும் அணைத்தவாறு ஓடிக் கொண்டிருந்தது. குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் உற்சாகத்துடன் ஸ்நானத்தில் ஈடுபட்டிருந்தார்கள். காலைப் பொழுதின் இன்பம் மனத்துக்கு இதமாக இருந்தது.

பரந்த நெற்றியில் தாராளமாக அள்ளிப் பூசப்பட்ட விபூதி குங்குமத்துடன் நம்பியா பிள்ளை பேராச்சி அம்மன் கோவிலை விட்டுக் கிளம்பிக் கரை ஓரமாக வடக்குத் திசையில் நடக்க ஆரம்பித்தார். அவர் உதடுகள் ஏதோ தோத்திரப் பாடலை முணுமுணுத்தாலும் அவர் நினைவுகள் வேறு எங்கோ அலைந்து திரிந்து கொண்டிருந்தன.

படித்துறைகளில் பார்வையைச் செலுத்திய வாறே நடந்து வந்தவர் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றார். கண்களைக் கசக்கிக் கொண்டார். கருங்குளத்து ஆச்சி மகன் வீரபாகு தான் மேல் படித்துறைக் கல்லில் அமர்ந்து வேட்டிக்குச் சோப்புப் போட்டுக் கொண்டிருந்தான். அவன் மாத்திரம் உட்கார்ந்திருந்தால் நம்பியா பிள்ளை ஒருநாளும் கவலைப் பட்டிருக்கப் போவதில்லை. அவனுக்கு நாலடி தூரத்தில் நங்கை மடவன்னமாகத் திகழும் சிவகாமியல்லவா இடுப்பளவு ஆழத்தில் நின்று கொண்டிருக்கிறாள்! முகத்தில் மஞ்சள் பூசி அலம்பிய பளபளப்புக் காலைக் கதிரவன் ஒளியில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. இதழ்களில்



அரும்பி நின்ற புன்னகையோ, வீரபாகுவின் பேச்சை அவள் ரசித்துக் கொண்டிருந்ததை எடுத்துக் காட்டியது. குற்றம் கண்டு பிடிக்கும் அளவுக்கு அவர்கள் தனிமையிலும் இல்லை. பக்கத்தில் யார் யாரோ ஸ்நானம் செய்து கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் வீரபாகுவுக்கும், சிவகாமிக்கும் இடையே யாருமில்லை! அந்தக் காலியிடம்தான் நம்பியாபிள்ளையின் இதயத்தில் திகைப்பையும் ஆத்திரத்தையும் நிரப்பின. சிவகாமி அவர் மகளா? அல்லது வீரபாகுதான் அவருக்கு வேண்டாதவனா? இரண்டுமில்லை! ஆனால் நம்பியாபிள்ளை கலவரமடைய நிறையக் காரணம் இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டே நடந்தார். சாலைத் தெருவிலுள்ள அவர் வீட்டு வாசற்படி ஏறும் வரை அவர்முக பாவம் மாறவே இல்லை.

காரணம், தமது மகன் அருணாசலத்துக்குக் கொழுத்த பணக்கார இடத்திலிருந்து பெண் கிடைக்க வேண்டுமென்பதே அவருடைய வாழ்க்கையின் லட்சியம்.

★

சண்முகம் பிள்ளை கொழும்பு நகரில் வியாபார ஸ்தாபனம் நிறுவி லட்சம் லட்சமாகச் சம்பாதித்தவர். அவர் மகள்தான் சிவகாமி. உள்ளூர்ப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு பாளையங்கோட்டைப் பெண்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கும் அவள் கோடை விடுமுறையின் போது ஊருக்குப் போகாமல் வண்ணாரப் பேட்டையிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தாள். அழகின் இலக்கணமாக விளங்கியதோடல்லாமல் ஒரு செல்வந்தரின் மகள் என்று தெரிந்ததும் நம்பியாபிள்ளை உஷாரானார். சீக்கிரமே அவருக்குத் தேவையான தகவல்கள் கிடைத்தன. ஆனால் சண்முகம் பிள்ளையை உடனடியாகச் சந்திக்க வாய்ப்புக் கிட்டவில்லை. அவர் வியாபார சம்பந்தமாக வெளியூர் போயிருந்தார்.

சிவகாமியின் உறவினர்கள் சாலைத் தெருவுக்கு அடுத்த கம்பராமாயணத் தெருவில் இருந்தார்கள். அவர்கள்வீட்டுக்கு இரண்டு வீடுகள் தள்ளித்தான் கருங்குளத்தாச்சி என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் கல்யாணி ஆச்சி தன் ஒரே மகன் வீரபாகுவுடன் இருந்தாள். வாலிபன் வீரபாகுவுக்குக் கோவாப்ரேடிவ் பாங்கியில் குமாஸ்தா வேலை. 'தங்கமான பையன்' என்று ஊர்க்காரர்களிடையே ஏகோபித்த அபிப்பிராயத்தை வெகுமானமாகப் பெற்றிருந்தான். அந்தக் காலத்திலே அவன் தந்தை மைனர் விளையாட்டு விளையாடிக் கடைசியாக எஞ்சியிருந்த பத்து மரக்கால் விதைப்பாட்டையும் நம்பியா பிள்ளைக்கு எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கிச் சூறையாடி இளம் மனைவியையும் இரண்டு வயது மகனையும் நாதியற்றவர்களாகவிட்டு விட்டுக் காலமானார். ஏழைமையில் உழன்றாலும் உழைப்பின் பலத்தினால் இட்டிலிக்கடை போட்டுக் கல்யாணி ஆச்சி தன் மகனை வளர்த்து உருவாக்கிப் படிக்கவைத்து உத்தியோகமும் கிடைக்கச் செய்தாள். கருங்குளத்து ஆச்சி போட்ட இட்டிலி என்றால் நாக்கைச் சொட்டைவிட்டுக்கூட நாலு விழுங்கும் வாடிக்கைக்காரர்கள் அந்த மூதாட்டி கடையை நிரந்தரமாக மூடியதும் வருத்தமடையவில்லை. அவள் மகன் முன்னுக்கு வந்து அதனால் அவள் பெற்ற மகிழ்ச்சியில் பங்கு கொண்டார்கள். வீரபாகுவுக்கு ஊரிலும் நல்ல பெயர்; உத்தியோகம் பார்க்குமிடத்திலும் நல்ல பெயர்.

சிவகாமி வந்து தங்கியிருக்கும் வீட்டுக்காரர்களுக்கும் கருங்குளத்தாச்சி கல்யாணி அம்மாளுக்கும் நெருங்கிய பழக்கம் உண்டு. தாயாரைத் தேட வந்த வீரபாகு ஒருநாள் எதிர்பாராத விதமாகச் சிவகாமியைச் சந்தித்தான். வீரபாகு சுபாவத்திலே மிகுந்த சங்கோஜி. எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்கவே கூசுபவன். "நீங்க யாரு?" என்று சிவகாமி கேட்ட கேள்விக்கு, "எங்க அம்மாவைத் தேடிக்கிட்டு வந்தேன்" என்று அவன் பதில் சொல்வதற்குத் திணறிப் போனான்.

சிவகாமிக்கு என்னவோ அவனுடைய சுபாவத்திலிருந்த மென்மையும் பெண்மையும் பிடித்துப் போயிற்று. ஆண்வர்க்கமே பெண்களை முறைத்துப் பார்க்கும் கூட்டம் என்று அவள் மனத்தில் பதிந்திருந்த எண்ணத்தை வீரபாகுவின் போக்கு அசைத்து விட்டது. அந்த அசைவின் காரணமாகத் தன்னை அறியாமலேயே அவன் இதயத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டாள். சிவகாமியும் கல்யாணி ஆச்சி வீட்டுக்கு வந்து போகத் தொடங்கினாள். வீரபாகு வீட்டில் இருக்கும் நேர



மாகவே வந்து போனான். தங்கள் இருவர் நிலைக்கும் இடையே இருக்கும் அந்தஸ்து தெரிந்து வீரபாகு தன் மனத்தில் ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல் பழகி வந்தான். சிவகாமியோ மறைமுகமாகத் தன் காதல் உணர்ச்சியை வளர்த்தே பழகினாள். சண்முகம் பிள்ளை தன் பேச்சைத் தட்டவே மாட்டார் என்ற தைரியம் அவளுக்கு.

இந்த விவகாரங்கள் எல்லாம் நம்பியா பிள்ளைக்குத் தெரியாது. சிவகாமியைப் பார்த்து அவளைப் பற்றித் தெரிந்து கொண்டவுடனேயே அவளைத் தமது மருமகளாக்கிக் கொள்ளத் திட்டமிட்ட அவருக்கு ஆற்றங்கரைப் படித்துறையில் வீரபாகுவும் சிவகாமியும் சிரித்துப் பேசியதைக் கண்டுவிட்ட பின் காலம் தாழ்த்துவது சரியில்லை என்று பட்டது. பஞ்சுப் பொதியும் தீப்பொறியும் இணைந்து விடுமோ என்ற ஐயம்தான் காரணம். எனவே, உடனடியாக அதைத் தவிர்க்க இரண்டு வழிகளைக் கையாண்டார்.

★

வீரவநல்லூர் சண்முகம் பிள்ளை பிடி கொடுத்தே பேசவில்லை. "அண்ணாச்சி! உங்க சம்பந்தம் கிடைப்பதிலே எனக்கு எவ்வளவோ சந்தோஷம். ஆனால் சிவகாமி இந்தக் காலத்துப் பொண்ணு. நாலு எழுத்து படிச்ச பொண்ணுகூட! அவள் என்னவோ இன்னும் இரண்டு வருஷம் போகட்டும் என்கிறாள். விட்டுப் பிடிக்கலாம்னுதான் பார்க்கிறேன்! நீங்க என்ன சொல்லுறீங்க!" என்றார் நிதானமாக.

நம்பியாபிள்ளை அவரைப் பார்க்க வரப் போகிறார் என்ற செய்தியுடன்கூட அருணாசலத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களும் அவரை எட்டிவிட்டிருந்தபடியால் முன் ஜாக்கிரதையாகவே பேசினார். அத்துடன் நிறுத்தி யிருந்தால் கூட நம்பியாபிள்ளை சகித்துக்கொண்டிருப்பார். ஆனால் சண்முகம்பிள்ளை தொடர்ந்து தணிந்த குரலில், "ஒரு சாதாரண ஏழைப் பையன் மாப்பிள்ளையாக வந்தால்கூடப் போதுமென்றுதான் பார்க்கிறேன். கூடவே வச்சுக்கிட்டு வியாபாரத்திலே பழக்கி விடலாம்னு ஒரு ஆசை......நீங்க நம்ப இலஞ்சி சங்கரமூர்த்தி மகளைப் பார்க்கலாமே" என்றார். நம்பியாபிள்ளை ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு விடைபெற்றுக் கிளம்பினார். சிவகாமி ஏற்கனவே அந்தப் பொடியன் வீரபாகுவைப் பற்றித் தன் அப்பனிடம் சொல்லியிருக்கிறாள் என்ற எண்ணமும் அவர் மனத்தில் உருவாகிவிட்டது.

மறுநாளைக்கு மறுநாள் காலை நம்பியா பிள்ளை தனது வீட்டு மட்டப்பாத்தித் திண்ணையில் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார். எதிர்த்தாற்போல் தூணைப் பிடித்துக்கொண்டு வீரபாகு நின்று கொண்டிருந்தான். கல்யாணி ஆச்சி வராந்தாவில் மறைவாக நம்பியா பிள்ளையின் பார்வை படாமல் மரியாதையாக நின்று கொண்டிருந்தாள்.

"வரச்சொன்னீங்களாமே, மாமா! என்ன விசேஷம்?" என்றான் வீரபாகு.

"என்னவே! வீரபாகுப் பிள்ளை! சுகம் தானா?" என்று ஆரம்பித்தார் நம்பியாபிள்ளை அழுத்தலாக. என்றுமில்லாத திருநாளாக இன்று நம்பியாபிள்ளை கொடுத்த திடீர் மரியாதை வீரபாகுவைத் திகைக்க வைத்தது.

"என்ன மாமா! என்னைப் பெரிய மனுஷன் கணக்கா வச்சுப்பேசறீங்க. உங்களுக்கு நான் எப்போதும் சாதாரண வீரபாகுதான் மாமா!" என்றான் வீரபாகு திகைப்பைச் சமாளித்துக் கொண்டு.

"சரிதான்வே! கல்யாணம் கட்டிக்கப் போறே! இனிமே நீ பெரிய மனுஷன்தானே?" நம்பியாபிள்ளை ஓரக் கண்ணால் வீரபாகுவைப் பார்த்தார்.

"கல்யாணமா? எனக்கா......யாரு சொன்னாங்க, மாமா? உங்களுக்குத் தெரியாமல் என் கல்யாணம் நிச்சயமாயிடுமா. என்ன?" வீரபாகு விவரம் தெரியாமல் விழித்தான்.

நம்பியா பிள்ளைக்கு மனத்திலே கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது. அவன் தன் மனநிலையை மறைக்கவோ, நாணப்படவோ முற்படவில்லையே! அவர் குரலும் மாறியது.

"வீரபாகு! அது விஷயமாகத்தான் உன் அம்மாவையும் உன்னையும் வரச்சொன்னேன். ஏருவாடி கந்தப்ப அண்ணாச்சியை நேத்து சாலைக் குமரன் கோவிலிலே வைச்சுப் பார்த்தேன். அவர் தம்பிக்கு ஒரு மகள் இருக்குதாம் கல்யாணத்துக்கு. மஞ்சக்காணி

யாக ஆறு மரக்கால் விதைப்பாடும் எழுதி வைக்க இருபது பவுனுக்கு நகையும் போடறுங்களாம். எனக்கு உன் நினைவுதான் உடனே வந்தது. 'முகூர்த்தம் குறிச்சு அனுப்புங்க. ராஜாமாதிரியான பையன் நம்பகிட்டே இருக்கான்'னு சொல்லிட்டு வந்துட்டேன்! உங்க அம்மாவுக்கும் வயசாச்சல்ல.'' நம்பியா பிள்ளை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினார்.

தன் தாயாரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை வீரபாகு கவனித்தான். நம்பியா பிள்ளை பேச்சில் மறைந்திருந்த ஏதோ ஒரு பயங்கர உண்மைதான் அந்த மாறுதலுக்குக் காரணம் என்று அவன் ஊகிக்கத் தவறவில்லை.

''மாமா! எனக்குக் கல்யாணத்துக்கு இப்போது அவசரமில்லேங்க! இன்னும் இரண்டு வருஷம் போகட்டும். அருணாசல அண்ணனுக்கு முதலிலே நடக்க வேண்டாமா?'' வீரபாகு இதமாகத்தான் பேசினான். ஆனால் நம்பியா பிள்ளையின் முகம் கோபத்தால் சிவந்தது. சண்முகம் பிள்ளை தமது மகளின் கல்யாணத்துக்காகச் சொன்ன காலக்கெடுவும் இன்று வீரபாகு சொன்ன காலக்கெடுவும் ஒன்றாக இருக்கவே நம்பியா பிள்ளையின் நினைப்பில், முன்கூட்டியே அவர்களிடையே ஏதோ ஒப்பந்தம் நடந்திருக்கிறது என்ற எண்ணம் எழுந்தது. அதைத் தொடர்ந்து அடக்க முடியாத ஆத்திரமும் அவருக்கு எழுந்தது.

''சவத்துப் பயலே! உனக்கு எத்தனை திமிர்? ஒரு பெரியமனுஷன் சொல்லுகிறேன்! அதைத் தட்டிப்பேச உனக்கு அத்தனை திமிரா?'' என்று உரத்த குரலில் கூப்பாடு போட ஆரம்பித்தார். தெருவிலே போகிறவர்கள் வருகிறவர்கள் நின்று பார்க்க ஆரம்பித்தார்கள். கல்யாணி ஆச்சிக்கு அவமானமாக இருந்தது. கரகரவென்று வீரபாகுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தெருவில் நடந்தாள். போகும் வழியில்தான் ஏருவாடிப் பெண்ணுக்குப் பைத்தியம் என்ற உண்மையைச் சொன்னாள். நம்பியா பிள்ளையின் நோக்கம் அந்த அப்பாவிகளுக்குப் புரியவில்லை!

தாயும் மகனும் தம்மை மதியாமல் போனது அவருக்கு மேலும் ஆத்திரத்தை உண்டாக்கியது. கிராம முனிசிப் முதலியார் அந்தப் பக்கமாகச் சைக்கிளில் வந்தவர் இறங்கி வந்து விசாரித்தார். நம்பியா பிள்ளைக்கு நடந்ததைச் சொல்ல விருப்பமில்லே. 'இவருக்கென்ன அத்தனை அக்கறை?' என்று யாரும் கேட்கலாமல்லவா? அதற்காக தன் தொழில் துறையை அந்தச் சம்பவத்தில் பிணைந்து ''ஒண்ணுமில்லீங்க! கொஞ்சம் கைமாத்து நோட்டு கிட்டு எழுதாமல் வாங்கிட்டுப் போயிருந்தான். கேட்டால் கோபம் வருகிறது'' என்று சொல்லிவைத்தார். கிராம முனிசிப் முதலியார் அந்தச் செய்தியைச் சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்த விறகுக்கடை நாடாரிடம் சொல்லிவிட்டுப் போனார்.

நம்பியா பிள்ளை தாம் சொன்ன அற்பப் பொய், மறு வாரத்தில் தனக்கு எத்தகைய உதவிசெய்ய விருக்கிறது என்று கொஞ்சம் கூட அப்போது நினைத்துப் பார்த்தவில்லை!

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு சிவகாமி வீரவநல்லூருக்குப் புறப்பட்டு விட்டாள். யதேச்சையாக அவளுக்குத் துணை கிடைத்தது. பாங்கு விஷயமாக அம்பாசமுத்திரம் வரை போய் மறுநாள் திரும்பவேண்டிய வீரபாகு அவளை வீரவநல்லூரில் விட்டுப் போக முன்வந்தான். இருவரும் ரயிலில் ஒரே பெட்டியில் அமர்ந்திருந்ததை அருணாசலம் பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டான். தந்தையிடமும் வந்து சொன்னான். நம்பியா பிள்ளை பெருமூச்சு விடவில்லை; சீறினார் நாகப்பாம்பாக!

மேலும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அமாவாசை சமயம். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு வீரபாகு வழக்கம்போல் தன் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். நல்ல தூக்கம். திடீரென்று ''நெருப்பு! நெருப்பு!'' என்று யாரோ அவன் காதருகில் இரைந்து விட்டு ஓடினார்கள். வீரபாகுவும் வாரிச் சுருட்டிக் கொண்டு அவன் பின் ஓடினான்.

நம்பியா பிள்ளை வீட்டு மாட்டுக் கொட்டிலும் வைக்கோற்போரும் பற்றிக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன. வீரபாகு வாய் 'நெருப்பு நெருப்பு' என்று அலறத்தான் முடிந்ததே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. உதவிக்கு ஆட்களும் சேரவில்லே. யாரையாவது கூப்பிடலாமென்று குறுக்குச் சந்துவழியாக ஓட ஆரம்பித்தான். நான்கு இரும்புக் கரங்கள் அவனைத் தடுத்து நிறுத்திப் பிடித்தன.

இரண்டு மணி நேரத்தில் இருநூறு ரூபாய் நஷ்டத்துடன் நெருப்பு அணைக்கப்பட்டு விட்டது. ஆனால் அதே நேரத்தில் நம்பியா பிள்ளை திண்ணமாக வீரபாகுவின் மேல் நெருப்பு வைத்ததாகக் குற்றம் சாட்டினார். சுற்றியிருந்தோர் நம்பினார்கள். முதல் வாரம் நம்பியா பிள்ளை வீட்டு வாசலில் நடந்த வாக்குவாதத்தின் விளைவாக இருக்கும் என்று கிராம முனிசிப் முதலியார் நினைத்தார். அதை நம்பியா பிள்ளை ஊர்ஜிதம் செய்தார். பெரிய மனிதர் அபிப்பிராயத்தை யாரும் மறுக்க முன் வரவில்லே. அன்றைய இரவின் எஞ்சிய நேரத்தை வீரபாகு பாளையங்கோட்டை போலீஸ் லாக்கப்பில் கழித்தான்.

கேஸ் விசாரணைக்கு வந்தது. நம்பியா பிள்ளை ஒற்றைக்காலில் நின்று திறமை மிக்க வக்கீலாக வைத்துக் கேசை நடத்தினார். அவருடைய செல்வாக்குக்குப் பயந்து யாரும் வீரபாகுவுக்கு ஜாமீன் கொடுக்கவோ வழக்காட உதவி செய்யவோ முன்வரவில்லே. மகனுக்குக் கிடைத்த அவப்பெயர் கல்யாணி அம்மாளை அதிக அதிர்ச்சிக்குள்ளாக்கி விசாரணை முடியு முன்பே இவ்வுலகிலிருந்து விடுதலை செய்து விட்டது. வீரபாகு சலனமில்லாமல், தான் நிரபராதி என்றும் தனக்குச் சாட்சிகளோ, எதிர் வழக்காட விருப்பமோ இல்லை என்றும் திட்டமாகச் சொல்லி விட்டான். விளைவு? தீவைத்துக் கொள்ளையடிக்க முயன்ற குற்றத்துக்காக ஏழு வருடம் சிறைத் தண்டனை வீரபாகுவுக்குக் கிடைத்தது. நம்பியா பிள்ளையின் வெறிக்கு வெற்றி! அவர் கொண்டுவந்த சாட்சிகளுக்கு வெற்றி! வீரபாகு மதுரை மத்திய சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தான். தம் வழியிலிருந்த மகத்தான முட்டுக் கட்டையை ஒழித்துக் கட்டியாயிற்று என்று அவர் மகிழ்ச்சியடைந்தார்.



Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor T Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



உங்களுக்கும் – சினிமா நட்சத்திரங்களின் சொக்குமெழில் மேனி!

பத்தரை மாற்று மேனியெழிலே பெண்மைக்கழகு! அழகிற் சிறந்த ஜமுனா கூறுகிறார்: "எனது மேனியழகுக்காக நான் உபயோகிப்பது மணங்கமழும் லக்ஸ் டாய்லெட் சோப். மென்மையும் செழிப்பும் வாய்ந்த அதன் நுரையை நான் பெரிதும் விரும்புகிறேன். அதுவே சருமத்துக்கு மிக நல்ல சோப்." லக்ஸ் சோப் உங்கள் அழகுசாதனமாகவும் விளங்கட்டும்.

தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS/13-50 TM